www.padippakam.com

# தீமைக்காற்று

வெல்லும்



"நமது இயக்கம் சீர்திருத்த இயக்கம் அல்ல.
நாம் பொது நலச் சேவைக்காரர்கள் அல்ல.
புரட்சியாளர்கள். நமக்குச் சீர்திருத்தக்காரர்களும்
பொதுநல சேவைக்காரர்களும் பெரிய விரோதிகள்.
தலைகீழாய்க் கவிழ்ப்பதுதான் புரட்சி.
இது குற்றமானால் இதை ஒவ்வொருவரும்
குஷாலாகச் செய்யவேண்டியதுதான்"

– தந்தை பெரியார்

- 30.1.33 அன்று கோவை பொதுக்கூட்டத்தில்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com


# கீழைக்காற்று

வெளியீடு

காலாண்டிதழ்

இதழ் 3 செப்டம்பர் 2000

ஆசிரியர் :

எஸ்.என். நாகராசன்

உதவி ஆசிரியர் :

மு. குமரவேல்

தனிஇதழ் : ரூ.15/-

ஆண்டுக் கட்டணம் : ரூ.60/-


## தந்தை பெரியாரின் 122வது பிறந்த தினம் செப். 17, 2000

தமிழர்களின் நல்வாழ்விற்காக தனது இறுதி மூச்சுவரை உழைத்த தலைவர் தந்தை பெரியார். தமிழ்நாட்டின் விடுதலையை விரும்பியவர். பெரியாரை சாதி, மத எதிர்ப்பில் மட்டுமே குறுக்கிவிடுகிறவர்கள் பெரியாருக்கு எதிரானவர்கள். இவர்கள் பெரியாரைத் தங்களது வணிக நோக்கிற்காகப் பயன்படுத்துகின்றனர்.

இன்று பெரியார் இருந்திருப்பாரானால் இந்த வணிகர்களின் முகமூடிகளைக் கிழித்திருப்பார். தமிழ்நாட்டின் நலன்களை ஏகாதிபத்தியங்களுக்கு விட்டுக்கொடுக்கும் செயல்களுக்கு எதிராக உறுதியுடன் போராடுவார். உழவர்களின் பெண்களின், தாழ்த்தப்பட்டோரின் உரிமைகளுக்காக இறுதியில் தேச விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர். தந்தை பெரியாரின் இறுதிப்பேருரையை மேற்கொள் காட்டி தனது வாக்கு வங்கி அரசியலை சிலர் நியாயப்படுத்துகிறார்கள். "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கத்தை முழங்கி விடுதலைப்போராட்டத்தைத் தீவிரப்படுத்திய நிலையில் பெரியார் இறந்தார். பெரியாரின் அரசியல் வாரிசுகள் என்று கூறிக் கொள்கிற சிலரால் இன்று தமிழ்நாடு அனுபவித்துவரும் இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. எதையும் கேள்வி கேட்கக் கற்றுக்கொடுத்தவர் பெரியார். இன்று அவரையே வழிபாட்டுப் பொருளாக மாற்றியுள்ளனர். பெரியாரின் பெயரையும் புகழையும் இவர்கள் இனி விலை கூவி விற்றாலும் வியப்பில்லை. நமது இயக்கம் சீர்திருத்த இயக்கமல்ல. நாம் புரட்சிக்காரர்கள் என்றார் பெரியார். புரட்சி என்று தந்தை பெரியார் சொன்னதை வேறு வகையில் புரிந்து கொண்டு 'புரட்சி'யின் பின்னே வால் பிடித்துச் செல்கின்றனர். மக்கள் இவர்களை ஒதுக்கித் தள்ளப் போவது உறுதி. முகிழ்த்துவரும் தமிழ்த் தேசியத் தணலில் இவர்கள் அடையாளமிழந்து போகப்போவது உறுதி.



படிப்பகம்

www.padippakam.com

# விதைப் பஞ்சாயத்து - விதைத் தீர்ப்பாயம்

உலக மயமாக்கல் என்ற பெயரில் இந்தியாவின் வேளாண்மை உட்பட வாழ்வின் அனைத்துக் களங்களுக்குள்ளும் நெருக்கடி முற்றியுள்ள நிலையில் கடந்த 24.9.2000, 25.9.2000 ஆகிய இரு தினங்களில் பெங்களூர் காந்தி பவனில் விதைப் பஞ்சாயத்து நடத்தப்பட்டது. உலகறிந்த சூழலியல் அறிஞர் வந்தனாசிவா அவர்களின் முன் முயற்சியுடன் இந்தியா முழுவதிலும் 22க்கும் மேற்பட்ட சூழலியல் அமைப்புகள், விவசாயிகள் சங்கங்கள் இந்தப் பஞ்சாயத்தைக் கூட்டியிருந்தன. கர்நாடக விவசாயிகள் சங்கத் தலைவர் திரு.கே.எஸ். புட்டய்யா வரவேற்புரை நிகழ்த்தினார்.

விதைப் பஞ்சாயத்தின் தொலைநோக்கு பற்றி டாக்டர் வந்தனாசிவா உரையாற்றினார். பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டள்ள தேசிய வேளாண்கொள்கை பன்னாட்டு ஏகபோக, தனியார் கம்பெனிகளுக்கே வசதிகளைத் திறந்துவைக்கிறது. குறிப்பாக மான்சாண்டோ மற்றும் கார்கில் நிறுவனங்கள். விதைப் பஞ்சாயத்து, இந்திய சிறு விவசாயிகள் சந்திக்கும் இன்னல்களை உலகிற்கு உணர்த்தவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நூற்றுக் கணக்கான விவசாயிகள் நாடு முழுவதும் தற்கொலை செய்துள்ளனர். பலர் தமது சிறுநீரகங்களை விற்று கடனைச் செலுத்தியிருக்கின்றனர். இந்த அளவுக்கு நேரக்காரணம், விதைகளின் கட்டுக்கடங்கா விலை, இரசாயன உரங்கள், பூச்சி நஞ்சுகள், போலி விதைகள் போன்றவையே.

கார்கில் மற்றும் மான்சான்டோ விதைகள் உயர் விளைச்சலைத் தரும் என்கிற மோசடியை அம்பலப்படுத்த விதைப்பஞ்சாயத்து உதவும் என நம்புகிறோம். உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விவசாயிகள், மரபணுமாற்ற விதைகளின் கேடுகளை விளக்கி, தமது சொந்த அனுபவங்களையும் இங்கே பகிர்ந்துகொள்ள இருக்கின்றனர். கர்நாடகா இந்தப் பஞ்சாயத்தை நடத்த ஒப்புக்கொண்டது. ஏனெனில் இங்குதான் உயர் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பெரிய அளவில் மரபணு மாற்ற விதைகளை உற்பத்தி செய்யத் திட்டமிடுகின்றனர். ஏற்கெனவே உலகின் பல பகுதிகளில் மரபணு மாற்ற விதைகளால் பாதகமான சூழல் நேர்ந்துள்ளன. அங்கு சூழலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெருமளவில் விவசாயிகள் இயற்கை வேளாண்மைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். ஏறத்தாழ 30 விவசாயிகள் அமைப்புகள் இந்தியா முழுவதிலும் இருந்து இந்தப் பஞ்சாயத்தில் வாக்குமூலம் அளிக்க உள்ளனர். சில சர்வதேச ஆராய்ச்சியாளர்களும், முன்னோடிகளும் தமது நாட்டில் மரபணுமாற்ற விதைகளால் வந்த கேடுகளை இங்கே விளக்க இருக்கின்றனர்.

மூன்றாம் உலக நாடுகளின் உணவு உத்தரவாதத்தைக் கேள்விக்குள்ளாக்கும் விதமாக மரபணுமாற்ற உணவுகளான சோயா எண்ணெய், குளிர்பானங்கள், உருளைக்கிழங்கு, சிப்ஸ், பால், மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

காய்கறிகளான தக்காளி, உருளை, கத்தரி, முட்டைக்கோசு, போன்ற பொருட்களை மேற்கு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு புயல் பாதித்த ஒரிசா மக்களுக்கென உதவி என்கிற பெயரில் அமெரிக்காவினால் வழங்கப்பட்டவை அனைத்தும் மரபணுமாற்ற உணவுகளே மரபணுமாற்ற தொழில் நுட்பம் உணவுக்கு உத்தரவாதமளிக்கும் என்கிற போலியான தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மையில் அவை மரபு இரகங்களைவிடக் குறைவான விளைச்சலையே தரவல்லது. மரபு மாற்ற விதைகள் நம் நாட்டில் அறிமுகப்படுத்தப் படுமானால் இன்னும் ஏராளமான விவசாயிகள் தற்கொலை நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

உலகிற்கு உணவு வழங்கப்படுவதற்கு இந்தியா பாதுகாக்கப்படவேண்டும். இங்குள்ள பயிரினங்கள், விலங்கினங்கள் உட்பட அனைத்து உயிரினங்களும் காக்கப்பட வேண்டும். இங்குள்ள உயிரினப் பன்முகத்தை அழிக்க விதை நிறுவனங்களுடன் அரசு இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது.98 ஆம் ஆண்டிலேயே மரபணு மாற்ற பருத்தி பயிரிட ரகசிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அரசு சட்டத்தை மீறியுள்ளது. சென்ற ஆண்டு செப்டம்பரில் 150 ஹெக்டர் பரப்பில் இத்தகைய சோதனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது அரசு பயங்கரவாதம் இல்லையா? உண்மையான வீரப்பன்கள் மான்சான்டோவும், கார்கிலும் தானே? இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் வேளாண்மைத்துறையினரை விலைக்கு வாங்கியுள்ளனர். போலீசை விலைக்கு வாங்கியுள்ளனர். இறுதியில் அரசின் இறையாண்மை பறி போயுள்ளது.

நமது நாட்டின் உயிரினப் பன்முகம் காக்கப்பட வேண்டும். அடுத்ததாக நமது மக்களின் அறிவுச் செல்வம் அழியாமல் காக்கப்பட வேண்டும். மூன்றாவதாக குடிநாயக நடைமுறைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இவை எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டுள்ள நிலையையே இன்று பார்க்கிறோம்".

*வந்தனா சிவா அவர்களின் உரைக்குப் பின்னர் விவசாயிகளின் வாக்குமூலம் தொடங்கியது. தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் உறவினர்கள் நடந்ததை விவரித்த போது அரங்கம் முழுவதும் அதிர்ச்சியில் உறைந்தது. ஆந்திர, பஞ்சாப், ஒரிசா விவசாயிகளின் வாக்குமூலங்கள் அதிர்ச்சியளித்தன.*

வரங்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சுதாகர் வாக்குமூலம் அளித்தார். தனது சகோதரர் கடன் தொல்லையால் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறினார். அவர் 3 ஏக்கர் பருத்தி பயிரிட்டு ரூ. 70,000 கடன்பட்டார். திருமண வயதில் மூன்று பெண் பிள்ளைகள் இருந்தன. ஆண்டுக்கு 36% வட்டி. கிருஷ்ணப்பா ரெட்டி - இவர் கடன் சுமையைப் போக்க தனது சிறுநீரகத்தை விற்றவர்.

மகேந்திரன் வரங்கல் மாவட்டம் (ஆந்திரா) இவர் பருத்தி பயிரிட்டு கடன் பட்டவர். வர்தன் எக்ஸ்.எல்.35 என்பது விதையின் பெயர். இவரது சுற்று வட்டாரத்தில் மட்டும் 3500 ஏக்கரில் இந்த ரகத்தை பயிரிட்டு



படிப்பகம்

www.padippakam.com

ந. ' மடைந்திருக்கின்றனர். 750 கிராம் விதையின் விலை ரூ. 600.

**கோடிலிங்கப்பா** தூங்கபத்ரா மாவட்டம் : கார்கில் கம்பெனியின் சி-71 இரக பருத்தி விதையை வாங்கி விதைத்துள்ளார். 20 முதல் 25 குவிண்டால்/ஏக் விளையும் என்று விளம்பரம் செய்யப்பட்டது. இவரது பகுதியில் ஏறத்தாழ 3000 ஏக்கரில் விதைக்கப்பட்டது. இறுதியில் 1 முதல் 1½ குவிண்டால் தான் விளைந்துள்ளது. "நாங்கள் போராட்டத்தில் இறங்கினோம். தார்வார் பல்பலைக்கழகத்திலிருந்து ஆராய்ச்சியாளர்களை அனுப்பியது அரசு, கரீஃப் பருவத்தில் பயிரிட வேண்டியதை ராஃபி பருவத்தில் பயிரிட்டுவிட்டதாக அறிக்கை வந்தது. விதை வழங்கிய நிறுவனம் பேச்சு வார்த்தைக்கு வந்தது. ஏக்கருக்கு ரூ.3,000 இழப்பீடு வழங்குவதாக ஒப்புக்கொண்டது. சில விவசாயிகள் அதனையும் வாங்கிக்கொண்டனர். இன்னும் சிலர் ஏக்கருக்கு 15,000 ரூபாய் வேண்டுமென்று கோரினர். அதன்பிறகு இத்தகைய 28,000 கிலோ விதைகளை விவசாயிகளின் முன்னிலையிலேயே கார்கில் கம்பெனி அழித்தது". தற்கொலை செய்துகொண்ட தனது சகோதரனின் கதையை சுர்ஜித்சிங் (பஞ்சாப்) சொன்னார். 1994 ஆம் ஆண்டு நெல் பயிரிட்டு 3 இலட்சம் கடன்பட்டு அடைக்க வழியின்றி தற்கொலை செய்துகொண்டார்.

கர்நாடக மாநிலம் பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த பசவராஜா தனது சகோதரர் தற்கொலை செய்ததைப் பதிவு செய்தார். அவர் 4 ஏக்கர் நெல்லும் 4 ஏக்கர் மிளகாயும் பயிரிட்டுள்ளார். விளைச்சல் குறைந்தது. கடன் அதிகரித்தது உள்ளூர் வட்டிக் கடைக்காரரிடம் பணத்தைச் செலுத்த முடியாமல் தற்கொலை செய்துகொண்டார். 99 நவம்பரில் இது நடந்தது.

**வாசுதேவரெட்டி** : கார்கில் கம்பெனியின் 900MM மக்காச்சோளம் பயிரிட்டேன். 15000 ஏக்கரில் விவசாயிகள் பயிரிட்டனர். ஏக்கருக்கு 30 முதல் 40 குவிண்டால் விளையும் என்று விளம்பரம் செய்யப்பட்டது. 4 முதல் 5 குவிண்டாலுக்கு மேல் விளையவில்லை. 20 மாவட்டங்களில் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். அரசு எந்த உதவியும் செய்யவில்லை. மிளகாயில் இதேபோல் நட்டம் வந்தது.

*விவசாயிகள் தாம் விதைத்த விதைகளின் காலிப் பைகளை நடுவர்களிடம் அளித்தனர். சிலர் விதைக் கம்பெனிகளின் விளம்பரங்களையும், துண்டுப்பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் அளித்தனர். விவசாயிகள் பேசும்போது விதைக் கம்பெனிகளுக்கெதிராகவும், அரசுக்கெதிராகவும் கடுமையான வாதங்களை எடுத்து வைத்தனர். பேசப்பட்ட வாக்குமூலங்கள் உடனுக்குடன் ஆங்கிலத்திலும், இந்தியிலும், கன்னடத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது.*

*உணவு இடைவேளைக்குப் பிந்தைய அமர்வில் உலகமயமாக்கலின் விளைவுகளும், அதனால் விவசாயிகளுக்கு நேர்ந்த அவலங்களும் என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.*



படிப்பகம்

www.padippakam.com

*கிராமப்புறத் தற்கொலைகள் ஆந்திரா, கர்நாடகா மற்றும் பஞ்சாப் ஓர் ஒப்பீடு என்ற கட்டுரையை வாசித்தார், பஞ்சாப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. கோபால் அய்யர்.*

நான் எடுத்த விவரத் தொகுப்பின்படி ஆந்திராவில் 400 விவசாயிகளும், பஞ்சாபில் 400 விவசாயிகளும் கர்நாடகாவில் 160 விவசாயிகளும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். இந்தத் தற்கொலைகள் 90களின் தொடக்கத்தில் ஆரம்பித்து மத்தியில் வேகம் பெற்று 97,98களில் உச்ச கட்டத்தை எட்டியது. இந்தத் தற்கொலைகளுக்கு முக்கியக் காரணங்களாக அமைந்தது உலகமயமாக்கம். நிலம் வளம் இழந்தமை, அதிகப்படுத்தப்பட்ட இடுபொருட்கள், விதைகள் போன்றவையே பெரும்பாலான தற்கொலைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

பஞ்சாபைப் பொருத்தவரை 90% நிலங்கள் பாசன வசதி செய்யப்பட்டுள்ளன. அதன் காரணமாகவே பன்னாட்டு நிறுவனங்கள் எளிதில் சந்தையைப் பிடிக்க வசதியாக அமைந்துவிட்டது. கர்நாடகாவிலும் ஆந்திராவிலும் கணிசமான அளவு மானாவரி நிலங்களாக இருக்கின்றன. பஞ்சாப் தற்கொலைகளுக்கு அரசு எந்த வகை நிவாரண உதவியும் வழங்கவில்லை. ஆந்திர அரசு தொடக்கத்தில் ரூ. 1 இலட்சம் தந்தது. சேமிப்பு பத்திரங்களாக நிதிஉதவி அளிக்கப்பட்டது. இந்த ஆண்டு மட்டும் ஆந்திராவில் 15 சாவுகள் நடந்துள்ளன. இதற்கு அரசு நிதி உதவி செய்ய முடியாது என்று அறிவித்துவிட்டது.

பஞ்சாபில் 1984க்கு முன்பு வரை விவசாயிகள் சங்கங்கள் உயிர்ப்புடன் இருந்தன. தொடர்ந்த ராணுவ, போலீஸ் தாக்குதலால் அங்கு விவசாய அமைப்புகள் வலுவிழந்து போய்விட்டன. தற்போது பஞ்சாப் விவசாயிகள் போலீசைக் கண்டாலே பீதி ஏற்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். அந்த அளவுக்கு ஒடுக்கு முறை. பஞ்சாபில் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டதற்கு முக்கியக் காரணம் அவர்கள் தங்களது சுயமரியாதை பாதிக்கப்பட்டது. அந்த அவமானத்தை அவர்கள் தாங்கிக் கொள்ள இயலவில்லை.

**எஸ், மல்லாரெட்டி** (பொதுச் செயலாளர், விவசாயிகள் சங்கம், ஆந்திரா)

ஆந்திராவில் இப்போதும் தற்கொலைகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. விதை, உரம், பூச்சி நஞ்சு வணிகமே விவசாயிகளின் கடன் சுமைக்கும் தற்கொலைகளுக்கும் காரணம் என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிட்ட உண்மை. நிலக்கடலையில் மட்டும் ரூ. 600 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. கூரியர் விதைக் கம்பெனிதான் விதைகளை விற்றுள்ளது. ஆந்திர அரசு உயர் தொழில்நுட்ப நகரமாக்குவதில்தான் முனைந்து நிற்கிறதே தவிர விவசாயிகளின் துயர்களைப் பற்றிக்கவலைப்பட நேரமில்லை.

வரங்கல் மாவட்டத்தில் ஏராளமான தற்கொலைகள் நடந்துள்ளன கம்பெனி விதைகள் அறிமுகப் படுத்தப்பட்ட முதல் மூன்று, நான்கு ஆண்டுகளில்



படிப்பகம்

www.padippakam.com

விளைச்சல் நன்கு இருந்தது. விளைச்சல் நன்றாக இருந்ததைப் பயன்படுத்தி மேலும் விளம்பரங்கள் செய்து ஏராளமான விதைகள், பூச்சி நஞ்சுகள், உரங்களை விவசாயிகளின் தலையில் கட்டியுள்ளனர். ஒன்றுமறியா விவசாயிகளை ஏமாற்றி அவர்களுக்கு கடனாகவும் அளித்துள்ளனர். அதற்கெனத் தனி ஏஜெண்டுகளே இருக்கின்றனர். விளைச்சல் சரியத் தொடங்கியபோது விவசாயிகள் பெருமளவில் கடன்பட்டிருந்தனர். இறுதியில் என்ன பயிரிடுவது, என்ன உரமிடுவது, என்ன பூச்சி நஞ்சு தெளிப்பது என ஏஜெண்டுகளே தீர்மானித்தனர். விவசாயிகள் இதில் பார்வையாளர்களாக மட்டுமே இருந்தனர்.

விதைக்கம்பெனிகளுக்கும் உள்ளூரில் அவற்றை விற்கும் கடைக்காரர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்று கட்சி பேதமில்லாமல் இந்தத் தற்கொலைகளைப் புறக்கணித்தனர். 98, 99-ஆம் ஆண்டுகளில் 36000 ஹெக்டேர் பரப்பில் குறிப்பிட்ட பருவத்துக்குப் பொருந்தாத பருத்தி விதைகள் விற்கப்பட்டுள்ளன. இதனை அரசே ஒப்புக்கொண்டுள்ளது. கார்கில் போர் பற்றி வீரப் பிரதாபங்கள் நடந்து கொண்டிருந்த போதும், ஆந்திராவிலும் கார்கில் போர் நடந்தது. இந்தக் கார்கில் விதைக் கம்பெனி,

**டி.என். பிரகாஷ்,** கர்நாடக வேளாண் பல்கலைக் கழகம் :

உயர் தொழில் நுட்ப பூப்பண்ணைகள் கர்நாடகாவில் ஏற்படுத்தும் நாசகர விளைவுகளை இவர் தனது கட்டுரையில் விவரித்தார்.

பெங்களூர் மற்றும் சுற்று வட்டாரங்களில் 35 உயர் தொழில் நுட்ப பூப்பண்ணைகள் இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை ரோஜாத் தோட்டங்கள். இவை விவசாயிகளால் நடத்தப்படுபவை அல்ல. முற்றிலும் தனியாரால் தொழிற்சாலையாக நடத்தப்படுகின்றன. பூப்பண்ணை திட்டத்தை செயல்படுத்தும் முகமாக கர்நாடக வேளாண் கொள்கையும், நிலச்சீர்திருத்தச் சட்டமும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. பெருமளவு நிலங்களில் பூப்பண்ணைகள் வந்து விட்டதால் உணவுப் பொருட்கள் வெளிமாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. கர்நாடகாவின் உணவுப் பொருட்கள் உற்பத்தி அகில இந்திய சராசரி அளவை விட 15முதல் 30 சதமாக குறைந்துள்ளது. 1 ஹெக்டேர் நிலத்திலிருக்கும் பூப்பண்ணைக்கு ரூ.1.5கோடி செலவாகின்றது. இவற்றில் 30சதம் கட்டுமானப் பொருட்கள். மீதமுள்ள 30 சதம் பசுமை இல்லம் **(Green House)** அமைப்பதற்கான செலவுகள். இந்த 60 சதம் பணத்திற்கு பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இங்கு வளர்க்கப்படும் பூக்களில் 60 முதல் 70 சதம் நெதர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்தப் பூப்பண்ணைகள் அமைப்பதற்கென ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் 86 சதவீதம் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்குச் சொந்தமானவை



படிப்பகம்

www.padippakam.com




என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலங்களில் விவசாயிகள் ராகி, சோளம், காய்கறிகளைப் பயிரிட்டு விளைவித்து வந்துள்ளனர். விவசாயிகளிடம் இருந்து பிடுங்கப்பட்ட நிலத்திற்கான தொகை 3 முதல் 5 தவணைகளில் 1 முதல் 3 ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது என்பது அடுத்த அதிர்ச்சி தரத்தக்க தகவல். 1ஹெக்டேரில் பூப்பண்ணையில் பயன்படுத்தும் தண்ணீர், உரம் போன்ற



படிப்பகம்

www.padippakam.com

ஆதாரங்களை 2500 ஏக்கர் நிலங்களுக்குப் போதுமானவை. இதன்மூலம் 1.5 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்படும்.

பூப்பண்ணையில் வேலை செய்யும் 50 முதல் 60 சதவீத தொழிலாளர்கள் தலைவலி வாந்தி போன்ற தொந்தரவுகளுக்கு உள்ளாகின்றனர். பண்ணை இருக்கும் பகுதியைச் சுற்றிலுமுள்ள விளைநிலங்களின் இயற்கைச் சூழல் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இவற்றால் நேரும் சுற்றுச் சூழல் சீர்கேடுகளுக்கு அளவே இல்லை.

**நாராயண ரெட்டி** (ஹைதராபாத் பல்கலைக் கழகம்)

இன்றும் இந்தியாவில் விவசாயிகள்தான் அதிக அளவு விதைகளை உற்பத்தி செய்பவர்கள், வினியோகிப்பவர்கள் இதுவரை பன்னாட்டு நிறுவனங்களால் 15 சதவீதம் அளவிற்கே விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவுகளே தாங்க முடியாத அளவுக்கு இருக்கின்றன. விதைகளை உற்பத்தி செய்யவும் விநியோகிக்கவுமான உரிமை விவசாயிகளிடம் மட்டுமே இருக்கவேண்டும். இதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை. விவசாயிகளை விதைகளிலிருந்து அன்னியப்படுத்தும் இந்தப் பகாசுர விதைக் கம்பெனிகள் உடனடியாக விரட்டியடிக்கப்பட வேண்டும். இன்று இவர்கள் மரபணு மாற்ற விதைகளை உற்பத்தி செய்வதாகப் பீற்றிக்கொள்கின்றனர். மரபணு மாற்ற விதைகள் என்ன செய்கின்றன என்பதைப் பிறகு பார்ப்போம். உங்கள் சோதனைகளுக்கு ஆதாரமான விதைகளை உற்பத்தி செய்தவர்கள் விவசாயிகள்தானே, பழங்குடி மக்கள்தானே.

தனக்குத் தேவையான விதைகளைத் தானே உற்பத்தி செய்துகொள்ளாத சமூகம் இறையாண்மையுடன் இருக்க முடியாது. நமது இறையாண்மையைப் பறிக்கும் பன்னாட்டு விதைக் கம்பெனிகளை என்ன செய்யப் போகிறோம்?

**கொல்லி நாகேஸ்வரராவ்** (விவ. சங்கம்)

சந்திரபாபு நாயுடு இந்தியாவிலேயே உலகமயமாக்கலை நடைமுறைப்படுத்துவதில் முன்னிலையில் இருக்கிறார். இதன் காரணமாகவே இங்கு தற்கொலைகளும் அதிகரித்துள்ளன. தற்கொலை செய்பவர்கள் இளமையான சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள்தான். தற்கொலைகளுக்கு காரணம் 1. விளைச்சல் பாதிப்பு, 2. சுரண்டல் மனிதத் தன்மையற்ற வட்டிக் கடைக்காரர்கள், விவசாயிகளைப் பெருமளவு சுரண்டுகின்றனர். ஏராளமான விதை ஏஜெண்டுகள் விவசாயிகளை நோக்கிப் படையெடுக்கின்றனர். அரசுக்குத் தெரிந்தேதான் இது நடக்கின்றது. இதுவரை ஆந்திராவில் மட்டும் 11000 வழக்குகள், இத்தகைய ஏஜெண்டுகளுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2சதவீத வழக்குகளில் மட்டுமே தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

இந்த 2 சதவீத வழக்குகளிலும் இரண்டு, மூன்று முறை தண்டிக்கப்பட்ட ஏஜெண்டுகளும் உண்டு. அவர்கள் இன்னமும்



படிப்பகம்

www.padippakam.com

ஏஜெண்டுகளாக இருக்கின்றனர். இது அரசுக்குத் தெரியாதா? ஆனால் இந்த விவரங்கள் மக்களைச் சென்றடைவதில்லை. 40 நாட்கள் நாடு முழுவதும் பயணம் செய்தோம். மந்திரிகளைச் சந்தித்தோம். பிரதமரைச் சந்தித்தோம். இறுதியில் ஜனாதிபதியையும் சந்தித்து விவரங்களைக் கூறினோம். ஜனாதிபதி "நீங்கள் என்னை விட அதிகாரம் உள்ளவர்களாக இருக்கிறீர்கள்" என்றார்.

பணம் பெறுவதற்காகத் தற்கொலை செய்வதாக ஈவு இரக்கமின்றி விஷமப் பிரச்சாரம் செய்தனர். இவை அபாண்டமான பொய்கள். இதற்கென தற்கொலை செய்து கொண்ட 6 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை அழைத்து செய்தியாளர்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தோம். பத்திரிக்கையாளர்கள் கேள்விகள் கேட்டனர். உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டது. ஒரு விவசாயி ரூ.40,000 கடன் பட்டிருக்கிறார். பணம் கொடுத்தவன் மோட்டார் சைக்கிளில் அவரைத் தூக்கிச் சென்று மிரட்டியிருக்கிறான். ஒன்று வீட்டை விற்க வேண்டும், அல்லது உனது மனைவியை விற்கவேண்டும் என்கிறான்.

அன்றைய இரவே விவசாயி தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். இரண்டு முதல் இரண்டரை கோடி விவசாயிகள் ஆந்திராவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகாரிகளுக்கு முதல்வரின் பயணத்தைக் கவனித்துக் கொள்ளவே நேரம் சரியாக இருக்கிறது. வேளாண் நிலங்களைத் தனியார் பண்ணைகளாக 100, 1000 ஏக்கர்களாகத் தனியார் மயமாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

மத்திய, மாநில அரசுகளின் வேளாண் கொள்கைகளை எதிர்த்து மக்களை ஓரணியில் திரட்டி, உலக வர்த்தக அமைப்பு உலக வங்கி போன்றவற்றின் திட்டங்களை முறியடித்தாக வேண்டும். ஆந்திராவில் நவம்பர் 30-ல் ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

*25-ம் தேதி காலை அமர்வில் சர்வதேச அளவில் விவசாயிகள், விஞ்ஞானிகள் பங்கேற்றனர். அவர்கள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, கனடா, பெரு, ஸ்காட்லாந்து போன்ற நாடுகளிலிருந்து வந்திருந்தவர்கள். மரபணு மாற்ற விதை இரகங்களின் தீமைகளை விளக்கி இவர்கள் பேசினர். பன்னாட்டு நிறுவனங்கள் உலக அளவில் கைகோர்த்து நிற்கின்றன. எனவே, உலக மக்களாகிய நாமும், விவசாயிகள் என்கிற அடிப்படையில் ஒன்றிணைவதே விடிவுக்கு வழி என்ற கருத்தை அனைவரும் வலியுறுத்தினர்.*

**ஜோஸ் போவ்** (விவசாயி - பிரான்சு)

மரபணு மாற்ற விதைகள், உணவுகளை எதிர்த்து கடந்த பத்து ஆண்டுகளாகப் போராடி வருகிறோம். அதில் தற்போது நாங்கள் குறிப்பிடத் தக்க வெற்றியும் அடைந்திருக்கிறோம். 1998 ஜனவரியில் பிரான்சு முழுவதிலும் இருந்து 200 விவசாயிகள் இணைந்து எங்களிடமிருந்த பாரம்பரிய விதை இரகங்களை கொண்டு வந்து பரிமாறிக் கொண்டோம். அந்த நிகழ்ச்சிக்கு வந்தனாசிவாவும் வந்திருந்தார். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் பிரெஞ்சு அரசு



படிப்பகம்

www.padippakam.com

வழக்குத் தொடுத்து எட்டு மாத காலம் சிறையிலடைத்தது. எங்களை சிறையில் தள்ளிய பிறகு பரவலாக மக்களிடம் மரபணுமாற்ற உணவு விதைகளுக்கு எதிரான கருத்து பரவிவிட்டது. இப்போது எங்களது போராட்டத்தில் நுகர்வோரும் கலந்துகொள்கின்றனர். ஐரோப்பாவின் உணவு உத்தரவாதம் கேள்விக்குள்ளானால், அவர்கள் எங்கேனும் உதவி கேட்டுப் பெறமுடியும். ஆனால் இந்தியாவின் உணவு உத்தரவாதம் கேள்விக்குள்ளனால் யாரிடம் கேட்கமுடியும் ? இந்தியா உலகிற்கு உணவு வழங்கமுடியும். ஆனால் எந்த நாடும் இந்தியாவிற்கு உணவு வழங்கமுடியாது.

"உலக மக்கள் எத்தகைய உணவு தின்பது என்பதை நாங்கள் தீர்மானிக்கிறோம்" என்கின்றன பன்னாட்டு விதைக் கம்பெனிகள் இதனை நாம் அனுமதிக்க முடியாது. உலகமெங்குமுள்ள விவசாயிகள் ஒன்றிணைய வேண்டிய தேவை நேர்ந்துள்ளது. இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராக நீங்கள் நடத்தும் போராட்டத்தில் நாங்களும் கலந்துகொள்கிறோம். எங்கள் நாட்டில் நடத்தும் போராட்டத்துக்கு நீங்கள் ஆதரவு தாருங்கள். நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

**பெரு நாட்டைச் சேர்ந்த சூழலியல் ஆய்வாளர்**

இங்கே நடைபெற்ற விசாரணையைக் கண்ட பிறகு பெரு நாடும் இந்திய நாடும் சந்திக்கும் சிக்கல்கள் எவ்வளவு நெருங்கியதாக இருக்கிறது என்பதை என்னால் உணர முடிகிறது. வெனிசூலா தொடங்கி சிலி வரையுள்ள நாடுகளிலுள்ள சூழல் காப்பு அமைப்புகளை ஒன்றிணைத்து உணவு உத்தரவாத செயல்களைச் செய்து வருகிறோம். மரபு சார்ந்த வேளாண்மையை மீண்டும் உயிர்ப்பித்து வருகிறோம். மரபணு மாற்ற விதைகள் ஒரு நாளும் உணவுக்கு உத்தரவாதம் அளிக்காது. மாறாக சூழலை நாசம் செய்யும். இயற்கை ஆதாரங்கள், நமது கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். சமூகத்தின் அறிவு சமூகத்திடமே பாதுகாக்கப்படவேண்டும். விதைகள் மக்களின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். இறுதியில் உணவு நமது கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். இதற்கு எதிராக வரும் எல்லாச் சக்திகளையும் நாம் எதிர்த்துப் போரட வேண்டும்.

அடுத்த ஆண்டு பெருவில் இங்கே நடத்தியது போல விதைத் தீர்ப்பாயத்தை நடத்த திட்டமிட்டு வருகிறோம்.

**வில் ஆலன் (கணேஷ் பண்ணை, ஐக்கிய அமெரிக்க குடியரசு)**

அமெரிக்காவில் 100 ஆண்டுகளுக்கு முன்பு 75 சதவீதம் விவசாயிகளிடம் பரவிக் கிடந்த நிலம் இன்று வெறும் 2 சதவீதம் விவசாயிகளிடம் மட்டுமே இருக்கிறது. மீதியுள்ள 98 சதவீதம் நிலங்கள் பன்னாட்டு நிறுவனங்களின் கைகளில் இருக்கின்றன. அமெரிக்காவின் விவசாயத்தை இன்று வங்கிகள்தான் தீர்மானிக்கின்றன.

விதைகளில் ஆதிக்கம் செலுத்தும் இந்தப் பகாசுர[illegible]ள் இறுதியில் உலகத்தை அழிப்பார்கள். அதற்கு முன்னதாக [illegible]ளை நாம்



படிப்பகம்

www.padippakam.com

அப்புறப்படுத்தியாக வேண்டும்.

டேவிட் பார்லிங் (உணவுக் கொள்கை மையம், உல்ஃசன் உடலியல் அறிவியல் ஆய்வுமையம், இலண்டன்)

மரபணு மாற்ற விதைகளை அறிமுகப்படுத்துவோர் கீழ்கண்ட 4 கூறுகளைச் சொல்கின்றனர்.

பூச்சி, நோய் எதிர்புத்திறன் அதிகம்

உயர் விளைச்சல்

உயர்ந்த வளர் விகிதம் (**Growth Charactor**)

அதிக பட்ச சத்து கொண்டது.

மேற்கண்ட நான்கும் உண்மையல்ல என்பதை நாங்கள் அறிவியல் பூர்வமாக நிறுவியிருக்கிறோம்.

மரபணு மாற்ற உணவு இரகங்கள் நச்சுத் தன்மை கொண்டவை. ஐரோப்பிய நாடுகளில் மரபணு, மாற்ற உணவு இரகங்களை மக்கள் ஒதுக்கித் தள்ளுகின்றனர்.

*மான்சான்டோ நிறுவனத்தின் அருகில் பண்ணை வைத்துள்ள அமெரிக்க விவசாயி தனது அனுபவங்களைக் கூறினார். மான்சான்டோ நிறுவன பண்ணையில் பயன்படுத்தப்பட்ட இரசாயன நச்சுகள் இவரது நிலத்தில் கசிந்து நிலம் நிலம் வளம் குன்றிவிட்டது. எனவே, வழக்குத் தொடர்ந்திருக்கிறார். விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.*

தேசிய சர்வதேச விசாரணைக்குப் பிறகு விதைப் பஞ்சாயத்து நடுவர் மன்றம் தனது தீர்ப்பை வழங்கியது. பன்னாட்டு விதைக் கம்பெனிகள் குற்றவாளிகள் எனஅறிவித்தது. அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட மத்திய மாநில அரசு மக்கள் நலனைப் புறந்தள்ளியது வெளிப்படையாகத் தெரிவதாக தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

நடுவர் மன்றத்தின் பரிந்துரைகள்

1. பன்னாட்டு நிறுவனங்களின் விதை உற்பத்தி, விநியோக நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்.

2. தற்போது செயலிழந்துள்ள அரசு விதைப்பண்ணைகள் விவசாயிகளின் பங்கேற்புடன் புனரமைக்கப்படவேண்டும்.

3. விநியோகிக்கப்படும் விதை இர்கங்கள் வேளாண் பல்கலைக் கழகங்களால் சோதனைக்குட்பட வேண்டும். முளைக்கும் திறன், தட்பவெப்பத்திற்கு இசைவானதா? நோய் எதிர்ப்புத்திறன் கொண்டதா? போன்றவை அதில் அடங்கும்.


படிப்பகம்

www.padippakam.com

4. விவசாயிகளின் விதை வங்கிகள் - சமூக விதை வங்கிகள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

5. விதைப் பஞ்சாயத்தில் பங்கு பெற்ற விவசாயிகள் அமைப்புடன் சேர்ந்து அரசுகள், பன்னாட்டு விதை நிறுவனங்களுக்கெதிரான சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான பொருளியல் அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

6. போலியான வேளாண் இடுபொருட்கள், விதைகள் வழங்குவோர் கடுமையகத் தண்டிக்கப்பட வேண்டும்.

7. இந்தியாவில் வணிகமயப்படுத்தப்பட்டிருக்கும் மரபணு மாற்றத்தைத் தொழில்நுட்பத்தைக் கண்காணிப்பதற்கென பத்து ஆண்டுகளுக்கேனும் நீதிமன்ற அமைப்பு செயல்படுத்தப்பட வேண்டும்.

8. விவசாயிகள் காலங்காலமாக அனுபவித்து வந்த விதைப் பாதுகாப்பு, உற்பத்தி, விநியோக உரிமைகள் தொடர்ந்து காக்கப்பட வேண்டும். இதில் எத்தகைய தேசிய, சர்வதேச தடங்கல்கள் நேர்ந்தாலும் அது விவசாயிகளின் அடிப்படை உரிமைகளைப் பாதிப்பதாகும். இறுதியில் இது தேசத்தின் இறையாண்மையைப் பாதிக்கும்.

9. தாவர வகையினங்ள் மற்றும் விவசாயிகளின் உரிமைகள் சட்டம் 1999, வடிவுரிமை இரண்டாவது திருத்தச் சட்டம் 1999 மற்றும் உயிரினப் பன்முகச் சட்டம் 2000 போன்றவற்றிலுள்ள விவசாயிகள் உரிமையைப் பாதிக்கும் பகுதிகள் மாற்றப்படவேண்டும்.

10. சிறு விவசாயிகளைப் பாதுகாக்கவும், உணவு உத்திரவாதத்தை உறுதி செய்யவும் உலக வர்த்தக அமைப்பின் விதிகளிலிருந்து விதைகள், உயிர்ப் பொருள்களின் மீதான வடிவுரிமை நீக்கப்பட வேண்டும்.

11. குறைந்தபட்ச உத்தரவாத விலை விவசாயிகளின் விளை பொருட்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

12. வேளாண் விளைபொருட்களுக்கான விலை நிர்ணயிக்கும் குழுவில் விவசாயிகள் மற்றும் அவர்களின் பேராளர்கள் தேவையான அளவு பங்கு பெற வகை செய்யப்படவேண்டும்.

13. உணவு உற்பத்தியில் தற்சார்பு அடைவதற்கென மத்திய, மாநில அரசுகள், மற்றும் அரசு சாரா அமைப்புக்கள் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும்.

விதைத் தீர்ப்பாயம் தனது தீர்ப்புரையையும், பரிந்துரைகளையும் அளித்த பின்னர் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் எழுச்சிமிகு உரையாற்றினார். உண்மையில் அவரது இறுதி உரைதான் தீர்ப்புரையாக அமைந்தது.

**உயர் வி.ஆர். கிருஷ்ணய்யர் உரை :**

போர்க்குணம் மிக்க சகோதர சகோதரிகளே வணக்கம். நாட்டுக்கு



படிப்பகம்

www.padippakam.com

விளைவிக்கப்பட்டு வரும் கொடுமையை எண்ணிக் கொதித்தெழுந்துள்ள உங்களை வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன். பன்னாட்டு நிறுவனங்கள் என்கிற அரக்கர்களை எதிர்த்து நீங்கள் களத்தில் இறங்கியுள்ளீர்கள். இது முடிவல்ல தொடக்கம் தான். நமது எதிரி உறுதியானவன் போல் தோற்றமளிக்கிறான். இவர்கள் கோடிக்கணக்கான மக்களைப் பட்டினி போடும் வணிகத்தைச் செய்கிறார்கள். இந்தப் பன்னாட்டு பட்டினி வணிகர்கள் அரசுகளைத் தவறிழைக்க வைக்கின்றனர். தலைவர்களைத் தவறிழைக்கத் தூண்டுகின்றனர். அரசியல்வாதிகளைத் தங்கள் வலையில் வீழ்த்துகின்றனர். மொத்தத்தில் தேசம் மீண்டும் காலனியாக்கப்படுகிறது. தேச மக்களே கண் திறந்து பாருங்கள். உலகெங்கும் இன்று வறுமை அதிகரித்து வருகிறது. பசிக்கொடுமை அதிகரித்து வருகிறது. அமெரிக்காவில், ஐரோப்பியநாடுகளில், ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளிலும் வறுமை, பசி, பட்டினி தாண்டமாடுகிறது. இந்தக் கோரத் தாண்டவத்தின் நாயகர்களே பன்னாட்டு நிறுவனங்கள்தான். எனவே, உலக அளவிலான ஒரு போருக்கு அழைக்கிறோம். இந்தியர்கள் நாங்கள் காந்தியின் பெயரால் உலக மக்களை அறைகூவி அழைக்கிறோம்.

விதைக்காகப் போராட்டத்தை துவங்கியுள்ளோம் 100 கோடி மக்களின் பிரதிநிதியாக - விவசாயிகளின், தொழிலாளர்களின், பெண்களின், சிறுவர்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இன்று வாழ்க்கையில் என்ன நம்பிக்கை இருக்கிறது தற்கொலைகள் பற்றி விதைப் பஞ்சாயத்து இரண்டு நாட்களாக விசாரித்தது. இதில் விசாரிக்க என்ன இருக்கிறது? ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்களில் என்ன பார்கிறோம்? கணவன் தற்கொலை, மனைவி தற்கொலை, குடும்பத்தோடு தற்கொலை என்ன அநியாயம்! மக்களின் வாழும் உரிமை பறிக்கப்பட்டுவிட்டது. மக்கள் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டப்படுகின்றனர். என்ன ஒரு வெட்கக் கேடான சூழல்!

இங்கே உலகின் பல நாடுகளிலிருந்து பன்னாட்டு நிறுவனங்களை எதிர்க்கும் அமைப்புகளின் பேராளர்கள் வந்துள்ளீர்கள். நீங்கள் திரும்ப சென்று உங்கள் நாட்டு மக்களுக்குச் சொல்லுங்கள். இந்தியர்கள் நாங்கள் போராடத் தயாராகிவிட்டோம். உலக மக்கள் நாம் ஒன்றிணைந்து மக்களின் எதிரிகளை விரட்டி அடிப்போம். நாம் கைகோர்த்து நிற்போம். உயிர்களின் வாழும் உரிமையை நிலைநாட்டுவோம். இங்கே கூடியிருப்போர் எண்ணிக்கையில் குறைவாக இருக்கலாம். பேராறுகள் சிற்றோடைகளாகத்தான் துவங்குகின்றன. சிறு தீப்பொறிதான் பெரும் பிரளயத்தை ஏற்படுத்துகிறது. உலக அளவில் பரந்து கைகோர்த்து நிற்கின்ற எதிரிகளை அடையாளம் கண்டு கொள்வோம்..

விவசாயிகளின் விதையில் உரிமை கொண்டாடுகின்றன பன்னாட்டு நிறுவனங்கள். யார் இந்தப் பன்னாட்டுக் கம்பெனிகள். நாங்கள் இந்த மண்ணின் மைந்தர்கள். பூமி எங்கள் சொத்து. உங்கள் வளர்ச்சிக் கூப்பாட்டை உடனே நிறுத்துங்கள். மனித உரிமைகள் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? நீங்கள்



படிப்பகம்

www.padippakam.com

மனிதர்களே அல்ல. இன்று நேர்ந்துள்ள கொடுமைகளுக்கு நிகராக ஹிட்லரின் கொடுமைகளைக் கூடச் சொல்ல முடியாது. அதைவிடக் கொடுமை நடந்து கொண்டிருக்கிருக்கிறது. இவர்கள் இந்த வியாபாரிகள் உயிரைப் பேடண்ட் செய்கிறார்கள். விதைகளில் ஜீனைப் புகுத்துகிறார்கள். இவர்களை விட்டுவைப்பதில் இனி அர்த்தமில்லை.

அமெரிக்காவிலும், கனடாவிலும் பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்து நீதிமன்றம் சென்ற நண்பர்கள் இங்கே உரையாற்றியுள்ளனர். ஒவ்வொரு கொடுமைக்கும் கோர்ட்டுப் படியேற முடியாது. அரசியல் சட்டத்தின் விதி 19 என்ன சொல்கிறது? விதைகளின் திசுக்களில் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளதாம் மான்சான்டோ. உண்மையில் மனிதத் திசுக்களைத்தான் மாற்றியமைத்துள்ளான். இந்த உரிமையை அரசியல் சட்டம் வழங்கியுள்ளதா? மான்சான்டோ எங்கு சென்றாலும் அங்குள்ளவைகளை மாசுபடுத்துகிறது. இங்கு நான் மான்சான்டோ என்று குறிப்பிடுவது ஒரு அடையாளத்துக்குத்தான். மனிதர்களின் அடிப்படை உரிமைகளை அலட்சியப்படுத்துகிற எல்லாப் பன்னாட்டு, உள்நாட்டு நிறுவனங்களையும் நான் எச்சரிக்கிறேன்.

பசுமைப் புரட்சி என்று புரட்டை அறிமுகப்படுத்தினார்கள் மின்னலைப்போல சில காலம் விளைந்தது. நாளடைவில் நிலம் என்ன ஆனது? இன்று நிலம் பாழானதால் மக்கள் எவ்வளவு துயரை அனுபவித்து வருகிறார்கள். பச்சைப் புரட்சியை அறிமுகப்படுத்தியவர்களுக்கு இது தெரியாதா? 'TRIP Treaty'என்கிறார்கள் உண்மையில் அது 'TRIP Trap'

இங்கு கூடியுள்ள மக்கள் விடுதலையின் செய்தியோடு செல்லுங்கள். பூமியின்/மக்களின் எதிரிகளை விரட்டியடிப்போம். உலகத்தைச் சுரண்டும் பன்னாட்டு நிறுவனங்களை ஒழிப்போம். இங்குள்ள அமைச்சர்களுக்கும், பிரதமருக்கும், முதல்வர்களுக்கும் இந்தியா விற்பனைக்கல்ல என்று நானும் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களின் எதிரிகளை எதிர்த்து உறுதியாகப் போராடுவோம். மக்கள் போர்க் குணத்துடன் பொங்கி எழுந்துவிட்டால் அவர்களை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. நாம் சக்தி மிக்கவர்கள். நிச்சயம் வெல்வோம்.

தொகுப்பு : மு. குமரவேல்



படிப்பகம்

www.padippakam.com

# பழந்தமிழர்களின் பாசன மேலாண்மை

- ப. கோமதிநாயகம்

தமிழ் இலக்கிய, வரலாற்றுத்துறை தவிர மற்ற துறையினர் பெரும்பாலும் வரலாறு என்பதை பழம் பெருமை பேசுவது என்றே கருதுகின்றனர். வரலாறு என்பது நமக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியன் நமது மக்களிடையே மற்ற நாடுகளில் இல்லாத ஒரு மனப்போக்கு இருக்கிறது. நமது அம்மா, அப்பா பெயர்கள் தெரியும். அவர்களின் அம்மா, அப்பா பெயர்களும் தெரியும். தாத்தாக்களின் அம்மா, அப்பா பெயர்கள் தெரியுமா என்றால் நூற்றுக்கு 90 பேருக்குத் தெரியாது. நம்முடைய நேரடியான முன்னோர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டாத சமுதாயம் எப்படி முன்னேறும்?

நமது வரலாற்றின் பெரும்பாலான சான்றுகள் சங்க இலக்கியங்களிலிருந்து கிடைக்கின்றன. அதில் பெரும்பாலும் அக்கால வாழ்க்கைமுறை சம்பவங்களைப் பதிவு செய்துள்ளன. பெரும்பாலானவை அணிகலன் பூட்டுவதற்காக உயர்வு நவிற்சியில் கூறப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் நீக்கிவிட்டு வரலாற்றுச் செய்திகளை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். சங்க இலக்கியங்களைத் தமிழாசிரியர்களை மட்டுமே படித்து உரையெழுதுவதுசரியாகாது. சங்க இலக்கியங்களை அறிவியல், பொறியியல், மருத்துவம், வேளாண்மை போன்ற துறையிலுள்ளோர் தமிழையும் கற்றுக் கொண்டு அவர்களது பார்வையில் விளக்கங்கள் அளித்தால் இன்னும் தெளிவான தமிழக வரலாறு நமக்குக் கிடைக்கும்.

தமிழகத்தின் பாசன அமைப்பைப் பற்றிக் கூறுவதற்கு முன்பு, உலகின் பாசன அமைப்பு குறித்து சில குறிப்புகளைப் பார்ப்போம். விட்போகல் என்ற ஜெர்மன் வரலாற்று அறிஞர், உலக நாகரீகங்களை Hydrolic Civilization, Hydrologic civilization என்று பாகுபடுத்திக் காட்டியுள்ளார். மழை வேளாண்மைக்காலம் - அதாவது பாசன வேளாண்மைக் காலத்திற்கு முன்பு மனிதன் வேட்டையாடி உணவைத் தேடினான். விலங்குகளைத் தேடி ஓடினான். பல சமயங்களில் விலங்குகள் மனிதர்களை வேட்டையாடவும் செய்தன. இப்படி நாடோடியாக நிலையற்றதாக மனிதனின் வாழ்க்கை இருந்தது. மனிதன் நிலையான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கு அடிப்படையாக இருந்தது வேளாண்மை. ஆரம்ப கால வேளாண்மை மழை வேளாண்மை. மழை பெய்ததும் விதைப்பார்கள். விளைந்ததை அறுவடை செய்வார்கள். மழை இல்லாத காலத்தில் உணவு கிடைக்காது. மீண்டும் வேட்டுவ வாழ்க்கைக்குப் போய்விடுவார்கள். மழை வேளாண்மைக் காலத்தில் தனி மனித முயற்சி போதும். தனக்குத் தேவையான உணவைத் தானே எடுத்துக் கொள்ளலாம். இரண்டாவது கட்டம் நீர் மேலாண்மை நாகரீகம். மழை நாம் நினைத்தபோது பெய்வதில்லை. தேவையான அளவும் பெய்வதில்லை. தேவைப்படாத நேரத்தில் அதிக அளவு மழை பெய்தும் தொல்லை கொடுக்கும். எனவே, மழை நீரைச் சேமித்து வேளாண்மைக்குப் பயன்படுத்தலாம் என்ற சிந்தனை



படிப்பகம்

www.padippakam.com

வந்தபோது நீர் வேளாண்மைக் காலம் தோன்றியது. ஏரி அமைக்க வேண்டும். நீரைத் தேக்க வேண்டும். அதற்கு தனி மனித முயற்சி போதாது. கூட்டு முயற்சி தேவை. அப்போதுதான் கூட்டு வாழ்க்கை உருவானது. கூட்டாக ஏரி, குளங்களை வெட்டி பாசனத்திற்குப் பயன்படுத்தி விளைச்சலைப் பகிர்ந்து கொண்டனர். இந்த நேரத்தில் ஆறுகளில் நீர் ஓடுவதைக் கண்டனர். இந்த ஆறுகளையும் நீர்த் தேக்கங்களையும் இணைத்தால் குளங்களுக்கு எப்போதும் தண்ணீர் கிடைக்குமே என்று சிந்தித்தனர். இதனை ஒரு குழுவால் மட்டும் செய்ய முடியாது. நிச்சயமாக ஆற்றைத் திருப்புவதற்கு பெரும் உழைப்பு தேவை. வழி நெடுக வாய்க்காலை வெட்ட வேண்டும். பரந்த அளவில் மக்களைப் பங்கேற்க வைப்பதற்கு அரசு தேவைப்பட்டது. எனவே அரசு, நாடு என்ற அமைப்புகள் நீர் வேளாண்மை நாகரீக காலத்திற்குப் பின்னர்தான் தோன்றியிருக்க முடியும் என்பது விட்போகலின் கருத்து.

அகழ்வாராய்ச்சியின் போது பெரிய அரசு இருந்ததற்கான அடையாளமாக இரண்டைக் கூறுவார்கள் . 1. மிகப் பிரமாண்டமான கட்டிட அமைப்புகள். 2. பாசன அமைப்புகள் இவை இரண்டும் இருந்தால் மிகப் பெரிய அரசாங்கம் இருந்தது என்பதை அகழ்வாராய்ச்சியனர் ஏற்றுக் கொள்வர். மேற்கண்ட அடிப்படையில் தமிழகத்தின் வேளாண்மை எப்படி இருந்தது?

வேட்டுவ வாழ்க்கை, உணவு சேகரித்தல், கால்நடை வளர்ப்பு, பாசன வேளாண்மை என்று வரிசைப்படுத்தலாம். உலகில் பல நாகரீகங்கள் தோன்றியுள்ளன. சிந்துவெளி, நைல், சுமேரியா யூப்ரடீஸ், டிக்ரீஸ் நதிக்கரை நாகரீகங்கள், சீனாவின் யாங்சே நதிக்கரை நாகரீகம் இவைகள் உலகில் தோன்றிய பழமையான நாகரீகங்கள். இந்த நாகரீகங்கள் எல்லாம் வடிமுகப்பகுதி - அதாவது டெல்டாப் பகுதியில்தான் தோன்றியுள்ளன. அதற்கு அடிப்படையான காரணம். 1. தண்ணீர் எப்போதும் கிடைக்கும். 2. இங்கு மண்ணைச் செம்மைப்படுத்த கற்கருவிகள் போதும். மனித நாகரீகத்தில் கற்களாலான கருவிகளைப் பயன்படுத்தியதுதான் முதல்காலம். சிந்துவெளி மக்களுக்கு இரும்பு என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் தாமிரபரணி ஆற்றங்கரையிலுள்ள ஆதிச்சநல்லூரில் அகழ்வாராய்ச்சியின்போது கற்கருவிகளோடு வேலும் கிடைத்தது. இரும்புத் தொழில்நுட்பம் தெரிந்ததால் நமது நாகரீகங்கள் டெல்டாவில் மட்டும் தொடங்கவில்லை. குறிஞ்சி முல்லைப் பகுதிகளிலும் வேளாண்மை செய்து வந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

பசிபிக் மாகடல், இந்திய மாகடல், அட்லாண்டிக் மாகடல் இந்த மூன்று மாகடல்களையும் ஆய்வு செய்த சோவியத் வல்லுநர்கள் அகழ்வாராய்ச்சி செய்து பல அரிய உண்மைகளை வெளியிட்டுள்ளனர். உலகின் ஆரம்பகால நாகரீகங்களை ஆராய்கிற போது நம்மால் விடைகாண முடியாத பல புதிர்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்தப் புதிர்களை விடுவிக்க வேண்டுமென்றால் லெமூரியாக் கண்டத்தையும் அதில் வாழ்ந்த மக்கள் மிக உன்னத நாகரீக நிலையில் இருந்தார்கள் என்பதையும் ஒப்புக்கொண்டால்தான் இந்தப் புதிர்களை விடுவிக்க முடியும். என்று கூறியுள்ளனர். இது ஒரு சான்று. இரண்டாவது, ஜெர்மன் அறிஞர் பிளெமிங் என்பவர்



படிப்பகம்

www.padippakam.com

இப்படிக் கூறுகிறார். தென்கிழக்காசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள மலையில் அடுக்குமுறை நெல் சாகுபடி, அமைப்புகளும் அதற்கேற்ற பாசன அமைப்புகளும் உருவாக்கியதில் திராவிட மக்களின் தாக்கம் இருப்பதைக் காணமுடிகிறது. இந்தியாவிலிருந்து கடற்பயணமாக பிலிப்பைன்சு சென்றிருப்பது, அந்த மக்கள் கடற்பயணத்தில் உயரிய திறமை படைத்தவர்கள் என்பதையே காட்டுகிறது.

வேட்டுவ கால மக்கள் கடற்பயணத்தில் சிறந்து விளங்கியிருக்க முடியாது. லெமூரியா கண்டத்திலுள்ள ஒரு ஊரின் பெயர் மெலுக்கா. இந்த ஊரிலிருந்து கிரேக்கத்திற்கு வாணிகத் தொடர்பு இருந்தது என்பதை ஜெர்மன் அறிஞர் பிளெமிங் ஆதாரங்களோடு நிறுவுகிறார். எனவே கடல் கடந்த வாணிகம் செய்ய வேண்டுமானால் 1. அவர்கள் பாசன வேளாண்மையில் உன்னத நிலையில் இருக்க வேண்டும். 2. கடல் பயணத்தில் திறமசாலிகளாக இருக்க வேண்டும். மேற்கண்ட இரண்டிற்கும் அடிப்படையானது வானியல்.

வானியலைப் பொறுத்தவரை நமது நாட்டு மக்களின் வானியல் கணிப்பிற்கும் மற்ற நாட்டு மக்களின் கணிப்பிற்கும் பல வேறுபாடுகள் இருந்தன. ஆனால் சீனர்கள் மற்றும் கிரேக்கர்களின் வானியல் கணிப்பும் பழந்தமிழர்களின் வானியல் கணிப்பும் ஒன்றாகவே இருந்தது வியப்புக்குரியது. அதற்கு அடிப்படையான காரணம் இவர்களுடைய கணித முறையில் வளைகோடுகளை அளப்பதற்கான கோணமுறை கணித முறைகள் சீன, கிரேக்க, தமிழ் அறிவியல்களில் மட்டுமே இருந்துள்ளன. கி.மு. 600 வரையுள்ள காலத்தை தொன்மக் கற்பனைகளின் காலம் என்கிறோம். கி.மு. 600 - கி.பி. 1500 வரை இயற்கைத் தத்துவக் கோட்பாடுகளின் காலம் என்கிறோம். கி.பி 1500 க்குப் பின்னால் உள்ள காலம் அறிவியல் காலம். இதில் நீரியலின் நிலை எப்படி இருந்தது.

கி.மு. 570 லிருந்து கி.மு. 470 வரையுள்ள காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள், 'உலகிலுள்ள நீருக்கெல்லாம் ஆதாரம் கடலுக்கு அடியிலுள்ள ஒரு ஊற்றுதான். கடலுக்கடியிலிருந்து ஊற்றிலிருந்து தண்ணீர் வந்து கொண்டேயிருக்கிறது. கடலுக்குள்ளிருந்து ஊற்றாக மலைக்கு வந்து மீண்டும் நிலத்தின் வழியே வருகிறது. அவ்வாறு வந்து கடலில் சேரும் போது நிலத்தில் உள்ள உப்பைக் கரைத்து மீண்டும் கடலில் சேர்க்கிறது. இதனால்தான் கடல்நீர் உப்பாகவே இருக்கிறது.' என்று பதிவு செய்துள்ளனர். டேல்ஸ் என்கிற கிரேக்கத் தத்துவ ஞானி இப்படிச் சொல்லியுள்ளார். அவர் எழுதியதை கி.பி. 1500 வரையிலும் உண்மை என்று நம்பிக் கொண்டு இருந்தனர்.

உலக நிலவரம் கி.பி. 1500 வரை இப்படியிருக்க பட்டிப்பாலையில் தமிழ்ப்புலவர் சொல்வதைப் பார்ப்போம். பூம்புகார் துறைமுகத்தில் சரக்குகள் ஏற்றப்படுவதை அவர் பாடுகிறார். ஒருபுறம் ஏற்றுமதிக்கான பொருட்களைக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டுள்ளனர். இன்னொருபுறம் கிரேக்கத்திலிருந்து வந்த பொருட்களை இறக்கிக் கொண்டுள்ளனர். சரக்கு போகிறது. சரக்கு வருகிறது. ஆட்கள் போகிறார்கள். வருகிறார்கள். இந்த வணிகச் செய்தியைச் சொல்ல வருகிறவர்



படிப்பகம்

www.padippakam.com

உவமையாகச் சொல்கிறார்.

''வான் முகழ்த்த நீர் மலைப் பொழியவும்
மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்
மாரி பெய்யும் பருவம் போல்
நீரின்று நிலத்தியற்றவும்
நிலத்தின்று நீர் பரப்பவும்
அளந்தறியாப் பல பண்டம்''...
-என்கிறார்.

நீர் சுழற்சியைச் சொல்கிறார். கடலிருந்து ஆவியாகி மேகமாகி மழை பொழிகிறது. பெய்த மழைநீர் ஆற்றில் ஓடி கடலில் கலக்கிறது. இதைப்போல பண்ட மாற்றம் இருந்தது என்கிறார். புலவருக்குக் கூட அறிவியல் தெளிவு இருந்துள்ளது. பட்டினப்பாலை காலம் என்பது சங்ககாலம்.

சர்வதேச மழை ஆராய்ச்சிக் கழகம் 10 ஆண்டுகளுக்கு முன்பு பொன்விழா மலர் வெளியிட்டிருந்தது. அதில் டேல்ஸ் எழுதியதைக் குறிப்பிட்டிருந்தனர். இந்தக் கருத்து ஏறத்தாழ 2000 ஆண்டுகள் இருந்துள்ளது. டேல்ஸ் இருந்த அதே காலகட்டத்தில் தமிழகத்தில் அதற்கு மாறான பட்டினப்பாலைப் புலவரின் கருத்து இருந்துள்ளது. இதற்கு காரணம் மழையை நம்பித்தான் தமிழர்கள் இருந்துள்ளனர். எனவே மழையைப் பற்றிய அறிவியல் அனைத்தையும் அறிந்து வைத்துள்ளனர்.

மழைஅளவு :

நாம் பயன்படுத்தக் கூடிய நல்ல நீர் உலகிலுள்ள மொத்த நீரில் 0.0001 பில்லியன் கன கிலோமீட்டர் என்று கணக்கெடுத்துள்ளனர். தண்ணீரை நாம் பயன்படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை இதில் மாற்றம் இல்லை. தமிழ்நாட்டின் அழை அளவு, வடகிழக்குப் பருவகாலத்தில் 23 மழை நாட்களில் மட்டுமே கிடைக்கிறது. 23 நாள் மழையை மீதமுள்ள 340 நாளைக்குச் சேமித்து வைத்துப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் தமிழனின் இயற்கைச் சூழலில் இருக்கிறது. தென்மேற்குப் பருவக்காற்று ஜுன் 1-ல் சரியாகத் தொடங்கும். நமக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடைக்காது. பாகிஸ்தானில் தொடங்கி பிலிப்பைன்ஸ் வரை செப்டம்பர் மாதம் வரை மழை தொடர்ந்து பெய்யும். நாம் மழை மறைவுப் பிரதேசத்தில் இருக்கிறோம். நமக்கு ஏறத்தாழ 40,000 ஏரிகள் உள்ளன. நமது அண்டை மாநிலமான ஆந்திராவில் 90,000 ஏரிகள் உள்ளன. இலங்கையில் 55,000 ஏரிகள் உள்ளன. மழை நீர்தான் ஆதாரம் என்கிறபோது அதனைச் சேமிக்க எல்லா ஏற்பாடுகளையும் நமது முன்னோர் செய்து வைத்துள்ளனர். எல்லா கிராமங்களிலும் மூன்று வகையான நீர் நிலைகள் இருந்தன. 1. பாசனத்திற்கு 2. குடிநீர் 3. கோயில் குளம்.

அடுத்து அணைகள் பற்றி வரலாறு. கல்லணையின் சிறப்பு என்ன? உலகின் முதல் அணை கி.மு.ஆறாயிரத்தில் கட்டப்பட்டது. நைல் நதியின் அருகில் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

ஒடையில் கட்டப்பட்டது. ஆற்றுக்கு மேல் பாறைகளை அடுக்கினார்கள் இரண்டு ஓரங்களிலும் பெரிய பாறைகள் வரிசையாக அடுக்கப்பட்டன. இடையிலே 20 அடி இடைவெளி அந்த இடைவெளியில் சிறிய கற்களை நிரப்பினார்கள். முதல் வெள்ளம் வந்தவுடன் எல்லாமே அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. அடித்துச் செல்லப்பட்ட இடத்தில் மணல் இல்லை. இப்போதும் அணையின் மிச்ச மீத ஓரப்பகுதிகள் இருக்கின்றன. சுமேரிய நாகரிகத்தில் சுட்ட களி மண்ணால் அணை கட்டினர். அதுவும் நாளாவட்டத்தில் கரைந்து விட்டது. உலகெங்கும் இப்படி ஏராளமான அணைக்கட்டும் முயற்சிகள் நடந்தன. நமது முயற்சி கி.பி. 200 ல் கரிகாலன் காலத்தில் உலகின் பல இடங்களில் செய்யப்பட்ட முயற்சிகள் கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. ஆனால் கல்லணை இன்றுவரை மக்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற உலகின் மிகப் பழமையான அணை என்பதுதான் அதன் சிறப்பு.

கல்லணை எப்படிக் கட்டப்பட்டது? யாருக்கும் தெரியாது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியில் ஆர்த்தர் கார்ட்டன் என்கிற பொறியாளர் 93 வயது வாழந்தவர் அவருடைய உழைப்பு முழுவதும் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பகுதியில் மட்டும்தான். அவர் இங்கு பணியாற்றும்போது தினமும் கல்லணையைப் போய்ப் பார்ப்பாராம். அப்போதிருந்த அரசு மராமத்து வேலைகளுக்கோ, புதிய அணை கட்டுவதற்கோ ஒப்புக் கொள்ளவில்லை.

கல்லணை கற்கள் தமது சொந்த எடையைக் கொண்டு நிற்கும் வண்ணம் கட்டப்பட்டுள்ளது. பெரிய பெரிய கற்களை ஓடும் நீரில் மணலில் போட்டுள்ளனர். கல்லின் எடையினாலும் நீரின் அரிப்பினாலும் அது உள்ளே இறங்கும் முதலில் போட்ட கற்கள் இறங்கியவுடன் மேலே மேலும் கற்கள் போடப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் கல் உள்ளே செல்வது நின்றவுடன் அணை உருவானது. இதுதான் கல்லணை. கல்லணை கட்டப்பட்ட காலம் குறித்து இடையில் மாறுபட்ட கருத்துக்கள் வந்தன. களிமண்காலத்தில்தான் கல்லணை கட்டப்பட்டது என்பது இப்போது நிறுவப்பட்டுவிட்டது.

ஆர்த்தர் காட்டன் குறிப்பில் எழுதுகிறார்.

''நாமெல்லாம் இங்கு வாழும் மக்களைக் காட்டு மிராண்டிகள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த மக்கள் நம்மைப் பற்றி சண்டைபோட மட்டுமே தெரிந்த காட்டுமிராண்டிகள், பாசனஏரிகளை உருவாக்கவோ, அதைப் பராமரிக்கவோ கூடத் தெரியாத காட்டுமிராண்டிகள் என்றே கருதுகிறார்கள்'' என்று எழுதியுள்ளார். இப்படிச் சொல்லிவிட்டு தமிழ்மக்கள் நினைப்பது உண்மைதான். நமக்கு பராமரிக்கக் கூடத் தெரியாதன்றே அவர்கள் கருதுகின்றனர். எனவே அணைகளை நாம் பராமரிப்பு செய்ய வேண்டும். அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென, ஆர்தர் காட்டன் கேட்டுக்கொண்ட பின்னரே கிழக்கிந்தியக் கம்பெனி ஒப்புக் கொள்கிறது.

மணற்பாங்கான இடத்தில் அணை கட்டுவதென்பது கடினம் உலகில் 100 ஆண்டுகளுக்கு முன்புதான் இத் தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டு 50



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டுகளுக்கு முன்பிருந்துதான் பயன்பாட்டில் வந்துள்ளது. உலகிலுள்ள மிகப்பெரிய ஆற்றுப்பாலங்கள், இணைப்புப் பாலங்கள் எல்லாமே தொங்கு பாலங்கள்தான். ஐரோப்பாவில் எல்லாப் பாலங்களும் தொங்கு பாலங்களே. தேம்ஸ் பாலத்திலிருந்து ஹௌரா பாலம் வரை எல்லாமே பிரிட்டிஷார் கட்டியது. மணற்பாங்கான பகுதியில் கட்டடம் எழுப்பும் தொழில்நுட்பம் அப்போது வளரவில்லை. இதை ஆர்த்தர் காட்டன் சொல்கிறார். மணற்பாங்கான பகுதியில் அணை கட்டும் தொழில் நுட்பத்தைக் பழங்காலத் தமிழ் முன்னோர்களிடமிருந்து நாம் கற்றுக் கொண்டோம் இந்தப் படிப்பைக் கொண்டு நாம் உலகெங்கும் பல பாலங்களைக் கட்டினோம். நாம் என்றென்றும் தமிழர்களுக்கு கடமைப் பட்டிருக்கிறோம் என்று எழுதியுள்ளார். அதாவது நாம் ராயல்டி கேட்கலாம்.

குளங்கள் அமைத்தபோது சங்கிலித் தொடர் குளங்களாக அமைத்தனர். ஒரு குளம் நிறைந்து அடுத்த குளம் நிரப்பும். முதல் குளத்திலிருந்து வயல்களில் பயன்பட்ட நீர் இரண்டாவது குளத்தில் சேரும். இப்படி ஒரே தண்ணீர் பல முறை பயன்படுத்தப்படுகிறது. சிறுபஞ்சமூலத்தில் ஒரு பாடல் இருக்கிறது.

குளம் தொட்டு கோடு பதித்து
வழிசித்து உழு வயலாக்கி
வளம் தொட்டு . . .

இந்தப் பாடலுக்கு வழக்கமாக நமது தமிழாசிரியர்கள் குளம் வெட்டுதல், மரம் நடுதல், சாலை அமைத்தல் என்று தான் உரை எழுதி புத்தகங்களில் வந்துள்ளது. என்னுடைய பார்வையில் இந்தப் பாடல் ஒரு ஏரி அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்குரிய இலக்கணமாகப் பார்க்கிறேன்.

குளம் அமைக்க வேண்டும். குளத்தில் மிகவும் முக்கியமான பகுதி கலிங்கு, மிகைநீர் வழிந்தோடும் பகுதி இது. இல்லையென்றால் கரை உடைந்துவிடும். வெளியேறுகிறநீர் பாதுகாப்பாக வெளியேற வேண்டும். கலிங்கைப் பராமரிக்க, கலிங்கு வாரியங்கள் இருந்துள்ளன. கலிங்கு - மற்றொரு பெயர் கோடு இப்பக்கூட கிராமங்களில் "தண்ணி கோடி பாய்ச்சுருச்சு" என்பார்கள் கோடு பதித்தல் எனபதற்கு மரம் நடுதல் என்றும் பொருள் உண்டு வழிசித்து - சாலை அமைத்தல் என்று உரையெழுதியுள்ளனர். அப்படியல்ல தண்ணீர் வருகின்ற வழிகளையெல்லாம் சுத்தப்படுத்தி, குளத்திலிருந்து வயல்களுக்குப் போகிற வழிகளையும் செம்மைப்படுத்தி, தேவையான மதகு, தூம்பு போன்றவற்றை அமைத்தல், தண்ணீர்ப் பற்றாக்குறைக் காலங்களில் குளத்துக்குள்ளேயே ஒரு பொதுக் கிணறும் அமைக்க வேண்டும், என்றுதான் அந்தப் பாடல் சொல்கிறது. ஒரு ஏரியின் அமைப்பு இப்படித்தான் இருக்கவேண்டும் என்று வரையறை சிறுபஞ்சமூலத்தில் இருக்கிறது.

ஐரோப்பிய பொருளியல் குழுமத்திலிருந்து தமிழகத்தின் 500 ஏரிகளை 200 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கின்றனர். அந்தச் சீரமைப்புத் திட்டத்தில் அவர்கள் சொல்வது, குளக்கரையை பலப்படுத்துங்கள், மிகை நீர் போக்கியை



படிப்பகம்

www.padippakam.com

உறுதியாகக் கட்டுங்கள். தண்ணீர் பாயும் வாய்க்கால்களைச் சரி செய்யுங்கள். எங்கெங்கு கிணறு இல்லையோ அங்கெல்லாம் கிணறு வெட்டுங்கள். இதே வழிகாட்டுதலை நாமே செய்திருக்கிறோமே. சங்கிலித் தொடர் குளங்களில் நீர் மேலாண்மையில் முதலில் கடைசிக் குளம் நிரம்ப வேண்டும். அதன்பிறகு முந்தைய குளம் நிரம்பவேண்டும். ஒவ்வொரு குளத்திலும் நீர் முழு கொள்ளவு வர பலகை போட்டிருப்பர் கடைசிக் குளம் நிறைவதற்கு முன்பு முந்தைய குளங்களில் பலகை போடாமல் இருக்கும். கடைசிக் குளம் நிறைந்தவுடன் அதற்கு முந்தைய குளத்தில் பலகை போடுவர். தலைக் குளத்தில் கடைசியாகப்பலகை போடுவர். இப்போது எல்லாக் குளங்களும் நிரம்பியிருக்கும். அதிகப்படியான வெள்ளம் வரும்போது பலகைகளை எடுத்துவிடுவர். எல்லாக் குளங்களிலும் நீர் வெளியேறும். சிக்கல் தோன்றாது. குளங்களுக்குச் சேதம் இருக்காது. இப்போது பலகை இல்லாமல் கலிங்கையே சுவராக எழுப்புகிறோம். இது தவறு. அதிகப்படியான வெள்ளம் வந்தால் வரிசையாக எல்லாக் குளங்களும் உடைந்துவிடும்.

மடை : ஒரே அளவு தண்ணீர் வெளியேறும், ஒன்று மூடலாம் அல்லது திறக்கலாம்.

மதகு : கொஞ்சம் கொஞ்சமாகத் திறக்கலாம், மூடலாம்.

குமுழி : சக்கைவைத்து அடைத்திருக்கும். குமுழி அமைப்பு இருக்கின்ற குளத்தில், மையத்தில் உயரமான இரண்டு தூண்கள் இருக்கும். அந்தத் தூண்கள்தான் குமுழியின் உண்மையான அமைப்பு 20 அடி உயரம் இருக்கும். அப்படி யென்றால் மண்ணுக்குள் எத்தனை அடி இருக்குமென்று எண்ணிப்பாருங்கள். இது ஒரே கல்லால் ஆனது. தண்ணீர் குளத்தில் நிறைநதிருக்கும் போது நீச்சல் தெரிந்து, முத்துக் குளிப்பது போல் மூழ்கி சக்கையை எடுத்தால்தான் தண்ணீர் வரும். ஆக ஊருக்குப் பொதுவாக ஒருவர்தான் குமுழியைத் திறக்க முடியும், மூட முடியும். வேறு யாரும் நினைத்த போது திறக்கவோ, மூடவோ முடியாது. இப்போது எல்லாமே கரைக்கு வந்துவிட்டது. பூட்டை உடைப்பது, நீரை எடுப்பது, எல்லாம் சர்வ சாதாரணமாகிவிட்டது. ஒருவர்தான் திறக்க வேண்டும் என்கிறபோது தண்ணீரை எவ்வளவு கவனத்தோடு, சிக்கனமாகப் பயன்படுத்தினார்கள் என்பதை உணர முடிகிறது.

90 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் இருந்த ஏரிகள் எண்ணிக்கையையும், இடத்தையும் குறிக்கும் வகையில் படம் வரைந்துள்ளனர். அதில் நிறைய ஏரிகள் உள்ளன. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வரைந்த படத்தில் பல ஏரிகள் காணாமல் போய்விட்டன. இப்போது இன்னும் சில ஏரிகள் காணாமல் போயிருக்கும்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு



படிப்பகம்

www.padippakam.com

எந்த ஆதாரத்தையும் எப்படிக் காக்க வேண்டும் என்பதற்கு வள்ளுவர் சொன்ன இலக்கணம், இந்தக் குறள். தண்ணீர் ஒரு ஆதாரம். இருப்பதையே நம்மால் பாதுகாக்க முடியவில்லை வளர்ச்சிப் பணியில் கோளாறு நேர்ந்துள்ளது.

ஆற்றிலிருந்து கால்வாய் பிரிக்கிறோம். அப்போது மணல் வந்து சேரும். மணல் வந்து சேர்ந்தால் கால்வாய் போய்விடும். இவ்வாறு மண்மேடிடாமல் இருக்க வாத்தலை என்கிற அமைப்பு இருக்கிறது. திருச்சி அருகில் பேட்டைவாத்தலை என்று ஊரே இருக்கிறது. ஆற்றிலிருந்து கால்வாய் பிரிக்கும் இடத்தில் ஒரு கலிங்கு அமைத்து வண்டல் படிவதை அங்கேயே நிறுத்தி, கால்வாய்கள் மண்மேடிடாமல் பாதுகாத்துள்ளனர். வண்டல் ஆற்றிலேயே போகும். வண்டல் என்றவுடன் இன்னொரு செய்தி.

'வரப்புயர நீர் உயரும்' என்று சொன்னதால் அன்று நிறைய நீர் பாய்ச்சினார்கள். அவர்களுக்குப் பாசன மேலாண்மை தெரியாது என்று சொல்லிவிட முடியாது. அன்றைக்கு வண்டல் என்பது மிக முக்கியமான மண் வளம் பேணும் பொருள். அவ்வாறு வரப்பை உயர்த்திக் கட்டுகிற போது வண்டல் அந்த நிலத்திலேயே படியும். அவ்வாறு வரப்பை உயர்த்திக் கட்டவில்லையென்றால் இதுவரை வளமுள்ள நிலம் நமக்குக் கிடைத்திருக்காது.

மேட்டூர் அணை கட்டும்போது 1934ல் அதுதான் உலகிலேயே மிகப்பெரிய அணை. நம்நாட்டு பொறியாளர்கள்தான் கட்டினார்கள். மேட்டூர் அணையின் அமைப்பே ஏரியின் அமைப்பைப் போன்றது. எல்லா அணைகளிலும் ஆறு இருக்கிற இடத்திலேதான் மிகைநீர் வழிப்போக்கி வைப்பார்கள். மேட்டூரில் மட்டும் நமது ஏரி அமைப்பைப் பார்த்து ஓரத்தில் மிகைநீர் வழிப்போக்கிகள் கட்டப்பட்டுள்ளது. மேட்டூர் அணை கட்டப்படும்போது தஞ்சாவூர் விவசாயிகள் அரசாங்கத்திடம் மனுக் கொடுத்ததுள்ளனர். அணை கட்டாதீர்கள், எங்களுக்கு வண்டல் வருவது தடைப்பட்டுப்போகும். அப்படித் தடைப்பட்டால் எங்களது விவசாயம் பாதிக்கும். அப்போது அரசாங்கம் உறுதி அளித்தது. காவிரியில் தான் நாங்கள் அணை கட்டுகிறோம். பவானி, அமராவதி நதிகளிலிருந்து வண்டல் வரும். அதனால் வண்டல் எப்போதும் போல் கிடைக்கும். மேட்டூர் அணையிலிருந்தும் தேவைப்பட்டால் வண்டலைத் திறந்து விடுகிறோம் என்று உறுதி கொடுத்த பிறகு தான் அணை கட்டப்பட்டது. இரசாயன உரங்கள் வந்த பிறகு நிலங்களுக்கு நேர்ந்த கதி என்ன என்பது நன்றாகத் தெரிந்துவிட்டது.

('முகிழ்' அமைப்பு 14,15.8.1999 தேதிகளில் மதுரையில் நடத்திய "தமிழகம்-பொருளியல் தற்சார்பை நோக்கி" கருத்தரங்கில் நிகழ்த்தப்பட்ட உரை)



படிப்பகம்

www.padippakam.com

## நூல் அறிமுகம்

### நீரும் நீங்களும்

### கண்மாய்களும் ஏரிகளும் ; நேற்று - இன்று - நாளை

*கண்மாய்கள் தமிழகத்தின் வேளாண்மையில் இன்றியமையாத பங்கைச் செலுத்தி வருகின்றன. கிராம நிர்வாக அமைப்பை இந்தியாவில் வெள்ளையர்கள் சீர்குலைத்தனர். அதன் கேடுகளை இப்போதும் நாம் அனுபவிக்கிறோம். இன்று தமிழ் நாட்டின் பல கண்மாய்கள் பராமரிக்கப்படாமல் மேடுதட்டிப் போயிருக்கின்றன. இதனால் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*கண்மாய்கள் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தானம் அறக்கட்டளை "நீரும் நீங்களும்" என்ற தலைப்பில் கருத்தரங்கை நடத்தியுள்ளது. கருத்தரங்க கட்டுரைகளை நூலாக்கி வெளியிட்டுள்ளனர்.*

1. *காலத்தை வென்ற கண்மாய்கள்.*
2. *கண்மாய்களும் உற்பத்தியும்.*
3. *கண்மாய்களும் பொருளாதார வளர்ச்சியும்.*
4. *கண்மாய்களும் சுற்றுச் சூழல் மேம்பாடும்.*
5. *கண்மாய்களின் எதிர்காலம்.*

*மேற்கண்ட ஐந்து தலைப்புகளில் விவசாயிகளின் பட்டறிவுத் தொகுப்பைக் கட்டுரைகளாக்கியுள்ளனர். கண்மாய்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற உணர்வை இந்த நூல் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் என்பதில் ஐயம் இல்லை. தமிழகத்தின் சூழல் காப்பில் மிகச் சிறந்த பணியினை தானம் அறக்கட்டளை செய்துள்ளது.*

*காலத்தை வென்ற கண்மாய்கள் தலைப்பின் கீழ் திரு. பரமசிவம் அவர்களின் கட்டுரை கண்மாய்களின் பல பரிமாணங்களை நமக்கு உணர்த்துவதாக உள்ளது.*

*வெளியீடு : தானம் அறக்கட்டளை, 18, பிள்ளையார் கோவில் தெரு, சோமசுந்தரம் காலனி, மதுரை - 625 01.*

### கண்மாய்கள் மீதான உரிமைகள்

கே. பரமசிவம், மரிக்குண்டு, தேனி மாவட்டம்

முன்னுரை

தமிழ் நாட்டில் உள்ள அனைத்து நீர் நிலை ஆதாரங்களும் (ஏரி, ஊரணி, குளம் கண்மாய்) அனைத்தும் ஆரம்ப காலங்களில் விவசாயிகளின்



படிப்பகம்

www.padippakam.com

உயிர் நாடியாக திகழ்ந்தது. இதனால் இதன் மீதான அனைத்துவித உரிமைகளும் இதன் பண்பாட்டின் சின்னமாக விளங்கிய உழவர் பெருமக்களின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. இதனால் விவசாயிகள் அதனைத் தங்களது சொந்த உடமைகளில் ஒன்றாக பாவித்து தங்கள் கிராமத்தில் கோயில்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட இதற்கு அதிகப்படியாக கொடுத்து ஒவ்வொரு ஆண்டும் பராமரித்தும், காத்தும் வந்தனர். இதன பயனால் விவசாயிகளின் ஒவ்வொரு வருட விவ்சாயத்திற்கு வேண்டிய நீர் தேவையையும் அவர்களின் குடிநீர் தேவையை மற்றும் கால்நடைகளுக்கு வேண்டிய தண்ணீரை முழுமையாக வழங்கி வந்தன. காலப்போக்கில் அரசின் கவனம் படிப்படியாக கண்மாய்களின் மீதான விவசாயிகளின் உரிமைகளில் சிறிது சிறிதாக தலையிட்டு ஒரு காலகட்டத்தில் முழுமையாக அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததன் விளைவாக நீர்நிலை ஆதாரங்களுக்கும் விவசாயிகளுக்கும் மத்தியில் ஒரு நீண்ட இடைவெளியை ஏற்படுத்திவிட்டது. விளைவாக விவசாயிகள் ஒட்டுமொத்தமாக போற்றி பாதுகாத்து நீரை பயன்படுத்தி வந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டு தனித்தனி விவ்சாயிகள் ஒட்டுமொத்தமாக போற்றி பாதுகாத்து நீரை பயன்படுத்தி வந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டு தனித்தனி விவசாயிகள் அவர்களின் தகுதிக்கு ஏற்ப கிணறுகள், ஆழ்துளைக்கிணறுகள், போர்கள் மூலம் விவசாயம் செய்ய தலையிட்டு இன்று இவைகளும் பயனற்றுப்போன நிலையில் திகைத்து நிலைகுலைந்து திக்கற்று செய்வதறியாமல் நிற்கின்றனர்.

இந்த நிலையில் மாற்றம் கொண்டுவர தமிழகம் முழுமையும் விவசாயிகள் அனைவரும் ஆங்காங்கே ஒன்றிணைந்து மீண்டும் பழைய மராமத்து முறையினைக் கொண்டுவந்து நீர்நிலை ஆதாரங்களைப் பாதுகாக்கவும், தங்களது பொதுச்சொத்தாக எண்ணி பாதுகாக்கும் முயற்சியில் தலையிட்டுள்ளனர். ஆனால் இதில் பலவிதமான நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டு முழுமையாக செயல்படுத்த முடியாத நிலை உள்ளது. ஆகையால் இதனை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவர உரிமைகள் சட்டரீதியாகத் தேவைப்படுகின்றன.

**விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டிய உரிமைகள்**

1. கண்மாய்களில் மரம் வளர்க்கும் உரிமையும் இதனைப் பராமரித்துப் பாதுகாக்கும் உரிமையும் வேண்டும்.
2. மீன் வளர்க்கும் உரிமை விவசாயிகளுக்கு வேண்டும்
3. மண் எடுக்கும் உரிமையும் விவசாயிகளுக்கே வேண்டும்
4. கரைகளை பலப்படுத்தவும், பாதுகாக்கவும் தொடர்ந்து பராமரிக்கவும் நிதி உதவிகள் விவசாயிகளுக்கே வழங்கவேண்டும்



படிப்பகம்

www.padippakam.com

5. கண்மாய்களின் நீர்பிடிப்பு பகுதி மற்றும் வரத்து கால்வாய்களை ஆக்கிரமிப்பு செய்தவர்களிடமிருந்து மீட்கும் உரிமை விவசாயிகளுக்குத் தரவேண்டும்.
6. ஒவ்வொரு வருடமும் அந்தந்த கண்மாய்களின் மூலம் கிடைக்கும் வருவாயின் ஒரு பகுதியை கொண்டு கண்மாய்களை ஆழப்படுத்தும் மற்றும் பலப்படுத்தும் வகைகளுக்கு செலவிடும் உரிமையும் விவசாயிகளின் கைகளில் தரப்படவேண்டும்.
7. கண்மாய்களின் இன்றைய சூழ்நிலையில் அதன்மீது உரிமை கொண்டாடும் வனத்துறை, மீன்வளர்ச்சிக் கழகம், வருவாய்த்துறை ஆகிய அரசின் துணைத் துறைகள் அனைத்தும் கண்மாய்களின் மீது தங்களுக்கு உள்ள உரிமைகளை முழுமையாக விவசாயிகளின் கைகளில் கொடுத்து விலகிக் கொள்ளவேண்டும்.
8. அரசானது புதிய நீர் ஆதாரங்களை ஏற்படுத்தி கண்மாய்களுக்கு வரத்துக்கால்வாய்கள் வெட்டும் போது சம்பந்தப்பட்ட விவசாயிகளின் கருத்தையும் கேட்டறியும் உரிமையும் தரப்படவேண்டும்.
9. கண்மாய்களுக்கென்று அரசு நிதி ஒதுக்கீடு செய்யும் போது கண்மாய் விவசாயிகளின் கருத்தையும் ஆலோசனையும் கேட்டறிய வேண்டும்.
10. நீரை பிற கிராமங்களுடன் பகிர்ந்து கொள்ளவும், வாங்கவும், வரிகள் விதிக்கவும், (நீர்வரிகள்) கால்வாய் சீரமைப்பு மேற்கொள்ளும் உரிமைகள், விவசாயிகளுக்கே வழங்கப்படவேண்டும்.
11. பாசன வரி வசூல் செய்யும் உரிமையும் இதன்மூலம் கண்மாய்களை பராமரிக்கும் உரிமையும் தரவேண்டும்.

### விவசாயமில்லாத கிராமங்களுக்கு வேண்டிய உரிமைகள்

1. விவசாயத்தொழில் செய்யாத கிராம மக்கள் தங்களுடைய கால்நடைகளை மேய்ச்சலுக்காக கண்மாய்களை பயன்படுத்தவும் தண்ணீர் தேவைக்கும் பயன்படுத்திட உரிமைகள் வழங்கப்படவேண்டும்.
2. கண்மாய்களில் கண்மாய் விவசாயிகளால் வைத்து வளர்த்து வரும் மரங்களின் மூலம் கிடைக்கும் காய்ந்த விறகுகளை (மட்டும்) எடுத்து பயன்படுத்தும் உரிமையும் வழங்கப்படவேண்டும்.

### கிராமத்திற்கு வேண்டிய உரிமைகள்

1. கண்மாய்களின் மூலம் கிடைக்கின்ற வருவாயின் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத் தொகையை அந்தந்த கிராமத்தின் பொது வளர்ச்சிக்காக (திருவிழா தவிர்த்து) பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்து தரவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

2. ஒட்டு மொத்த கிராமத்தின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதால் கண்மாய்கள் பராமரிப்பு செய்யும்போது கிராம மக்கள் அனைவரும் இணைந்து செயல்பட வாய்ப்பு வழங்கிடவேண்டும்.

**பஞ்சாயத்து அமைப்புகளுக்குண்டான உரிமைகள்**

1. கண்மாய் ஆக்கிரமிப்பு, அத்துமீறல் போன்ற பிரச்சனைகள் ஏற்படும் போது அங்குள்ள பஞ்சாயத்து அமைப்புகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து தீர்த்து வைக்கின்ற வகையில் உரிமைகள் அந்தந்த பஞ்சாயத்து அமைப்புக்கு வழங்கப்படவேண்டம்.
2. கண்மாய்களின் மூலம் கிடைக்கும் வருவாயில் ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை கண்மாய் விவசாயிகளிடம் இருந்து பெற்று அதனை ஒட்டு மொத்த பஞ்சாயத்தில் உள்ள மக்களின் வ்ளர்ச்சிப்பணிகளுக்காக பயன்படுத்திக்கொள்ளும் உரிகைள் வழங்கப்படவேண்டும்.
3. கண்மாய் விவசாயிகளின் பொருளாதார சக்திக்கு அதிகமாக கண்மாய்களில் பலப்படுத்தும் வேலைகள் செய்யவேண்டிய நேரங்களில் பஞ்சாயத்து நிர்வாகமும் உதவி செய்யும் வகையில் பஞ்சாயத்துக்களுக்கு உரிமைகள் தரப்படவேண்டும்.

**அரசு நிறுவனங்களுக்கு கண்மாய் மீதான உரிமைகள்**

1. அரசு நிறுவனங்களில் ஒன்றான பொதுப்பணித்தறை மட்டும் கண்மாய்களில் பலப்படுத்தும் பணிகளும் மற்றும் புதிய வரத்து வாய்க்கால்வாய்கள் வெட்டும் பணிகளை செயல்படுத்திட முயலும் போது கண்மாய் விவசாயிகளையும் கலந்து ஆலோசித்து விவசாயிகளின் கூட்டு முயற்சியுடன் இணைந்து பணிகள் செய்யும் வகையிலான உரிமைகள் தரப்படவேண்டும்.
2. கண்மாய்களின் மீது செய்யும் ஆக்கிரமிப்புகளை அகற்ற விவசாயிகள் எடுக்கும் முயற்சிகளுக்கு அவர்களுடன் இணைந்து செயல்பட வருவாய்த்தறையை கட்டாயப்படுத்த வேண்டும்.
3. கண்மாய்களில் ஏற்படும் ஆக்கிரமிப்பு அத்துமீறல் போன்ற பிரச்சனைகளில் சம்மந்தப்பட்ட நபர்கள் மீது கிரிமினல் குற்றமாகக் கருதி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள வகையில் கண்மாய்கள் மீது உள்ள உரிமைகளை தெளிவாக வரையறுக்காமல் இருப்பதால் நடைமுறையில் பலவிதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன.

வனத்துறையினர் மத்தியில் பல ஆயிரம் கண்மாய்கள் சிக்கி



படிப்பகம்

www.padippakam.com

கண்மாய்களில் பராமரிப்பு வேலைகள் செய்ய முற்படும் போது வனத்துறையினர் அனுமதி தர மறுத்து வருவதால் பல கண்மாய்கள் சுமார் 30 வருடங்களாக பலப்படுத்தும் வேலைகள் செய்ய முடியாமல் மண் மேடுதட்டி பயனற்று இருக்கின்றன.

வனத்துறையினர் தங்களுடைய மரங்களை பாதுகாக்கும் ஒரே குறிக்கோளுடன் இருப்பதால் கண்மாய்கள் நிலைப்பற்றி கவலைப்படுவதில்லை. அவர்கள் வருவாய் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு பல ஆயிரம் கண்மாய்கள் விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு வண்டல் மண் எடுத்துச் செல்வதை கூட தடுத்து வருகின்ற காரணத்தால் ஒட்டுமொத்தமாக கண்மாய்களின் நிலையும் விவசாயிகளின் நிலையும் சீரழிந்து வருகின்றன.

வருவாய் துறையினர் தங்களுக்கு வேண்டிய நபர்களுக்கு கண்மாய்களை ஆக்கிரமிப்பு செய்யவும் வரத்துக்கால்வாய்களை முழுமையாக ஆக்கிரமித்து விளை நிலங்களாக மாற்ற உரிமைகள் வழங்கி வருவதால் வரத்துக் கால்வாய்கள் இல்லாமல் இருக்கின்றன.

அரசின் பொது கட்டிடங்கள், அலுவலகங்கள் கட்டுவதற்கு ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுமையும் கண்மாய் நிலங்களையே வருவாய்த்துறையினர் கையகப்படுத்தி பயன்படுத்தி வருகின்றனர்.

மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் பல ஆயிரம் கண்மாய்களில் மீன்வளர்க்கும் உரிமை விவசாயிகள் அல்லாத இடைத்தரகர்களுக்கு வழங்கப்படுவதால் பல கண்மாய்களில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் தண்ணீரை விவசாயத்திற்காக பயன்படுத்த அனுமதிக்காததால் சிக்கல்கள் ஏற்பட்டு பல ஆயிரம் ஏக்கர் பயிர்கள் நாசமாகி வரகின்றன.

## முடிவுரை

மேற்கூறிய பல வித பிரச்சனைகளையும் நீக்கி முழுமையாக மரம், மீன், வண்டல்மண் போன்ற அனைத்தையும் பயன்படுத்தும் உரிமைகளையும் கண்மாய்களின் ஒட்டுமொத்த பராமரிப்பு, பாதுகாப்பு போன்றவற்றை அந்தந்த கண்மாய்களின் மூலம் பயன்பெறும் விவசாயிகளிடம் ஒப்படைத்தால் அவர்களுக்குத் தங்களது சொத்து போன்று பாவிக்கும் எண்ணமும் ஏற்பட்டு ஒட்டு மொத்த கண்மாய்களை தங்களால் பாதுகாக்கப்பட்டால் தான் பயன் அடையவும் முடியும் என்று எண்ணத்தால் முழுமையாக ஒன்றிணைந்து செயல்பட்டு கிராமங்களின் தண்ணீர் தேவைகளை மட்டும் அல்லாமல் பொருளாதார வளர்சியிலும் முன்னேற்றம் ஏற்பட வழி ஏற்படும். இந்நிலை படிப்படியாக தமிழகம் முழுமையும் தொடர்ந்து செயல்படுமானால் நமது அரசு கண்மாய்களுக்கு என்று ஒரு பைசா கூட செலவிட வேண்டாத நிலை ஏற்பட்டு மற்ற வளர்ச்சிப் பணியில் கவனம் செலுத்த முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்நாடு முழுமையும் இன்றைய காலகட்டத்தில் நிலவி வரும் நிலத்தடி நீர் பிரச்சனையையும் போக்கி ஆங்காங்கே உள்ள கண்மாய்களை அந்தந்த விவசாயிகளின் முன்னின்று பராமரித்து பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு உண்டான பழைய குடிமராமத்து முறையில் இருந்து வந்த அனைத்துவித உரிமைகளை வழங்கினால் நிச்சயம் வரும் 10 ஆண்டுகளில் மீண்டும் நிலத்தடி நீரை பழையநிலைக்கே உயர்த்தவும் குடிநீர்த் தேவையை அந்தந்த கிராமங்கள் பூர்த்தி செய்து கொள்ளவும் முடியும் என்பதை கடந்த 10 ஆண்டுகளாக மக்கள் அமைப்புகள் அங்காங்கே கண்மாய்களைப் பாதுகாக்க எடுத்து வரும் ஆழ்ந்த அனுபவத்தின் பயனாக உலகின் பார்வைக்குச் சமர்ப்பிக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

## நேர்காணல் : திரு. வெள்ளிமலை, இயற்கை மருத்துவர்

கோபிசெட்டிப்பாளைத்தில் மருத்துவர் வெள்ளிமலையை அறியாதவர்கள் மிகவும் குறைவு. இயற்கையோடு இணைந்த வாழ்க்கையின் மூலமே மனிதன் நோயற்ற நிலையை அடையமுடியும் என்று உறுதியாக கூறியவர். மருத்துவத்தில் பல அரிய சாதனைகளை நிகழ்த்தியவர். நோயற்ற சமூகம் பற்றி இடைவிடாது பேசியவர். திருக்குறளை புதிய வகையில் பொருள்படுத்தியவர். இன்னும் பல சாதனைகளைச் செய்வார் என்று எதிர்பார்த்திருந்த வேளையில் அகால மரணமடைந்தார். அவரது இறப்பு மருத்துவ உலகிற்கு மட்டுமல்லாமல் சமூகத்திற்கே பேரிழப்பு. மருத்துவர் வெள்ளிமலை அவர்களின் முதலாவது ஆண்டு நினைவைப் போற்றும் வகையில் அவரது வாழ்வின் இறுதி நேர்காணல் இங்கே வெளியிடப்படுகிறது.

- எனது இறுதி இலக்கு மருத்துவம் தேவையற்றது என்ற நிலை.
- நோய் என்பதே மருத்துவம்தான்.
- எல்லா நோய்களுக்கும் சிகிச்சை உண்டு.
- புற்று நோய் குணப்படுத்தக் கூடியது.
- ஆங்கில மருத்துவத்துக்கு அடிப்படை கிடையாது.
- தடுப்பூசி போடுவது தேவையற்றது.
- உணவே மருந்து.
- நஞ்சற்ற உணவே, நோயற்ற வாழ்வுக்கு அடித்தளம்.

*உங்களது இளமைப் பருவம் பற்றிச் சொல்லுங்கள்?*

**வெள்ளிமலை :** சின்ன வயதிலிருந்தே நான் பிடிவாதக்காரன். இளநீர் சாப்பிடுவது கூடப் பாவம் என்று நினைத்தேன். நுங்கு சாப்பிடுவது பாவம் என்று நினைத்தேன். கருப்பட்டி பயன்படுத்தப்பட்ட பலகாரங்களைச் சாப்பிட மாட்டேன். எங்கம்மாவுக்கு ரொம்ப வருத்தம். கிராமத்தில் போகும் போது யாரிடமும் பேசமாட்டேன். ஆடு மேய்ப்பதில் எனக்கு ரொம்ப பிரியம். ஒரு நாள் எங்கப்பா ஆடு வாங்கித் தந்தார். அன்று இரவு நான் தூங்கவேயில்லை. அந்த ஆடு என்பின்னாலேயே வரும். நான் தோட்டத்துக்குப் போகும் போது கரடு பாறை பாறையாகத் தாண்டிப் போவனே. அந்த ஆடும் தாண்டி வரும். ஆடு மேய்ப்தில் இலயித்துப் போய்விட்டேன்.

நான் பள்ளிக்கூடம் போகவில்லை 20-வயது முடிந்தபிறகு படிப்பதற்காக ஒரு உயர்நிலைப் பள்ளியில் போய் கேட்டேன் என்ன செய்து கொண்டிருந்தாய் என்று கேட்டார்கள். ஆடு மேய்த்துக் கொண்டிருந்தேன் விவசாயம் செய்துகொண்டிருந்தேன் என்று சொன்னேன். அதையே இப்போதும் பண்ணு என்று அனுப்பி விட்டனர். அதன் பிறகு திருச்சியில் ஒரு தனிப்பயிற்சிக் கல்லூரியில் ஒன்பது மாதம் படித்தேன். அங்கு வேதியியலில் நான் தயாரித்த தாளைப் பார்த்து எல்லோரும் வியப்படைந்தனர். 63 மதிப்பெண்கள் வாங்கினேன். சென்னை மெட்ரிக்குலேசன்



படிப்பகம்

www.padippakam.com

அன்றைக்கு இங்கிலாந்தில் இருப்பதைப் போன்ற தரம். அன்றைக்கு நான் படித்த வேதியியலை இன்று தலைகீழாகத் திருப்பி பயன்படுத்துகிறேன்.

வேளாண்மை, சுற்றுச்சூழல், எதிர்மின் அயனி மண்டலம் இவைபற்றியெல்லாம் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறேன் இவை ஒவ்வொன்றிற்கும் இடையிலுள்ள தொடர்புகளும் முக்கியம். இதில் நாம் எவ்வளவு தூரம் வெற்றியடைகிறோம், தோல்வியடைகிறோம் என்பதல்ல பிரச்சினை. முயற்சியில் தளரக்கூடாது. எனக்கு எல்லா உயிர்களிடத்தும் பற்றும் அன்பும் உண்டு.

***எந்த வயதில் மருத்துவத்தின் மீது உங்கள் கவனம் பதிந்தது?***

26 வயதில், அப்போது நான் வினோபாவுடன் சுற்றிக் கொண்டிருந்தேன். அவர் ஒன்றும் சாப்பிட மாட்டார். பாதி உறைந்த தயிர் கிண்ணத்தில் 4, 5 சாப்பிடுவார் அவ்வளவுதான் அவருடைய உணவு. உலக அளவில் நிருபர்கள் அவரிடம் கேள்வி கேட்பார்கள். மார்டின் லூதர்கிங், செஸ்டர் பவுல்ஸ் உட்பட மற்றும் அமெரிக்க நிருபர்களும் பேசுவார்கள் எப்படி இவ்வளவு உறுதியாக இருக்கிறீர்கள்? இந்த உணவு போதுமா? என்றெல்லாம் கேட்பார்கள். ''எனக்கு சூரிய ஒளியில் இருந்து ஆற்றல் கிடைக்கிறது. காற்றில் இருந்து ஆற்றல் கிடைக்கிறது'' என்று சொல்வார். அப்போது என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. 'நீங்கள் ஹோமியோபதி மருத்துவத்தை விரும்புகிறீர்களா என்று கேட்பார்கள்'. I prefere only sympathy என்று பதில் சொல்வார். வினோபாவின் 62-வது பிறந்தநாள் விழாவில்தான் நான் உறுதி எடுத்துக்கொண்டேன் அந்த விழாவில் பல தலைவர்களும் கலந்து கொண்டனர். அதற்கு முன்னரே ஒருமுறை வினோபாவே உடல் நலம் குன்றியிருந்தபோது காந்தியிடம் சென்று 'நான் இனிமேல் பிழைக்கமாட்டேன்' என்று சொன்னார். 'நீ ஷில்லாங்கில் போய் இரு' என்றார் காந்தி. அவ்வளவு விலை உயர்ந்த மருத்துவமோ, செலவோ செய்யமாட்டேன் என்று சொன்னார் வினோபா. வார்தா அருகில் வினோபாவே பெயரில் ஒரு நிறுவனம் இருந்தது. அந்த நிலத்தில் சென்று முதலில் கற்களைப் பொறுக்கினார். பின்னர் ஒரு கையில் வேலை செய்தார். படிப்படியாக தோட்டம் முழுவதிலும் வேலை செய்தார். அதன் பிறகு ஏறத்தாழ 16000 மைல் அவர் நடந்தார். அதிலிருந்து எனக்கு இயற்கையின் மீதுதான் அளவு கடந்த நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. அதற்கு வினோபாவே உந்து சக்தியாக இருந்தார்.

நான் கோபி நகருக்கு வந்து 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதற்கு முன்னர் கிராமத்தில் இருந்தேன் கோபி மாசுகள் சூழ்ந்த நகரம் குடிநீர் கிடையாது. அளவுக்கதிகமான சப்தம். கீழ்பவானி ஆற்றில் நம்மாழ்வாரைக் 'குளித்துவிட்டு வாருங்கள்' என்றேன். இந்தத் தண்ணீரில் நான் குளிக்கமாட்டேன் என்று அவர் சொல்லிவிட்டார். அவ்வளவு அசுத்தம். அதே தண்ணீர்தான் கோபியில் குடிநீராக வருகிறது. இவ்வளவு மாசுகளையும் தாங்கிக் கொண்டுதான் உயிர் வாழ வேண்டியுள்ளது.

இங்கு வரக்கூடிய நோயாளிகள், நோய் முற்றிய நிலையில் வருகின்றனர். இருதயக் கோளாறு, சிறுநீரகக் கோளாறு, நுரையீரல் கோளாறு எல்லா



படிப்பகம்

www.padippakam.com

மருத்துவமனைகளிலிருந்தும் கைவிடப்பட்டவர்களின் எண்ணிக்கை இன்று அதிகரித்து வருகிறது. மருத்துவம் இன்று பணம் கொட்டும் தொழிலாக மாற்றப்பட்டு வருகிறது. இறக்கும் தருவாயில் வரும் நோயாளிகளைப் புறக்கணிக்கக் கூடாது என்பதற்காக சவாலாக மருத்துவம் பார்க்கிறேன். பல சமயங்களில் வெற்றி கிடைத்துள்ளது. தோல்வி அடையும்போது என்ன நினைப்பார்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இருதயக் கோளாறு முற்றிவிட்டது. இனிமேல் வீட்டில்போய் படுத்துக் கொண்டு சாவை எதிர்கொள்ள வேண்டியதுதான் என்று அல்லோபதி மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்கள் வருகின்றனர். நோயாளியின் அறிக்கை படிப்பதற்கே ஒருவாரம் ஆகிவிடுகிறது. ஒரு வாரம் கழித்து சிகிச்சையை ஆரம்பித்து குணமானவுடன், போக மறுக்கின்றனர். எங்களுக்கு பயமாக இருக்கிறது நாங்கள் இங்கேயே இருக்கிறோம் என்கின்றனர்.

**தத்துவரீதியாக அல்லோபதிக்கும் இயற்கை மருத்துவத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

அல்லோபதிக்கு அடிப்படையோ, தத்துவமோ கிடையாது. இயற்கை மருத்துவம் தத்துவ ரீதியானது. ஆகாயம்தான் முதல் மூலம். அதிலிருந்து காற்று காற்றிலிருந்து தீ, தீயிலிருந்து தண்ணீர், தண்ணீரிலிருந்துதான் நிலம் வருகிறது. நிலத்திலிருந்து பல்வேறு உயிர்கள் தோன்றின. சித்த மருத்துவத்தில் ஐம்பூதங்களைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. அலோபதிக்கு இதெல்லாம்கிடையாது.

**அல்லோபதி ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருத்தமானதா?**

அங்கும் பொருந்தாது. அவர்களும் மாற்று மருத்துவத்திற்குச் சென்று கொண்டிருக்கின்றனர். நூற்றுக்கணக்கான மாற்று மருத்துவம் உலகெங்கும் நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கிறது. எத்தனை வகையான மருத்துவமுறைகள் வந்தாலும் உணவில் நாம் எவ்வளவு தூரம் கவனம் செலுத்துகிறோம் என்பதைப் பொருத்துதானே மற்றவை எல்லாம். இதுதான் இத்தனை ஆண்டுகால எனது அனுபவம் சொல்கிறது. அக்குபஞ்சர், அக்குபிரசர் என என்ன செய்தாலும் உணவு ஒரு மிகப்பெரிய காரணி. அன்னத்தை அதிகமாகப் புசித்தவன் மல்லவனும் மலர்ந்துவிடுவான். மல்யுத்தத்துக்குப் போகிறவன்கூட அதிகம் சாப்பிட்டால் மல்லாந்து போய்விடுவான்.

நான் ஒரு முறை சர்க்கஸ் போயிருந்தேன். அந்த சர்க்கஸில், பெரிய இரும்புக் குண்டைத் தூக்கி எறியும் வீரனுக்கு காய்ச்சல் வந்துவிட்டது. அதன்பின்னர் அவனால் எழவே முடியவில்லை. ஃபுகோகா 'நீங்கள் எல்லாச் செயல்களையும் செய்கிறீர்கள் கடைசியில் பாக்டீரியாவுக்கு பயப்படுகிறீர்கள்' என்கிறார் நமது உடலின் நோய் எதிர்ப்புத் திறன் பெருமளவில் குறைந்து வருகிறது.

**1987ல் இயற்கை மருத்துவத்திற்குகென நிலம் வாங்கினீர்கள் என்னென்ன வேலைகள் செய்தீர்கள்?**



படிப்பகம்

www.padippakam.com

நிலத்தை பதிவு செய்யும்போதே உயிர்ச்சூழல் மண்டலம் என்றுதான் பதிவு செய்தோம். முதலில் வருமானம் எங்களுக்கு வரும் என்று கடலை போட்டோம். ஒன்றும் வரவில்லை. மரக்கன்றுகள் நட்டுப் பார்த்தோம். வரவில்லை.சிறிய அளவு குழிபோட்டு வைத்தோம். அதுவும் வளரவில்லை. அதற்குப்புறம் ஆழமான குழியும் அதில் உயிர மூடாக்காகவும். மூடாக்காகவும் விதைகளையும், இலைத்தழைகளையும் போட்டோம். தரிப்பயறு விதைகளைத் தூவினோம். புதர்போல வந்தது. அதில் வைத்த மரக் கன்றுகள் பிழைத்தன.

மலைப் பகுதியாக இருப்பதால் மண் அரித்துப் போகிறதே என்று ஒரு வாய்க்கால் போய் தோண்டினோம். அந்த வாய்க்காலில் சில மரக்கன்றுகளை நட்டோம். தேக்கு, சவுக்கு, முந்திரி போன்ற மரங்கள் நன்கு வளர்ந்தன.

நிலத்தில் ஆங்காங்கே ஆவாரை இருந்தது. கடலை போடும்போது அவற்றையெல்லாம் தோண்டிப் போட்டுவிட்டோம். அது தவறென்று பின்னர் உணர்ந்தோம். ஆவாரை, பயறுவகைத் தாவரம் என்று எங்களுக்குத் தெரியாது. நம்மாழ்வார் சொன்னபின்புதான் தெரிந்தது. அதற்கப்புறம் சூபாப்புல் விதைகளை, நம்மாழ்வாரின் ஆலோசனைப்படி தூவினோம். நிறைய வரப்புகளைப் போட்டோம். மூடாக்குகள் நிறைய பயன்படுத்தினோம். இதன் விளைவு மழை நீர் நிலத்துள் இறங்கியது. நீர்மட்டம் உயர்ந்தது. நட்டிய மரக்கன்றுகளுக்கு உயிர்த்தண்ணீர் விட்டதோடு சரி. அவை பிழைத்தது. இன்று மரமாக வளர்ந்து வருகிறது. புல் புதர்கள் நிறைய வளர்ந்துள்ளது. மூடாக்குகளுக்காக எங்கும் செல்ல வேண்டியதில்லை.

**மருத்துவம் செய்வது முக்கிய நோக்கம். அதற்காகத்தான் நகரத்திலிருந்து தூரத்திலும், மலைப்பகுதியையும் தேர்ந்தெடுத்தாகச் சொல்கிறீர்கள். வேறு ஏதேனும் சிறப்புக் காரணங்கள் உள்ளனவா?**

காற்று மண்டலம், தண்ணீர், உணவு எல்லாமே நஞ்சற்றதாக தூய்மையாக இருக்க வேண்டும். இளநீரே இன்று நஞ்சுடன் வருகிறது. மரத்தின் வேரில் நஞ்சு டப்பாவைக் கட்டுகின்றனர். வெள்ளிரிப்பிஞ்சு சாப்பிடலாம் என்று நினைக்க முடியாது. நுங்கு சாப்பிடலாம். பனைமரத்துக்கு யாரும் நஞ்சு செலுத்துவதில்லை. ஆனால் பனைமரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பயிர்களுக்கு தெளிக்கப்படும் நஞ்சுகள் இதில் சேர வாய்ப்புள்ளது. இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்குத்தான் அந்த இடத்தை தேர்வு செய்துள்ளோம். உயரமான இடமாக இருப்பதால் பிறர் நிலத்திலிருந்து இரசாயனங்களோ பிற நஞ்சுகளோ வராது. எனது இறுதி இலட்சியம் மருத்துவம் பார்க்கக் கூடாது என்பதுதான். எதிர்மின் அயனி மண்டலத்தில் நோய் குணமாகும். நகரத்தை விட்டு நீங்கும் போது நாம் எதிர்மின் அயனி மண்டலத்திற்கு வருகிறோம். நேர்மின் அயனி மண்டலம் நோய் உண்டுபண்ணக்கூடியது. ஒரு குறிப்பிட்ட பகுதியையே அவ்வாறு மாற்றி அமைத்துவிட்டால் அந்தப் பகுதிக்குச் சென்றாலே குணமடைவர். மருத்துவம் தேவையில்லாமல் போகும். ஏ.சி. அறையில் இருப்பது நேர்மின் அயனி மண்டலம். அதை எப்படி எதிர்மின் அயனி மண்டலமாக்குவது என்று ஆராய்ச்சி நடந்து வருகிறது. பொதுவாக உயரம்



படிப்பகம்

www.padippakam.com

போகப்போக எதிர்மின் அயனி மண்டலம் வரும். அதனால்தான் எல்லாமலைகளின் உச்சியில் கோயில் கட்டியுள்ளனர். நம் முன்னோர்கள் எப்படியோ இந்தத் தத்துவத்தை அறிந்துள்ளனர்.

**பிரித்தானியரின் வரவுக்குப் பின்னர் நம்நாட்டில் அல்லோபதி மருத்துவம் கொண்டுவரப்பட்டது. அல்லோபதி மருத்துவம் நம்மக்கள் மீது ஏற்படுத்தியுள்ள கேடுகள் அளவிட முடியாதவை. இவற்றிற்கு தீர்வுகள் என்று எதைச் சொல்ல விரும்புகிறீர்கள். எங்கும் நோய். குடும்பத்தில் நோய் இல்லாதவர்களே குறைவு என்கிற நிலைமை.**

நோயே ஒரு மருத்துவம். இயற்கை மருத்துவம் Disease itself a treatment doesn't require any sort of a treatment.

திருக்குறளில்

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உனின்.

நோயே நோய்க்கு மருத்துவம் என்கிறபோது இன்னொரு மருத்துவம் தேவையில்லை. இந்த நோய்க்கு இந்த மருந்து அந்த நோய்க்கு அந்த மருந்து என்று சொல்லி முடிவற்றுச் செல்கிறது அல்லோபதி. அவர்கள் முடிவைத்தான் பார்க்கின்றனர். அடிப்படையைப் பார்ப்பதில்லை.

ஜெர்மன் டாக்டர் லூயிஸ் குனே என்பவர் Unity of Cause, unity of definition unity of remedy என்று ஒரு தத்துவத்தைச் சொல்லியுள்ளார். ஒரே காரணம்தான் வயிற்றில் பொருமலாகி ஜீரணக் கோளாற்றை ஏற்படுத்துகிறது. ஆயிரம் வகையான நோய்களுக்கும் ஒரே காரணம்தான் அடிப்படைக் காரணத்தைத் தீர்ப்பதுதான் நமது வேலையாக இருக்க வேண்டும்.

எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்
எல்லா நோய்களுக்கும் வயிறே பிரதானம்.

எனவே, வயிற்றைச் சரிசெய்தாலே பெரும்பாலான நோய்கள் போய்விடும். அதைச் சரிசெய்ய யாரும் முயற்சி செய்வதில்லை.

**அல்லோபதியில் மிக வளர்ந்த நிலையில் இருப்பது, சோதனை. உடலுக்குள் என்ன நடக்கிறது என்பது பற்றிய சோதனைகள், X Ray, Scan, போன்றவை. மற்ற மருத்துவங்களுக்கு இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். என்கின்றனரே அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

பயன்படுத்துவது தவறு இல்லை. நோயாளி வந்தவுடன் சிறுநீர், மலம், உப்பு, சர்க்கரை சோதனைகளைப் பார்த்துக் கொள்கிறோம். சந்தேகம் வந்தால் கல்லீரல், சிறுநீரகம் போன்றவை எப்படி இயங்குகின்றன? என்று Scan கூடப் பார்க்கிறோம். பார்த்துவிட்டு அதற்கு ஏற்றார்போல் சிகிச்சை அளிக்கிறோம். அல்லோபதி மருத்துவர்கள் சோதனை செய்வதைவிட ஒருபடி மேலே நாம் செய்யவேண்டியுள்ளது. ஒரு சிறுநீரக மருத்துவமனையில் தப்பும் தவறுமாக



படிப்பகம்

www.padippakam.com

சிகிச்சை அளிக்கின்றனர். அவர்கள் கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி ஏனோதானோ என்று சோதிக்கின்றனர். நாம் இந்த சோதனைகளைச் செய்யச் சொல்லும்போது பொறுமையாக தெளிவாகச் செய்கிறோம். சோதனை கூடாது என்பதல்ல. ஆனால் சோதனையே தீர்வல்ல. நிலவரம் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கையை நோக்கி நாம் செல்லச்செல்ல படிப்படியாக இந்த சோதனை முறைகள் அவசியமற்றுப் போகும்.

நான் இன்று 20-வது நாளாக உண்ணாநோன்பு இருந்து வருகிறேன். முன்பெல்லாம் உண்ணாவிரதம் தொடங்கி மூன்றாவது நாள் 60 கிலோ மீட்டர்கள் சைக்கிள் ஓட்டியிருக்கிறேன். ஆனால் தற்போது அவ்வளவு வேலை செய்ய முடியவில்லை. வயது ஒரு காரணம். மாசுபாடுள்ள சூழலில் வாழ்வது முக்கிய காரணம்.

எல்லா நோய்களையும் இயற்கை மருத்துவத்தில் குணப்படுத்த முடியும். தீர்வில்லாத நோய்களே இல்லை. எய்ட்ஸ் நோயையும் குணப்படுத்த முடியும். எய்ட்ஸ் என்று சொன்னவுடன் அல்லோபதி மருத்துவத்தில் பயங்கரமான மருந்துகளைக் கொடுத்து நோயாளி தாங்கும் திறனையும், இயல்பான எதிர்ப்புத் திறனையும் அழித்து விடுகின்றனர். மருந்தினால்தான் சாவு வருகின்றதே தவிர எய்ட்ஸினால் அல்ல. இங்கு வந்து குணமடைந்த எய்ட்ஸ் நோயாளிகள் திரும்பவும் செல்ல மறுக்கின்றனர். அந்த அளவு பயமூட்டப்பட்டுள்ளனர் மக்கள். இன்றும் எய்ட்ஸ் நோய்க்குச் சரியான வரையறை இல்லை. பேடண்ட் உரிமை பெறுவதற்குத்தான் அலைகின்றார்கள்.

**அல்லோபதி மருத்துவத்தில் பல சமயங்களில் இன்னும் சில மணிநேரத்தில் அறுவை சிகிச்சை செய்தால்தான் பிழைக்க முடியும் என்கின்றனர். அந்தமாதிரியான நோயாளிகளுக்கு எப்படி சிகிச்சை அளிப்பீர்கள்?**

ஆபரேசன் செய்ய வேண்டியிருந்தால் உடனே செய்யணும். இரத்தம் கொடுக்க வேண்டிவந்தால் கொடுக்க வேண்டும். சாதாரணமாக அடிக்கடி இரத்தம் கொடுக்கக்கூடாது. சிறுநீரகக் கோளாறுள்ள நோயாளிக்கு (டயலசீஸ்) இரத்த மாற்று சிகிச்சை அளிக்கின்றனர். மூன்று நான்கு முறை டயலசீஸ் செய்தவுடன் இரத்தம் குறைந்துவிடும். அப்போது இரத்தம் கொடுக்கத்தான் வேண்டும். ஹீமோகுளோபின் குறைந்தால் மூச்சுத் திணறல் ஆரம்பிக்கும். 35க்குக் கீழ் ஹீமோகுளோபின் அளவு இருந்தால் உடனே இரத்தம் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம். இல்லையென்றால் ஒரு இரவுக்கூடத் தாங்க முடியாது. இதுபோன்ற நடவடிக்கைகளில் நாம் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். இப்போது வருகின்ற சூழல் நாசம், மாசுபாடு இவற்றின் காரணமாகவே அல்லோபதியை நாம் துணை மருத்துவமாகச் சில காலம் வைத்திருக்க வேண்டியுள்ளது. உணவுமுறை, வாழ்க்கைமுறையில் மாற்றம் ஏற்படுத்திக் கொள்ளும்வரை நமக்கு இது தேவைப்பட்டே தீரும். ஆனால் அல்லோபதி மருத்துவத்தினர் இந்த நிலையை தமக்குச் சாதகமாக எடுத்துக் கொள்கின்றனர். Physio Theraphy முறையை அல்லோபதியினர் தமது மருத்துவ முறை என்று



படிப்பகம்

www.padippakam.com

சொல்வதாக டெல்லியிலிருக்கும் எனது நண்பர் சொன்னார். காலப்போக்கில் இயற்கை மருத்துவமும் அல்லோபதிதான் என்று சொல்லப் போகின்றனர். எனவே விழிப்புடன் இருக்க வேண்டியுள்ளது.

**அல்லோபதி மருத்துவத்தை அதன் அடிப்படைகளை நாம் அம்பலப்படுத்தி ஆக வேண்டும் என்கிறீர்கள்?**

இன்று கூட ஒரு சிறுநீரக நோயாளிக்கு குளுகோஸ் ஏற்றுகின்ற வரை தொலைபேசி மூலம் வரச் சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு சோர்வு அதிகரித்து விட்டால், மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவது கடினம். ஒரு தடவை டயலசீஸ் செய்தவர்களுக்கு நேரடியாக இரத்தம் கொடுக்க முடியாது. அவர்களுக்கு இரத்தம் கொடுக்க வேண்டுமெனில் டயலசீஸ் மூலம்தான் கொடுக்க முடியும். நேரடியாகக் கொடுத்தால் வயிற்றாலை, அல்லது வாந்தி வரும். இது பெரும்பாலான டாக்டர்களுக்கே தெரியவில்லை.

சிறுநீரக நோயாளிகளின் சிறுநீரகத்தை அகற்ற வேண்டியதில்லை. எந்த நிலையிலிருந்தும் புதுப்பிக்கலாம். இன்னொரு கிட்னி கொடுத்தால் அதுவும் பழுதடைந்தாகத்தான் இருக்கும். யாருடைய கிட்னியும் தாக்குப் பிடிக்கும் நிலையில் இல்லை. எல்லோரும் காபி, டீ சாப்பிட்டு கிட்னியைக் கெடுத்து வைத்துள்ளனர். அவரவர் சிறுநீரகத்தையே புதுப்பிப்பதே எளிது இதிலுள்ள இரகசியம் என்னவெனில், தோலில் உள்ள ஒவ்வொரு வியர்வைத் துவாரமும், கிட்னிதான் பல இலட்சக்கணக்கான கிட்னி இருக்கிறது. அதைச் சரிசெய்துவிட்டால் கிட்னிக்கு வேலை குறையும். அதே போலத்தான் நுரையீரலுக்கும் தோலைச் சரிசெய்தால் நுரையீரல் சரியாகும்.

எனவே, ஒட்டுமொத்த சிகிச்சைதான் தீர்வைத் தரும். இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்பது தோல்வியில்தான் முடியும். முதலில் கல்லீரல் பாதித்துத்தான் சர்க்கரை நோய் வருகிறது. பிறகு கணையம் கெடுகிறது. கணையம் கெடுவதற்கு கணையம் அல்ல பொறுப்பு அல்லோபதியில் கணையம்தான் என்கின்றனர். கல்லீரல் கெட்டுத்தான் சிறுநீரகம் கெடுகிறது. கல்லீரல் கெட்டுத்தான் நுரையீரல் கெடுகிறது. கல்லீரல் கெட்டுத்தான் இருதய நோய் வருகிறது. கல்லீரல் கெட்டுத்தான் மூட்டுவாதம் வருகிறது. இதற்கெல்லாம் மருத்துவம் கிடையாது. கடைசியில் வால்வு எல்லாம் சேதமடைந்துவிட்டது. வீட்டில் போய் படுத்துக் கொள்ளுங்கள் என்கின்றனர். அத்தகைய நிலையிலிருந்த நோயாளியை எடுத்து நாங்கள் சிகிச்சை அளித்தோம். மூன்றுமாதத்தில் சரிசெய்தோம். சவாலுக்காக எடுத்து செய்துள்ளோம். எல்லாவற்றிலும் வெற்றி கிட்டும் என்று சொல்லமுடியாது. சுற்றுச் சூழல் மிகவும் முக்கியம். இதற்காகத்தான் மலையைத் தேர்ந் தெடுத் இயற்கை மருத்துவ மையம் ஏற்படுத்த விரும்பினோம்.

**உயிர் இயங்கியல் மாற்றம் (Bio-logical Transmutation) பற்றிச் சொல்லுங்கள்.**

நாம் களிமண்ணை மருத்துவத்தில் பயன்படுத்தியுள்ளோம் காந்தி போன்றவர்கள் பயன்படுத்தியுள்ளனர் ஆனால் வெளிப்பூச்சுக்கு மட்டுமே



படிப்பகம்

www.padippakam.com

பயன்படுத்தியுள்ளனர். இந்த ஆய்வை பிரெஞ்சுஅறிஞர் ஒருவர் ஆராய்ந்துள்ளார். அவர் சொல்வது என்னவெனில் முதலில் களிமண்ணை உள்ளுக்குள் கொடுத்து, கழிவுகளை எல்லாம் அகற்றிய பிறகே மேல் பூச்சுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று நிறுவியுள்ளார். அவரது ஆய்வின் மையம் உயிருக்குள் ஒரு மூலம் இன்னொன்றாக மாற்றப் படுகிறது. என்பது அதற்கு முன்னர் வேதியியலில் ஒரு மூலம் குறைந்தால் அதையே கொடுக்க வேண்டுமென்பது விதியாக இருந்தது. இரும்புச் சத்துச் குறைந்தால் இரும்புச் சத்துதான் கொடுக்க வேண்டும். சுண்ணாம்புச் சத்து குறைந்தால் சுண்ணாம்புச் சத்துதான் கொடுக்க வேண்டும். என்று இருந்தது. ஆனால் முன்பே நமது சித்தர்கள் ஒரு மூலத்தை இன்னொன்றாக, இரும்பைத் தங்கமாக மாற்ற முடியும் என்று நிறுவியுள்ளனர். அதை முன்பு யாரும் நம்பவில்லை. தற்போது நம்ம முடியும் என்கிற அளவுக்கு ஆய்வுகள் வெளிவந்துள்ளன. கோதுமையின் தவிட்டில் மாங்கனீஸ் சத்து இருக்கிறது. மாங்கனீசுதான் இரும்பாக மாறமுடியும். வயிற்றில் குழந்தை இருக்கின்றபோது இரும்புச் சத்து டானிக் கொடுக்கின்றனர். அது கொடுக்கக் கூடாது. அதற்குப் பதிலாக ஒன்று உணவில் கொடுக்க வேண்டும். அல்லது களிமண் தண்ணீர் கொடுக்க வேண்டும். களிமண் தண்ணீரில் இரும்பு இல்லை. ஆனால் எப்படியோ இரகசியமாக வேறு மூலத்திலிருந்து உடல் இரும்பை எடுத்துக் கொடுக்கிறது. எப்படி எடுத்துக்கொடுக்கிறது என்பதை இன்னும் கண்டுபிடிக்கமுடியவில்லை. அதற்குரிய கருவிகளும் இல்லை, வார்த்தைகளும் இல்லை.

புற்றுநோய் சிகிச்சைக்கு இந்த முறையை நாங்கள் பயன்படுத்துகிறோம். புற்றுநோயின் அடிப்படை என்ன என்பது பற்றி ஆய்வு செய்தோம். அதாவது இரத்தத்தில் இரும்புச் சத்து குறைகிறபோது 35க்கும் கீழ் போகும்போது ஜவ்வுகளில் புற்று வருகிறது. கேன்சர் இன்ஸ்டியூட் டாக்டர் ஒருவர், தனது பாட்டியை இன்ஸ்டியூட்டில் அட்மிட் செய்ய முயற்சி செய்து கொண்டிருந்தார். அவரது பேத்தி எனது மருத்துவமனையில் ஒற்றைத் தலைவலிக்கு சிகிச்சை எடுத்துக் கொண்டார். குணமானது. பின்னர் தனது பாட்டியை எனது மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கூட்டி வந்தார். உடலில் இரும்புச் சத்தின் அளவு 40க்கும் குறைவாக இருந்தது. அந்த டாக்டர், இவ்வளவு குறைவாக ஹீமோ குளோபின் இருக்கும்போது என்ன சிகிச்சை செய்வீர்கள் என்று என்னிடம் கேட்டார். நான் அவரை நீங்கள் என்ன சிகிச்சை செய்வீர்கள் என்று திருப்பிக் கேட்டேன். அவரிடம் பதில் இல்லை. ஏனென்றால் அல்லோபதியில் இதற்கு சிகிச்சை இல்லை. பிறகு நான் சிகிச்சை அளித்த பிறகு ஹீமோகுளோபின் அளவு 70ஆக உயர்ந்தது. நாங்கள் மேஜிக் ஒன்றும் செய்யவில்லை. களிமண் பவுடர், திராட்சை, இரண்டைத்தான் கொடுத்தோம். மற்றவை, உடல் முழுக்க சமப்படுத்துதல். அதாவது wholistic தனித்தனி உறுப்பாக பார்க்காமல் முழுமையான உடலுக்கு மருத்துவம் பார்த்தோம்.

சிறுநீரக நோயாளிகள் முதலில் வரும்போது, ஆய்வுக்கு எடுப்பதற்கே சிறுநீர் வருவதில்லை. 24 மணிநேரத்தில் சரிசெய்து தாராளமாக சிறுநீர் போகும். தொண்டைப் புற்று வந்து, உணவே இறங்காமல் இருந்தவர்கள் 24 மணிநேரத்தில் உணவு சாப்பிடும் அளவுக்கு தேறினர். இந்த நோயாளியும் புற்று நோய்



படிப்பகம்

www.padippakam.com

இன்ஸடியூட்டில் இருந்து வந்தவர்தான். 20 நாட்களில் குணமானது தெரிந்தது. இருப்பினும் அமாவாசை பௌர்ணமி மற்றும் அஷ்டமி நாட்களில் குணமாக்கும் நெருக்கடி வந்தது. நோய் நெருக்கடி என ஒன்று உண்டு. குணமாக்கும் நெருக்கடி என ஒன்று உண்டு. ஓரிரு வருடங்கள் கழிதது அந்தப் பெண் தனக்கு எநத நோயுமே இல்லை. தற்போது ஆரோக்கியமாக இருக்கிறேன் என்று இங்கு வந்து சொல்லிவிட்டுச் சென்றார்.

மேற்கத்திய நாட்டினருக்கும் நமக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு. ஐரோப்பியர்கள் உண்ணா நோன்பிருந்தால் அமிலப் பற்றாக்குறை ஏற்படும். அமிலம் குறைந்துவிட்டால் செரிமானமே ஆகாது. எனவேதான் அவர்கள் பியர், போன்ற பழரசங்களை அதிகம் சாப்பிடுகின்றனர். அது அவர்களுக்கு இன்றியமையாதது. நம்மைப் பொறுத்தவரை புளிப்பு அதிகம் இருப்பதுதான் எல்லா நோய்களுக்கும் காரணம். இந்த அடிப்படை வேறுபாட்டைப் புரிந்துகொள்ளாமல் ஏராளமான நூல்கள் வெளிவந்துவிட்டன. இதை ஈயடிச்சான் காப்பி என்று சொல்வதுதான் சரியாக இருக்கும்.

தடுப்பூசி போட்டு நோய்களைக் கட்டுப்படுத்துவது தேவையற்றது. 1000 நோய்கள் வரும் அத்தனைக்கும் தடுப்பூசி போட முடியுமா? சில ஆண்டுகளுக்கு முன் இளம்பிள்ளை வாதத்தால் நடக்க முடியாத பல சிறுவர்களை இங்கு சிகிச்சை கொடுத்து நடக்க வைத்தோம். நோய் என்பது இயற்கையான தடுப்பு முறை. அதனையே நாம் தடுப்பது எதிர்விளைவுகளையே தரும். இளம்பிள்ளை வாதத்திற்கு தடுப்பூசி போடும் அதிகாரி தனது குழந்தைக்கே அந்நோய் தாக்கி இங்கு வந்து சிகிச்சை எடுத்துக் கொண்டு சென்றார். அதாவது தடுப்பூசி போடுவதாலேயே சில சமயம் நோய் வருகிறது. என்பதுதான் நான் கண்டறிந்துள்ளது. கால்கள் செயல் இழந்து நரம்புகள் சுருங்குவதற்குள் வந்தால் நடக்க வைப்பதில் சிக்கல் ஒன்றுமில்லை. அவ்வாறு உடனடியாக வந்த குழந்தை ஒன்றிற்கு நான் சிகிச்சை அளித்தேன். கால்களில் கோளாறு ஒன்றுமில்லை. வயிற்றில் கோளாறு இருந்தது. அதனை நீக்கியபோது குழந்தை நடக்கத் தொடங்கியது.

**சந்திப்பு : மு. குமரவேல்.**



படிப்பகம்

www.padippakam.com

# தேவை நமது மக்கள் தொழில் நுட்பம் - 1

- கோ. நம்மாழ்வார்

இது திருவள்ளுவர் 2031 ஆம் ஆண்டு மே திங்கள். பல மாநிலங்கள் வறட்சியில் சுருள்வதாகத் தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன. ஒட்டகம் குடிநீர் இல்லாமல் செத்துக்கிடக்கும் காட்சி வெளியாகியுள்ளது. மக்கள், ஆடு, மாடு நிலைமை பற்றி பிறகு பேசலாம். நாடு தொழில் நுட்பத்தில் முன்னேறியுள்ளது என்று அடிக்கடி பேசப்படுகிறது. வாழ்க்கையை முடித்து வைக்கும் தொழில் நுட்பம் முன்னேற்றம் ஆகுமா? நாடே பாலை நிலமாகிறதே. அப்படியானால், தொழில் நுட்பம் என்பது தான் என்ன? அது பொதுவானதா? இந்தியாவிலும் மற்ற ஏழை நாடுகளிலும் புகுத்தப்பட்ட பச்சைப் புரட்சி தொழில் நுட்பம் எத்தகையது? அதனால் விளைந்தது என்ன? யாருக்கு லாபம்? அதற்கு முன்பு இருந்த தொழில் நுட்பம் உண்மையிலேயே பிற்போக்கானது தானா? இந்தக் கேள்விகளுக்கு இந்தக்கட்டுரை விட காண முயல்கிறது.

**தொழில் நுட்பம் என்பது என்ன?**

1993ல் பம்பாயில் நடந்த விஞ்ஞான தொழில் நுட்ப மாநாட்டில் “தொழில் நுட்பம்” என்பது பற்றி விளக்கம் அளித்தார்கள். அதன்படி, அறிவியல் அடிப்படையில் வணிக நோக்கில் வடிவமைக்கப்படும் உத்தியே தொழில் நுட்பம் (டெக்னாலஜி) என்றார்கள். படித்தவர்கள் மத்தியில் கூட அறிவையும் தொழில் நுட்பத்தையும் குழப்பிக்கொள்ளும் போக்கு உள்ளது. அறிவுமாற முடியாதது “மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு”என்கிறது வள்ளுவம். தொழில் நுட்பம் இடத்திற்கேற்பவும் காலத்திற்கு ஏற்பவும் நோக்கத்திற்கு ஏற்பவும் மாறக்கூடியது.

எடுத்துக்காட்டுக்கு, பல் துலக்குவதைப் பார்ப்போம். உடல் நலம் காக்க அன்றாடம் பல் துலக்குவது தேவை. இது அறிவு. பல்பொடி கொண்டு துலக்குவதோ ஆலும் வேலும் பயன்படுத்துவதோ தொழில் நுட்பம்.

மற்றொரு எடுத்துக்காட்டாக உழவை எடுத்துக்கொள்ளலாம். நிலத்தை உழவு செய்வதன் விளைவாகச் செடியின் வேர் வளர்ச்சிக்கு வாய்ப்பு கூடுகிறது. இது அறிவு. என்றும் மாறாதது. அது உண்மை. தொழில் நுட்பம் என்பது அதற்காக ஒரு கலப்பையை உருவாக்கிப் பயன்படுத்துவது. தமிழர்கள் மாட்டைப் பயன்படுத்தினார்கள், ஆப்பிரிக்கர்கள் கழுதையைப் பயன்படுத்தினார்கள். ஐரோப்பாவில் முன்பெல்லாம் குதிரைகளைப் பயன்படுத்தினார்கள். இதற்கேற்ப கலப்பை பொருத்தும் கயறு இவைகளில் கூட மாறுதல் இருக்கும். ஏன்? சிந்து சமவெளிக் கலப்பையில் மோழி இருக்கவில்லை என்று அறிகிறோம். தொழில் நுட்பம் நடு நிலை வகிப்பது இல்லை.

“இன்று தொழில் நுட்பம் வேறு சிலர் கையில் இருக்கிறது. தொழில் நுட்பமும் கருவிகளும் பொதுவுடைமையாகி விட்டால் நிலைமை சீராகிவிடும்”



படிப்பகம்

www.padippakam.com

என்று ஒரு சிலரால் பேசப்பட்டது. அது சரியல்ல என்பதை வரலாறு நிருபித்து வருகிறது. ருசியாவில் செர்னோபில் அணுவுலை வெடித்த போதும் மக்கள் மடிந்தார்கள், ஊனமுற்றார்கள். அமெரிக்கா ஜப்பானில் அணு குண்டு வெடித்த போதும் இதுவே நடந்தது. இந்தியாவில் குண்டு வெடித்தாலும் இதுவே கதி. மக்கள் வாழ்க்கை சூழல் வளத்தை ஆதாரமாகக் கொண்டது. சூழலைக் கெடுக்கும் ஒரு தொழில் நுட்பம் எந்த இடத்திலும் யார் கையிலும் நன்மை பயக்க முடியாது. அப்படித்தான் சுரங்கப் பொருட்களைப் பயன்படுத்திச் செய்யப்படும், இயக்கப்படும் எந்தப் பொருளும் எந்திரமும் நன்மை பயக்க முடியாது.

சுரங்கப் பொருட்கள் எடுக்க சுரங்கம் தோண்டப்படும் பொழுதே இயற்கை சிதைக்கப்படுகிறது. சுத்திகரிக்கும் இடத்தில் நிலம், ஆறு, கடல் மாசுபடுகிறது. அவை பயன்படுத்தும் இடத்தில் நிலம், நீர், காற்றை மாசுப்படுத்துகின்றன. டிராக்டரையும், இரசாயனங்களையும் கண்டுபிடித்தது அறிவுடைமையா? அது தொழில் நுட்பம். புதுப்பிக்க முடியாத ஆதாரங்களைச் சார்ந்தது. அதனால், நீடிக்கக்கூடியவையும் அல்ல, ஒரு சிலர் கைவசம் உள்ளவை. ஆதலால் எல்லா மக்களும் பயனடையக் கூடியவையும்அல்ல. உயிரோட்டம் இல்லாத நிலத்தில் உற்பத்தி சாத்தியம் இல்லை. உயிர் கொல்லும் இரசாயனங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் தொழில் நுட்பம் எப்படி அறிவு சார்ந்தது ஆகமுடியும்? பச்சைப் புரட்சியின் விளைவு என்னவாக இருந்தது?

பச்சைப் புரட்சி பற்றி இப்போது ஆழமான விவரங்கள் கிடைத்துள்ளன. இந்தியாவில் “பச்சைப் புரட்சி” வெற்றிகரமாக நிறைவேறிய இடமாக பஞ்சாப் மாநிலம் கருதப்படுகிறது. பஞ்சாப் பல்கலைக் கழக பூச்சியியல் துறையைச் சேர்ந்த பல்விந்தர் சிங் என்பவர் “விசம் எப்படி பயணம் செய்கிறது-” என்ற விவரங்களைத் தருகிறார்.

பூச்சி எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொண்டு விட்டதாம். தெளிக்கின்ற, தூவுகின்ற நஞ்சு மொத்தமும் நிலத்தை சென்றடைந்து சேமிக்கப்படுகிறது. அங்கிருந்து வெள்ளாமை செய்யப்படுகிற நிலத்திற்கும் செய்யப்படாத நிலங்களுக்கும் பரவுகிறது.

**உணவு நஞ்சாக மாறிய கொடுமை**

கோதுமை, கோதுமை மாவு, அரிசி, மக்காச் சோளம் எல்லாமே நஞ்சாக மாறியது. கோதுமை மாவை சப்பாத்தியாக மாற்றினாலும் நஞ்சு மறைய வில்லை. கடையில் விற்பனையான வெண்டைக்காய், உருளைக் கிழங்கு, கேரேட், காலிஃப்ளவர், முட்டை கோசு இப்படி சமயல் எண்ணெயெல்லாம் கூட நஞ்சானது.

**இரசாயன பூச்சிக் கொல்லி வெசப் பயணம் எப்படி?**

பால், வெண்ணெய், நெய், போன்ற கால்நடை தரும் உணவுப்



படிப்பகம்

www.padippakam.com

பண்டங்களை சோதித்தார்கள். சோதித்த 244 மாதிரிகளிலும் நஞ்சு கலந்திருப்பது கண்டறியப்பட்டது.

நஞ்சு உடல் நலத்தைக் கெடுக்க துக்கு நூரண்டு உணவில் கலந்தாலே போதுமானது. உலக சுகாதார நிறுவனம் இப்படிச் சொல்கிறது. 10 லட்சம் பாகத்துக்கு 11.4 பாகம் நஞ்சு இருந்தாலே ஆரோக்கியக் குறைவு ஏற்படும். 1000 லிட்டர் பாலில் 11.4 மில்லி விசம் காணப்பட்டாலே உடல் நலம் கெடும். பஞ்சாப் எருமை கறந்த பாலில் இதைவிட அதிகமான விசம் இருந்தது.

**குழந்தை பருகும் தாய்ப்பால் எப்படி?**

பஞ்சாப் மாநிலத்தில் குழந்தை பெற்ற 130 தாய்மார்களின் பால் மாதிரிகளை சோதித்தார்கள். எல்லாமே நஞ்சு கலந்திருந்தது. பஞ்சாப்பில் தாய் மார்பில் நஞ்சு சுரப்பது 1983லேயே கண்டறியப்பட்டது. ஒரு குழந்தை பிறக்கும்போது மூன்று கிலோ எடை இருப்பதாக வைத்துக்கொள்வோம், குழந்தை ஒரு நாளைக்கு 600 மில்லி தாய்ப்பால் குடிப்பதாக எடுத்துக்கொண்டால் அந்த சிசு மூன்று நாட்களில் ஒரு மில்லி நஞ்சு உட்கொள்கிறது.

இந்த விவரங்களை நாம் அலசும் போது நாடெங்கும் காணப்படும் சிசு மரணம், கருச்சிதைவு, கருப்பை நீக்கம், மார்புப் புற்று போன்ற நோய்களுக்கான அடிப்படையை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

இப்படி நடக்கும் என்று 1968லேயே காசியில் நடந்த விஞ்ஞானிகள் மாநாட்டில் தான் சொன்னதாக கேரளத்து விஞ்ஞானி மா.சா.சுவாமிநாதன் எழுதுகிறார். பசுமை புரட்சி என்ற வார்த்தையை உலகுக்கு அறிவித்தவனே வில்லியம் எஸ்.காட் என்ற அமெரிக்கன் என்று மா.சா. சுவாமிநாதன் எழுதுகிறார்.

இதன் மூலம் தன்னை அறிவாளியாகக் காட்டிக் கொள்ள விரும்புகிறார். பரிதாபம் என்னவென்றால், இதை 1962லேயே இராக்கேல் கார்சன் புத்தகமாக வெளியிட்டார். நஞ்சு தெளித்துப் பூச்சிகளைக் கட்டுபடுத்த முடியாது என்பதையும் அப்படி முயற்சித்தால் தாய்ப்பாலில் நஞ்சு வருகிறது என்பதையும் அமெரிக்காவும் இந்தியாவும் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்பே அவர் வெளியிட்டார்.

நவீன அறிவியல் தன்னைக் குறைபாடு கொண்டதாகவே பார்க்கிறது. பூமி பந்து போன்றது என்ற கண்டுபிடிப்பு மறுக்கப்பட்டது. தட்டை என்று சொல்லவில்லை, ஆரஞ்சுப் பழம் போல் இரண்டு முனையிலும் உள்குவிந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆரஞ்சு போன்றதல்ல என்று மறுத்தவர்கள் பந்து போன்றதுதான் என்று சொல்லவில்லை. பேரிக்காய் போன்று ஒரு முனை அகலமாகவும், மறுமுனை குறுகலாகவும் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் பச்சைப் புரட்சி தொழில் நுட்பம் இத்தகைய கண்டுபிடிப்பல்ல. இது அறிவிற்குப் பொருத்தமானது அல்ல. இரசாயண



படிப்பகம்

www.padippakam.com

நஞ்சுகளை விற்று லாபம் ஈட்டுவதற்காகவே நடந்த வியாபாரம் என்பது முன்பே நிரூபிக்கப்பட்டிருந்தது (காண்க - மௌன வசந்தம் "Silent Spring")

பிறிதொன்றன் நோயைத் தன் நோய் போல் பார்க்காத போது அறிவினால் ஆகும் பயன் என்ன? என்பது வள்ளுவர் எழுப்பும் கேள்வி. இதைத்தான் மக்கட்பண்பாக நாம் ஏற்க முடியும். பகுத்துண்டு பல்லுயிர் பேணும் அறிவே தமிழ்ப் பண்பு. மக்கட் பண்பு இல்லாதவர் கூர் அறிவு பெற்றிருந்தாலும் அவர் மரமே என்பது வள்ளுவம்.

இறக்குமதி தொழில் நுட்பத்தைக் காந்தீயம் எப்படிப் பார்க்கிறது காந்தீயப் பொருளாதாரத்தில் மேநிலை எய்திய டாக்டர் ஜே.சி. குமரப்பா சொல்லுவதைப் பார்ப்போம்.

எல்லாவற்றைக் காட்டிலும் முரட்டுத் தனமான, பயங்கரமான புலியைக் கவனிப்போம். இப் புலி தன் வாழ்க்கையை எவ்வாறு நடத்துகிறது? தன்னுடைய ஆகாரத்திற்கு அது கையாளும் வழி முறை என்ன?

புலி மற்ற மிருகங்களைக் கொன்று தன் ஆகாரத்தை தேடிக் கொல்கிறது. ஆகவே அது அவ்வாகாரத்தை உற்பத்தி செய்யவில்லை. அந்த ஆகாரமாகும் பொருள் செழித்து வளருவதற்கான வழிகளையும், அது செய்யவில்லை. இது போல், உற்பத்தி வேலையில் கொஞ்சம் கூடப்பங்கு கொள்ளாமல் தன் தேவையை மட்டும் பூர்த்தி செய்து கொள்கிறது. இப்புலியின் இருப்பிடம் எங்கே? மலையின் குகை. அது இயற்கையில் ஏற்பட்ட பொந்து. ஆகவே புலியானது உணவு விசயத்தில் கொலை வாழ்க்கை வாழ்கிறது. அதன் வசிப்பிடத்திற்குக் கொள்ளை வாழ்க்கையை மேற்கொள்கிறது. இவை போன்ற கொடிய தொழில்கள் நிறைந்ததே ஏகாதிபத்திய முறை. பணம் நிறைந்த அமெரிக்கா கையாண்டு வரும் தந்திரம் இந்தப் புலி வாழ்க்கை போன்றது.

இந்த அமெரிக்க விலங்குக்குத் துணை போனது மட்டுமே மா.சா. சாமிநாதனும் சி. சுப்பிரமணியமும் செய்த காரியங்கள். ஆனால் இவர்கள் இருவரும் நேரம் கிடைத்த போதெல்லாம். காந்தியின் பெயரைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்குவதே இல்லை.

சி. சுப்பிரமணியம் தனது சுயசரிதைப் புத்தகத்தின் பின் அட்டையில் காந்தி தண்டியில் உப்பு அள்ளும் படத்தையே அச்சிட்டுள்ளார் (இதை நரித்தனம் என்று சொல்லலாமா?)

"மக்கள் புற்று நோயால் தவிக்கிறார்கள். மூளைக் குறைவாக பிள்ளைகள் பிறக்கின்றன. இப்படி எல்லாம் நடக்கும் என்று 1986லேயே சொன்னேன்" என்று சொல்லும் மா.சா. சாமிநாதன் தான் பச்சைப் புரட்சியையே நடத்தியவர். பிலிப்பைன்ஸ் அரிசி ஆராய்ச்சி நிறுவன இயக்குனராக இருந்து உலகம் முழுமைக்கும் பச்சையாகப் புரட்சி பரப்பியவர். இவர் பதவி உயர்வு பெற்ற கதையே சுவையானது. தான் கண்டுபிடித்த கோதுமையில் பாலில்



படிப்பகம்

www.padippakam.com

உள்ள அளவு சத்து உள்ளது என்று அறிக்கை வெளியிட்டு அதற்காகப் பட்டம் பாராட்டு, பதவி, பதக்கம் பெற்றார். மற்ற விஞ்ஞானிகள் சோதித்துப் பார்த்து மறுத்தார்கள். “எல்லாக் கோதுமையிலும் இருப்பது போலத்தான் சாமிநாதன் கோதுமையிலும் இருக்கிறது.” என்று எழுதினார்கள். சாமிநாதன் மறுக்கவில்லை. தனக்குக் கீழே பணியாற்றியவர்கள் செய்த தவறு என்று அறிக்கை வெளியிட்டார். ஆனால் பொய்யறிக்கை வெளியிட்டு தான் வாங்கிய பணத்தை, பாராட்டைத் துறக்கவில்லை. மாறாக உண்மையை சமூக அறிவர்கள் திரு. கிளாடு ஆள்வாரிஸ். எஸ்.என். நாகராசன் முன்னதாகவே வெளிக் கொண்டுவந்துள்ளார்கள்.

**எசமான விசுவாசம்**

சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம் சர்வதேச விஞ்ஞானிகளின் கூட்டு செயல்பாட்டால் 82,000 நெல் வகைகளை சேமித்து வைத்துள்ளது, ஆண் - பெண் திசுக்களுக்கு அப்பால் செயல்பட்டு புது செடி இனங்கள் இன்று உருவாக்கப்படுகின்றன. இத்தகைய ஒரு ஆராய்ச்சி வலைப் பின்னலை ஊக்குவிப்பதில் ராக்ஃபெல்லர் பௌண்டேசன் (பெட்ரோல் கம்பெனி) முன்னிலை வகிக்கிறது. நெல்சாகுபடி செய்து அரிசி சோறு சாப்பிடும் தேசங்களுக் கெல்லாம் ராக்ஃபெல்லர் ஃபௌண்டேசன் செயல் ஒப்புவமை அற்ற முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும், இப்படிச் சொல்கிறார் - இந்திய பச்சைப் புரட்சி சாதனையாளர் மா.சா. சாமிநாதன்.

**பச்சைப் புரட்சி தந்த மாற்றம் விளைவுகள் யாவை?**

**1. விளைநிலங்கள் உயிரோட்டத்தை இழந்தன.**

மண் வளம் தொடர்வதற்கு மண்ணுயிர்களும், மண்புழுவும் தவிர்க்க முடியாத தேவையாகும். இரசாயன உரத்தையும் நஞ்சுகளையும் நிலத்தில் இட்டு உயிர்களை அழித்ததால் 6000 ஆண்டுகளாக விளைந்த நிலங்கள் 30 ஆண்டுகளிலேயே கிரிக்கெட் மைதானங்கள் ஆகிவிட்டன.

**2. தனிமங்கள் கிட்டா நிலைக்குச் சென்றன.**

முதலில் தழையை வளர்க்க மட்டுமே இரசாயனம் பரிந்துரைக்கப்பட்டது. பிறகு மணியை வளர்க்கவும், சாம்பலுக்கு மாற்றாகவும் இரசாயனம் இடும்படி பரிந்துரை. பிறகு பூச்சிக் கொல்லி நஞ்சு, பூஞ்சானக் கொல்லி நஞ்சு, களைக்கொல்லி நஞ்சு என்று எண்ணிக்கை அதிகரித்தது. கூடவே, துத்தநாகம், போரான், மெக்னிசியம் என்று நுண்ணூட்டங்கள் இடவேண்டியதும் கூடிக் கொண்டது. துத்தநாகப் பற்றாக்குறை பரவலாகக் காணப்பட்டது. பஞ்சாப் நிலைமையை மேற்கோளாகக் காட்டுகிறார் டாக்டர் வந்தனா சிவா. சோதித்துப்பார்த்த 8706 மண் மாதிரிகளில் பாதிக்கு மேற்பட்டவைகளில் துத்தநாகப் பற்றாக்குறை காணப்பட்டது. இதனால் நெல், கோதுமை மக்காச் சோளம் விளைச்சலில் துத்தநாகப் பற்றாக்குறை காணப்பட்டது. இதனால் நெல்,



படிப்பகம்

www.padippakam.com

கோதுமை, மக்காச்சோளம் விளைச்சல் குறைந்தது. 1969-70ல் துத்தநாக சல்பேட்டை இடவேண்டி இருக்கவில்லை. 1984-85ல் 15000 டன் இடவேண்டி வந்தது.

3. பூச்சிக் கொல்லி நஞ்சுகளின் பயன்பாடு வரம்புகடந்தது.

நாம் உண்ணும் பொருள் அத்தனையிலும் எஞ்சிய நஞ்சு காணப்படுகிறது. நோய்கள் . மலிவதற்கு (புற்றுநோய் உட்பட) விவசாயதிதில் நஞ்சு பயன்படுத்துவதே காரணம், 15 ஆண்டுகளுக்கு முன்பு கார்பரில் ஃபாக்டரியில் (போபால் நகரில்) நள்ளிரவில் நச்சுக் காற்று கசிந்து 10,000 பேர் மடிந்ததையும், பல்லாயிரம் பேர் உடல் ஊனமுற்றதையும் நாடு மறக்க வில்லை. அதற்கு முன்பாகவே கெட்ட கனவுகள் போல் அடுத்தடுத்து செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

1994ஆம் ஆண்டு பாண்டிச்சேரியில் இந்தியத் தன்னார்வ சுகாதார நிறுவனம் நடத்திய கருத்தரங்கத்தில் கலந்து கொண்ட பஞ்சாப் பூச்சியியல் துறைப் பேராசிரியர் கூறிய கருத்து முக்கியமானது. உணவுப்பயிர் பயிராகாத பகுதியில் வாழும் தாய் குழந்தைக்கு ஊட்டும் பாலில் டிடிடியும், பீ.எச்.சியும் காணப்படுகிறது. பருத்தி விதை கால்நடை தீவனத்தில் கலக்கப்படுகிறது. தீவனம் தின்னும் கறவை உடலுக்குள் சென்று பாலில் சேர்ந்து வருகிறது.

பால் சாப்பிடும் தாயின் வயிற்றுக்குள் போய் முடிவாகப் பிறந்த குழந்தைக்கு ஊட்டும் பாலில் நஞ்சு வெளிப்படுகிறது. முட்டை, பால், தாய்ப்பாலில் எஞ்சிய நஞ்சு (10க்கு 8 சாம்பிள்களில்) கலந்திருப்பதை கோவை பல்கலைக்கழகத்தார் 1984 லேயே கண்டுபிடித்திருக்கிறார்கள். இயற்கை வழிப் பயிர் பாதுகாப்புத் துறை ஒன்றையும் அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள்.

4. உணவு பயிர்களின் இடங்களை வாணிபப் பயிர்கள் பிடித்துக்கொண்டன.

பண முதலீடு செய்யும் விவசாயம் பொருள் இயல் அடிப்படையில் வரவுக்கும் செலவுக்கும் கட்டுபடியாகவில்லை. போராடும் விவசாயிகளை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யுங்கள் என்று அரசாங்கம் ஊக்குவிக்கிறது. நெல் விளைந்த நிலங்களில் கரும்பும், சவுக்கும், பூவும், புகையிலையும் பயிர் செய்கிறார்கள். உள்ளூர் உணவு உற்பத்தி குறைகிறது. வெளிமாநிலங்களில் இருந்து அரிசியும் கோதுமையும் இறக்குமதியாகிறது. விலை ஏறுகிறது. உழைப்பையே நம்பியுள்ள மக்கள் உண்ண முடியாமல் போகிறது. பண்டக் கிடங்கில் நெல்லும் கோதுமையும் இருந்தும் 33 கோடி பேர் வறுமைக்கோட்டிற்கக் கீழே இருப்பதாக அரசாங்கக் கணக்குகள் கூறுகின்றன. ஆழ்குழாய்க் கிணறுகள் போட்டு நீர் இறைக்கப்படுகிறது. அதனால் மேல்மட்டக் கிணறுகள் வற்றிவிடப் போகின்றன. குடிநீர்ப் பஞ்சம் வருகிறது. பாண்டிச்சேரி போன்ற பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்து குழாய்க் கிணறுகளிலும் உப்புநீர் வரும் அபாயம் சூழ்ந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

5. **உயிரினப் பன்முகம் அழிந்துவருகிறது.**

வாவிலோவ் உயிரினப் பன்முக மையங்கள் உலகில் பன்னிரண்டு என்று குறிக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று இந்தியா. இங்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்புகூட 30 ஆயிரம் நெல்ரகங்கள் இருந்தன. இன்று 30 கூட தேர்வது கடினம். ம்நெல்லுக்கும் கோதுமைக்கும் மட்டுமே முக்கியத்துவம் தந்ததால் சத்து மிகுந்த சிறு தானியங்களின் விளை பரப்பும் குறைந்துள்ளது. பல பயிர்கள் வழக் கொழிந்தும் வருகின்றன. 10,000 ஆண்டுகளுக்கு முன்பு 5,000 வகை உணவுச் செடிகள் இருந்தன. இன்றோ 150 உணவுப் பண்டங்கள் மட்டுமே சந்தைக்கு வருகின்றன. 15 செடிகள் மட்டுமே அக்கறை காட்டி வளர்க்கப்படுகின்றன.

அவை

| | |
|---|---|
| 5 மாவு தரும் தானியங்கள் | - நெல், கோதுமை, சோளம், பார்லி, மக்கா |
| 3 பயறு வகை | - சோயா பீன்ச, நிலக்கடலை |
| 3 கிழங்குகள் | - உருளை, மரவள்ளி, சர்க்கரை வள்ளி |
| 2 சர்க்கரை | - கரும்பு, பீட் |
| 2 மரங்கள் | - தென்னை, வாழை |

**உணவுப் பண்டங்களும் சத்துக்களும் :**

| பயிர் | புரதம் கிராம் | தாதுப்புகள் 100 கிராம் | சுண்ணம் மில்லிகிராம் | இரும்பு 100 கிராம் |
|---|---|---|---|---|
| கம்பு | 11.6 | 2.3 | 42 | 5.0 |
| கேழ்வரகு | 7.3 | 2.7 | 344 | 6.4 |
| சோளம் | 10.4 | 1.6 | 25 | 5.8 |
| கோதுமை (அரைத்தது) | 11.8 | 0.6 | 23 | 2.5 |
| அரிசி (அரைத்தது) | 6.8 | 0.6 | 10 | 3.1 |

6. **விதைகள் மறைந்ததோடு வேளாண் மரபுகளும் மறைந்தன.**

தமிழ்நாட்டில் பாசனம் உள்ள பகுதிகளில் ஏரியில் நீர் நிறையும் போது தண்ணீர் பாய்ச்சிக் களை எடுத்துப் பிண்ணாக்கு இடுவார்கள். பயிர் வளர்ந்து விளைச்சல் தரும். குள்ள ரக நெல் அறிமுகமான பிறகு புரட்சியில் சேறு கலக்கி நடவு செய்யும் பழக்கம் புகுத்தப்பட்டது. சேறு கலக்குவதற்கே ஒரு ஏரித் தண்ணீர் தேவைப்படுகிறது. மூன்று முறை ஏரி நிரம்பினால் மட்டுமே நெல் மணி முற்றுவது சாத்தியமாகிறது. மூன்று முறை ஏரி நிரம்புவது புயல் வீசும்



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டுகளில் மட்டுமே சாத்தியம். ஆதலால் விவசாயிகள் நிலத்தைத் தரிசு போடுகிறார்கள். மட்டங்கால் ஊர் விவசாயிகள் மரபை மீட்டு இப்போது மாப்பிள்ளைச் சம்பா பயிர் செய்கிறார்கள்.

தண்ணீர் தேங்கும் பகுதிகளில் ஒரு குள்ளரகம் ஒரு நெட்டை ரகம் இரண்டையும் கலந்து விதைப்பார்கள். இரண்டு முறை அறுவடை செய்தார்கள். இதற்கு ஒட்டடை என்ற ரகம் பயன்பட்டது, ஆடுதுறை, கொள்ளிடம், திருத்துரைப் பூண்டி வட்டாரங்களில் வழக்கில் இருந்தது. பசுமைப் புரட்சிக்குப் பிறகு குள்ள ரகங்களைப் பயிர் செய்து வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பதை ஆண்டுதோறும் காண முடிகிறது.

**7. விவசாயத்தின் முக்கிய அங்கமான கால் நடைகள் அழிந்தன.**

தண்ணீர் மறைந்தது, மேய்ச்சலும் வைக்கோலும் குறைந்தது. எந்திரம் புகுந்தது செல்வமாக கருதப்பட்ட மாடுகள் விவசாயிகளுக்குச் சுமையாக மாறின. நெல்லில் தானியம் மட்டுமே முக்கியம் என்று கருதியது போல மாட்டில் மடி மட்டுமே முக்கியம் எற் சிந்தனை போதிக்கப்பட்டது. நமது கால்நடைகள் அழிந்தன. அந்தந்த பகுதிக்கே உரிய இனங்கள் காங்கேயம், உம்பளாச்சேரி, பர்கூர், அலிக்கார், ஓங்கோல் இனங்கள் கலப்படமாகி மறைந்து வருகின்றன. இந்தியாவில் கால்நடைகள் உணவிற்காக மட்டுமே வளர்க்கப்படவில்லை. கால்நடை உழைக்கிறது. எரு கிடைக்கிறது, சக்தி தருகிறது. இந்தியாவில் ஒரு கோடி 80 லட்சம் டிராக்டர் செய்யும் வேலையை இந்திய மாடுகள் செய்கின்றன. அவை கொடுக்கும் எருவில் பாதி வரட்டியாகத் தட்டி எரிக்கப்படுகிறது. அது இரண்டு கோடி 70 லட்சம் டன் மண் எண்ணெய்க்குச் சமம் அல்லது ஆறு கோடி 80 லட்சம் டன் விறகிற்குச் சமம். இந்த மாடுகள் இறைச்சி ஏற்றுமதிக்காக அன்றாடம் கசாப்புக் கடை நோக்கி பயணம் செய்த வண்ணம் உள்ளன.

**8. பண்ணையில் உப பொருள்களுக்கு மதிப்பு இல்லாது போயின.**

இரசாயனம் எருவாகவும் டிராக்டர் ஏராகவும் கருதப்பட்டதால் மாடுகள் மறைந்தன. அவற்றுக்கு உணவாகப் பயன்படும் வைக்கோல், தவிடு, பிண்ணாக்கு மதிப்பிழந்து போயின. தார்ச் சாலைகளிலேயே கதிர் அடிக்கப்படுகிறது. தாள், கூளம் சாலை ஓரத்திலேயே குவித்துக் கொளுத்தப்படுகிறது. நகரத்திற்கு வருமுன் காய்கறி, பழங்கள் கழிவாக மாறும்போது நகரத்திலேயே குவிந்து வெள்ளப் பெருக்கையும் சுகாதாரக் கேட்டையும் உண்டுபண்ணுகின்றன.

**9. உணவுச் சங்கிலி அறுந்து போனது**

எங்கெங்கும் கழிவு நீர் தேங்கியுள்ளது. தரை பொட்டல் ஆகியது. விவசாயிகளுக்கு வேலைச் சுமை கூடுகிறது. பல தேவைகளுக்காகப் பட்டணத்தைச் சார்ந்து இருக்க வேண்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

10. நதி நீரும் கடல் நீரும் மாசுபடுகின்றன.

நகரத்துச் சாக்கடைகள் நதியில் ஒரு மடைவழியாகப் பாய்கின்றன. ஆலைச் சாக்கடை கூட அப்படித்தான். ஆனால் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் இரசாயன உரங்களும் பூச்சிக் கொல்லி நஞ்சுக்களும் அங்கு இங்கு எனாதபடி பலப்பல வழிகளிலும் நதி நீரையும் காற்றையும் மாசுப்படுத்தி இயற்கையில் கிடைக்கக் கூடிய உணவுகளான மீனையும் தேனையும் கூட நஞ்சாக்கி விடுகின்றன.

## தமிழ்நாடு சமூக அறிவர் அரங்கம்

தமிழ்நாடு சமூக அறிவர் அரங்கத்தின் 5வது சந்திப்பு சேலம் மாவட்டம் செல்லியம்பாளையத்தில் கடந்த 15.10.2000 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் தமிழக ஒருங்கிணைப்பாளராக திரு.கோ.நம்மாழ்வார் தேர்ந்தெடுக்கப்பட்டார். சேலம், தருமபுரி, ஈரோடு, கரூர், கோவை, விருதுநகர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், சென்னை போன்ற மாவட்டங்களுக்கென ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். ஒருங்கிணைப்பாளர்கள் மாவட்ட அளவில் சமூக அறிவர் அரங்கத்தின் செயற்பாடுகளைத் திட்டமிடுவார்கள்.

கல்வி, இயற்கை வேளாண்மை, மருத்துவம், சுற்றுச்சூழல், உள்ளாட்சி போன்ற ஐந்து துறைகளுக்கு வல்லுனர் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளின் குழுக்கூட்டம் வரும் நவம்பர் 26-ம் தேதி ,நடைபெறும். இடம் முடிவு செய்யப்படவில்லை. அரங்கத்தின் தமிழகப் பொருளாளராக பேராசிரியர். மு.க.சுப்ரமணியன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். சமூக அறிவர் அரங்கத்தின் அடுத்த சந்திப்பு டிசம்பர் 24-ல் நடைபெறும். உறுப்பினர் ஆண்டுக் கட்டணமாக ரூபாய்.100/- வசூலிக்கப்படும்.

அரங்கின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க செய்தி மடல் ஒன்றை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வெளியிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. தமிழகம் தழுவிய அளவில் இயற்கை வேளாண்மை பண்ணைகள் தொடர்பான தகவல்கள், முகவரிகள், ஆதாரங்கள், ஆதார நபர்கள் பற்றிய தகவல்களை திரட்டி 100 பக்க அளவில் அடுத்த இரண்டு மாதத்திற்குள் தமிழக இயற்கை வேளாண்மைக் களஞ்சியம் வெளியிடுவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

செல்லியம்பாளையம் கூட்டத்தினை சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக இருக்கும் கவிஞர். இளந்திரையன் அவர்களும் குரு.ஆறுமுகம் அவர்களும் ஏற்பாடு செய்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# இராசஸ்தான் படிப்பினைகள் கூறும் உண்மைகள்

ஜெயப்பூரில் அரசுப் பணியிலிருந்தவர் ராஜேந்திரசிங். சமூக ஆர்வம் இவரைத் தொற்றிக்கொள்ள, திருமணம் முடிந்து ஒன்றரை ஆண்டுகளே ஆகியிருந்த நிலையில் தனது மனைவியை அவரது தாய் தந்தையர் இல்லத்திற்கு அனுப்பிவிட்டு, நான்கு நண்பர்களுடன் இராசஸ்தாலில் கடும் வறட்சிக்கு இலக்காகியுள்ள பகுதியில் சென்று தங்குகிறார்.

மண்வளம் அரிக்கப்பட்டு, குளங்கள் மேடுபட்டு, காடுகள் அழிக்கப்பட்டு பாலைவனமாகக் காட்சியளித்த அந்தப் பகுதிகளை இவரும் இவரது நண்பர்களும், உள்ளூர் மக்களின் ஒத்துழைப்போடு கடந்த 10 ஆண்டுகளில் எல்லோரும் கண்டு வியக்கும் வண்ணம் 600க்கும் மேற்பட்ட கிராமங்களின் வாழ்நிலை மேம்படுத்திபிருக்கிறார். மக்கள்மீது மாறாத பற்றும், சமூகத்தின் தேவைதான் முக்கியம் தனிநபர்களல்ல, எனக் கூறும் ராஜேந்திரசிங் ஜெயப்பிரகாஷ் நாராயணின் இயக்கத்தில் பங்கு பெற்றவர். இவர்களது இயக்கத்தின் பெயர் தருண் பாரத்சங்கம் ***(TBS)***

இந்தியாவில் ராசஸ்தானுக்கு அடுத்தப்படியாகப் பாலைவனமாகிக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு. இராமநாதபுரம் தொடங்கி, விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, மதுரை என நிற்கிறது மாவட்டங்களின் வறட்சிப் பட்டியல். இந்த நிலையில்தான் இரஜேந்திர சிங்கின், தருண் பாரத் சங்கத்தின் பணிகள் நமக்குச் சில படிப்பினைகளை வழங்குவதாக உள்ளன. தொழில்நுட்ப வடிவில் நம்மிடையே நிறைய ஆதாரங்கள் இருந்தாலும், நடைமுறைப்படுத்தும்போது எதிர்கொள்ளும் சிக்கல்கள் இங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தாகிறது. திவீக் இதழில் வெளிவந்த ராஜேந்திரசிங்கின் நேர்காணலின் தமிழாக்கம்.

தருண்பாரத் சங்கத்தின் முத்திரைகள்

விஜயபுஷ்கர்ணா, கேள்வி : **சமூக செயல்பாட்டுக்கான ஊக்கத்தை நீங்கள் எங்கிருந்து பெற்றீர்கள்.**

நான் காந்தியைக் காணவில்லை, உரையாடவும் இல்லை. ஆனால் நான் அவரை வாசித்திருக்கிறேன். குழந்தைப் பருவத்திலிருந்தே சமூக செயல்பாட்டில் இருந்தேன். ஜெயபிரகாஷ் நாராயணனின் இயக்கத்தில் பணியாற்றினேன். வினோபாவின் பூமிதான இயக்கம் பற்றி அறிந்திருந்தேன். இவைகளெல்லாம்தான் எனது படிப்பு, காந்தியடிகள்தான் எனக்கு மிகப்பெரிய உந்துசக்தி.

கேள்வி: **காந்திக்குப்பின் நிறைய ஆண்டுகள் ஆகிவிட்டனவே, தற்போது காந்தியின் கொள்கைளோடு மாறுபட வேண்டியுள்ளது?**

காந்தியின் கொள்கைமீது விமர்சனம் இருப்பதாக நான் கருதவில்லை. அவர் ஒரு மகாத்மா, யுகபுருஷர், நான் ஒரு சாமானிய மனிதன். ஆனால



படிப்பகம்

www.padippakam.com

குறைந்த அளவு வேறுபாடு இருப்பதை உணர்கிறேன். 1909-ல் காந்திக்கு இயந்திரமாக்கலுக்கு எதிராகப் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவரது ஆயுள் முழுக்கவும் காந்தி போர்ராடினார். அவரால் செயல்பாட்டுக்குகந்த வழிகாட்டுதலை முழுமையாக அளிக்க முடியவில்லை. நீங்கள் இரயில்களும், பஸ்களும் பெட்ரோல் டீசலாலும் நாட்டுக்கு அச்சுறுத்தல் இருக்கிறது, என்று கொள்வீர்களானால் அதற்கு மாற்று ஏற்பாட்டைக் கொடுத்தாக வேண்டும். அன்றைய விஞ்ஞானிகள் இப்படித்தான் கேட்டார்கள். காந்தி தன்னிடம் மிகவுயர்ந்த தத்துவ பலத்தைக் கொண்டிருந்தார். அதன் காரணமாகவே கீழ்மட்டத்திலுள்ள எதார்த்த உலகத்தைப் பற்றி அவர் அறிவதைத் தவறவிட்டுவிட்டார். நாம் தற்போது தத்துவத்தை விட அதிக அளவு செயல்பாட்டாளர்களாக இருக்கிறோம்.

காந்தி கிராம சுயராஜ்யம் என்று பேசினார். ஆனால் நமது அரசமைப்புச் சட்டத்தில் கிராம சுயராஜ்யத்திற்கு இடமே இல்லை இன்று ஒவ்வொருவராலும் காந்தி படிக்கப்படுகிறார். இன்றைய நிலையில் நாட்டின் மாநிலங்கள் என்பதற்குரிய பார்வையே மாறியுள்ளது. ***விடுதலைக்குப்பிறகு கிராமங்களிலிருந்து நிறைய எடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் எதுவுமே திருப்பித்தரப்படவில்லை.*** நாம் சாதாரண மனிதர்களாக இருக்கிறோம். இதன் காரணமாகவே காந்தியின் வலுவான தத்துவச் சுமையினை நம்மால் தாங்க முடியவில்லை.இருப்பினும் நாம் காந்தியின் வழியைப் பின்பற்றி நடக்க வேண்டுமென விரும்புகிறோம். மக்களை அவர்களின் சொந்தக் கால்களில் நிற்க வைக்க விரும்புகிறோம்.

கேள்வி: **எப்படி?**

காந்தி சுயசார்பு பற்றிப் பேசினார். விவசாயத்திலும் துணித் தொழிலும் சுயசார்பு அவசிய மென்றார். கைராட்டையை பயன்படுத்தினார். விடுதலையின் சின்னமாகவே கைராட்டை திகழ்ந்தது.ஆனால் கைராட்டையை காந்தி கண்டுபிடிக்கவில்லை. நமது நாட்டின் வயது முதிர்ந்த தாய்மார்களின் ஆயுதம் அது. அதைப் போலவே இன்று நாமும் மக்களின் ஆயுதங்களையே பயன்படுத்துகிறோம். இயற்கையிலிருந்து நாடு பாடம் படிக்கட்டும் என்றார் காந்தி. இயற்கை தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும், ஆனால் பேராசைகளை அல்ல. இந்தத் தத்துவத்தினால் நாம் கவரப்பட்டோம். இருப்பினும் நாம் காந்தியவாதிகளல்ல. குளங்களும், மரங்களும் பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு மட்டுமே உரியவை.

கேள்வி: **நீங்கள் சூழ லை முதன்மைப் படுத்துகிறீர்களா? மக்களையா?**

எங்களது இயக்கம் சமூகத்தின் தேவைகளையே கருத்தில் கொள்கிறது. சுற்றுச் சூழலைப் பற்றிய இன்றை விவாதம் முதன்மையாக இயற்கை



படிப்பகம்

www.padippakam.com

ஆதாரங்கள் கொள்ளை போவதைப் பற்றியதே.

நமது இயற்கைச் சூழல் சரியாக இருந்தால், யாரும் ஏழையாக இருக்க மாட்டோம் ஏழைகள் நன்றாக இருப்பார்களானால், சுற்றுச்சூழல் கீழ்நிலையை அடையாது. இது பணக்காரர்களைப் பற்றியது. அதாவது மக்கள் தொகையில் 15% பேர் அவர்களே காற்றையும், நீரையும் மாசுபடுத்துகின்றனர்.

ஏழைகள் ஒன்றிணைந்து அவர்களிடம் இப்படிக் கூறினால், அவர்கள் தங்களது செயலை நிறுத்துவார்கள்.

''நீ அதிகம் தண்ணீரைப் பயன்படுத்துகிறாய்
நீ ஆறுகளை மாசு படுத்துகிறாய்''

மனிதன் இன்று பேராசைக் காரனாக இருக்கிறான். பொருளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறான்.

மலைகள் பூமித்தாயின் மார்பகங்கள். ஆறுகளில் வரும் தண்ணீரே பால்.

காலையில் எழுந்ததும் இந்த பூமியை அன்புள்ளத்தோடும், பெருமதிப்புடனும் தொட வேண்டும். இந்தப் புவிதான், இயற்கைதான் நமக்கு எல்லாவற்றையும் தருகின்றது. மனிதனின் பங்கு இந்தப் பூமியில் எவ்வளவென்றால் எறும்புகளுக்கு எந்த அளவோ அதே அளவுதான். மனிதன் இன்று மனிதத்தன்மையை இழந்துவிட்டான். இயற்கையோடு நமக்கிருந்த உறவு நழுவிவிட்டது. இவனது வாழ்க்கைமுறை இயற்கையை வெல்வதையும் அதை அடக்கி ஆளுவதையுமே சொல்கிறது.

தண்ணீரை அறுவடை செய்வதற்குரிய நமது பணிகளே இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள உறவைப் புதுப்பித்துக் கொள்வதற்கான முதல் பணி. இடப் பெயர்தலுக்கு எதிராக நாம் போராடவேண்டுமென்று சொல்வது காடுகளை மனிதனுக்கு உரித்தாக்குவதற்கன்று. காடு சூழ்ந்த கிராமத்திற்கும், கானகங்களில் வாழும் புலிகளுக்குமிடையே தொடப்படாத உறவு இருக்க வேண்டுமென்பதே நமது விருப்பம். இதையே தண்ணீருக்கும் நாம் ஒப்பிட்டுக் கொள்ள முடியும்.

நாம் சமூகத்தை நேசிக்கிறோம். எனவேதான் நாம் நமது சூழலைப் பேணிக் காக்க வேண்டுமென விரும்புகிறோம். இரண்டும் ஒன்றுக் கொன்று தொடர்பானது. நமது வேலை என்பது இயற்கையைப் பேணி வளர்ப்பதே.

**கேள்வி: நம் முன் உள்ள மாபெரும் சவால்கள் என்று எதை எண்ணுகிறீர்கள்?**

முதன்மையாக நடப்பிலிருக்கின்ற சட்ட அமைப்பைத்தான் நான் சொல்வேன். அவை கிராம மக்களை அவர்களின் வளர்ச்சிக்காக எதனையும் செய்ய விடுவதில்லை. கிராம மக்கள் ஒரு சிறு குளம்



படிப்பகம்

www.padippakam.com

தோண்டினால், அது சட்ட விரோதம் என்கிறது அரசு. கிராமம் ஒற்றுமையாக வலிமையாக இல்லையென்றால் அது பின்வாங்க நேரிடுகிறது. கிராமத்தை வலு உள்ளதாக மாற்றவே எங்களுக்கு அதிக காலம் பிடித்தது. ஆக, முக்கியத் தடைக்கல் என்று அரசைத்தான் சொல்ல வேண்டும்.

கேள்வி: **இதை எப்படி நாம் கடப்பது?**

மெதுவாக கிராமத்தை வலுப்படுத்துதன் மூலமாகவே, இதனை நாங்கள் செய்யத் தொடங்கினோம். குறிப்பாக அரசு அதிகாரிகளிடம் எங்கள் பணியின் பகுத்தறிவுத் தன்மையைப் புரிய வைத்தோம். காடுகள் மற்றும் கானுயிர் காப்புச் சட்டத்தின்படி, இதுவரை 200 தண்ணீர் அறுவடை செய்யும் பணிகளை, சரீஸ்கா தேசியப் பூங்காவிற்கெனச் செய்துள்ளோம். நாங்கள் செய்து முடித்தபின்னர் அரசு பாராட்டியது. (தொடக்கத்தில்

### தருண் பாரத் சங்கத்தின் சாதனைகள்

- ➡ முன்பு தருண் பாரத் சங்கத்தின் பணியிடம் கருப்பு பகுதி அதாவது இந்தப் பகுதியில் நிலத்தடி நீரே இல்லை. தற்போது இந்தப் பகுதியை அரசு வெள்ளைப்பகுதி என்கிறது. ஏராளமாக நிலத்தடி நீர் உள்ளது. முன்பு சராசரி நிலத்தடி நீர் ஆழம் 200 அடிகள். இன்று 20 அடிகள்.
- ➡ 1985-ல் 80 சதமான நிலம் அரிக்கப்பட்டு வளமிழந்திருந்தது. தற்போது நில அரிமானம் 5 சதமாகியுள்ளது. காடுகள் 12 சதத்திலிருந்து 50 சதமாக அதிகரித்துள்ளது.
- ➡ முன்பு 80 சதம் ஆண்கள், 17-40 வயதுடையவர்கள் சரீஸ்கா பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தனர், தற்போது இடப்பெயர்வு நின்று வெளியில் சென்றவர்கள் திரும்பிக் கொண்டுள்ளனர்.
- ➡ பெண்கள் பள்ளிக்குச் செல்கின்றனர். மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே 1985க்கு முன்பு பள்ளி சென்றனர். பெண்கள் தொழில் செய்வோராகவும், சமூகத் தலைமை வகிப்பவர்களாகவும் மாறியுள்ளனர்.
- ➡ கிராம மக்கள் எல்லாத் தேவைகளையும் முன்பு கடையில் வாங்கினர். தற்போது தானியங்கள், காய்கறிகள், நெய், பருத்தி மற்றும் உப்பு போன்றவற்றை இவர்களே விற்கின்றனர். அவர்களது கடையில் வாங்கும் பொருட்கள் அளவு குறைந்துவிட்டது. சிறிதளவு இரசாயன உரங்கள், தைக்கப்பட்ட துணிகள், மற்றும் மண்ணெண்ணெய்.
- ➡ மானாவாரிப் பயிர்கள் மட்டுமே விளைந்து கொண்டிருந்த நிலங்களில், இன்று கோதுமை, பார்லி, கரும்பு, காய்கறிகள், தீவனப்பயிர்கள் போன்றவற்றை விளைய வைக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

எங்கள் வேலைகள் காடுகளை அழிப்பதாகக் கூறி அதே அரசு அதற்காக நோட்டீசும் வழங்கியது) சில அதிகாரிகள் நுண்அறிவு மிக்கவர்கள் புரிந்து கொள்கின்றனர். ஆனால் பெரும்பாலோர் அப்படியல்ல. இருந்தாலும் எங்கள் வேலைகளைத் தொடர்ந்தோம்.

கேள்வி: **நீங்கள் எதிர்ப்பைச் சந்திக்கவில்லையா?**

சந்தித்தோம். எதிர்ப்பின் மீது எங்களுக்கு அவ்வளவாக நம்பிக்கையில்லை. நாங்கள் மக்களை நம்பினோம். காட்டிலாகா அதிகாரிகளுடன் நாங்கள் போராடிக் கொண்டிருக்கும்போது மண்டல்வா பகுதியிலுள்ள எல்லாக் கிராமங்களிலுள்ள மக்களும் எங்களுக்கு ஆதரவாக இருந்தனர். கிராம மக்கள் வேலைநிறுத்தமோ, வன்முறையிலோ ஈடுபடவில்லை. சத்தியாகிரக முறையிலேயே போராட்டம் நடத்தினர்.

கேள்வி: **உங்களது பலத்தின் ஆதாரம் எது?**

இங்குள்ள மக்கள் சமூகங்களின் தார்மீக ஆதரவும், நம்பிக்கையும் உண்மையுமே எங்கள் பலம். இவர்களைக் கொண்டுதான் சுரங்கம் வைத்திருந்த மஃபியாக்களை எதிர்த்துப் போராடினோம் நாங்கள் தாக்கப்பட்டபோது சமூகம் எங்களைக் கவனித்துக் கொண்டது.

கேள்வி: **உங்கள் தற்போதைய கனவு என்ன?**

சமூகம் தனது சொந்த ஆதாரங்களான, தண்ணீர், காடுகள் மற்றும் நிலத்தை தானே நிர்வகித்துக் கொள்ள வேண்டும். இந்தப் புவி நிலைத்திருப்பதற்கு இவையே மிகப்பெரிய ஆதாரங்களாகும். அவை முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும். இங்கு மட்டுமல்ல, இந்த ஆரவல்லி மலைப்பகுதி மட்டுமல்ல, உலகின் எந்தப் பகுதியிலும் இயற்கை ஆதாரங்கள் உள்ளூர் சமூகங்களால் பாதுகாக்கப்பட்டுப் பயன்படவேண்டும்.

கேள்வி: **தொடக்கத்தில் நீங்கள் சந்தித்த எதிர்ப்புகள் என்னென்ன?**

மக்களுக்கு தொடக்கத்தில் எங்களைப் பற்றித்தெரியாது. எனவே, எங்கள் மீது நம்பிக்கை வைக்கவில்லை. அவர்கள் எங்கள் மீது நம்பிக்கை வைக்காமல் போனதற்கு அரசியல் அமைப்பும் கொள்ளையடிக்கின்ற வணிகக் கும்பலுமே காரணம். பின்னர், உள்ளூர் அரசியல் பிரமுகர்களிடமிருந்து எங்களுக்கு எதிர்ப்பு வந்தது. சாமானிய மக்களிடமிருந்து நாங்கள் எதிர்ப்பை எப்போதும் எதிர்கொள்ளவில்லை.

கேள்வி: **அரசாங்கத்தோடு உங்கள் உறவு எப்படியுள்ளது?**

குறிப்பிட்ட எந்த அரசியல் கட்சி சார்ந்தும் நாங்கள் இல்லை. எங்களது பணிக்கு அங்கீகாரமும், பாராட்டும் கிடைத்துவிட்டது. இன்னும் சிறு போராட்டம் இருக்கிறது. எதனால் என்றால் அரசின் ஊழல்களால், இன்று சமூகமும் அரசும் ஒன்றையொன்று நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

கேள்வி: **திருப்புமுனை என்று எதையேனும் கூறுவீர்களா?**

ஏறத்தாழ பத்து அல்லது பதினொரு ஆண்டுகள் உழைத்தோம். நாங்கள் எடுத்துக் கொண்ட பணியின் தன்மை அத்தகையது. குறுக்கு வழிகளில் நாங்கள் செல்லவில்லை. சோதனைகளை நாங்கள் நேரடியாகச் சந்தித்தோம். திட்டமிட்ட முறையில் அவைகளைக் கடந்தோம். உண்மைக்கு புறம்பாக நாங்கள் ஒருபோதும் செயல்படவில்லை.

கேள்வி: **எப்போதாவது நீங்கள் பணிகளை விட்டுவிடலாமென்று எண்ணியது உண்டா?**

எந்த நாளிலும் அத்தகைய எண்ணம் எனக்கு வந்ததில்லை. ஒரு முறை நாங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தோம். அப்போது கூட சமூகம் எப்போது எங்களைப் புரிந்து கொள்ளப்போகிறதோ என்றுதான் வருந்தினோம். ஜெய்பூருக்குத் திரும்பிச் செல்வதைப் பற்றி நான் ஒரு போதும் எண்ணவில்லை.

கேள்வி: **உங்கள் வேலைகள் எத்தகைய மாதிரிகளைக் கொண்டது?**

என்னிடம் மாதிரிகளே இல்லை. தருண் பாரத் சங்கத்தின் சிந்தையில் உதித்தவையே எங்களது வேலைகள். தொழில்நுட்ப அளவில், டாக்டர்களும், பொறியாளர்களும், கணக்காளர்களும் எங்களது பணிக்கு அவர்தம் செலவிலேயே வந்து வேலை செய்து விட்டுச் சென்றனர். எனவே எங்களது வேலைகளில் ஒரு தொழில்நுட்ப அழகு இருக்கிறது. ஆனாலும் உண்மையான உழைப்பை வழங்கியது சமூகம்தான். எங்களது கட்டுமானங்கள் எல்லாமே 100 விழுக்காடு பாதுகாப்பானது, ஏனென்றால், அரசின் அமைப்பைப் போன்று எங்களது அமைப்பு இலக்கை அடைவதற்காக அவசரக் கோலத்தில் கட்டுப்பட்டவை அல்ல.

மழைநீரை அறுவடை செய்ய நாங்கள் ஏற்படுத்திய அமைப்புகள், வெள்ளத்தடுப்பாகவும், வறட்சித் தடுப்பாகவும் பயன்படுகிறது. ராஜஸ்தானின் மற்ற பகுதிகளைப் போல்தான் இங்கும் மழை பெய்தது. ஆனால் ஆல்வார் பகுதியில் வெள்ளச் சேதமே இல்லை.

கேள்வி: **இந்த வேலைகளையே திரும்பவும் வேறு இடங்களில் செய்ய முடியுமா?**

இங்கு நடைபெற்றுள்ள வேலைகள் இந்தப் பகுதிக்காக வடிவமைக்கப்பட்டவை. மழைநீர் அறுவடை செய்யப் பயன்படுத்தப்படும் தத்துவங்கள் ஒரே வகைதான். விந்தியாசல், மேற்குத் தொடர்ச்சி மலைகள், இன்னும் உலகில் எந்தப் பகுதிகளிலும் இத்தகைய வேலைகளைச் செய்யலாம். மழை நீர் மட்டும் சரியாக அறுவடை செய்யப்பட்டால் நமது எல்லா நீர்த் தேவையையும் பூர்த்தி செய்யலாம். நகரங்களிலும் இது சாத்தியமே. இவை மிக குறைந்த செலவில் செய்யப்படக்கூடியவை. குஜராத்திலும், மத்தியப் பிரதேசத்திலும் இருக்கும் மக்கள் தற்போது இத்தகைய வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

கேள்வி: **இந்தியாவில் முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட இஸ்ரேலிய முறை வேளாண் தொழில்நுட்பத்திற்கு உங்கள் பணிகள் மாற்றாக இருக்குமென நினைக்கிறீர்களா?**

இஸ்ரேலிய முறை இந்தியாவில் நீடித்த பலனை அளிக்கவில்லை. நமது நாட்டிற்கு மரபு வாயிலான மழைநீர் அறுவடை உத்திகளே பொறுத்தமானது. இது செலவு குறைந்தது. நமது மக்களுக்கு வேலை வாய்ப்பையும் அளிக்க வல்லது.

மொழியாக்கம் :மு. குமரவேல்

---

## இயற்கை வளப் பாதுகாப்பு இயக்கம் - தமிழ்நாடு

கடந்த 15.8.2000, அன்று வேம்பு உடைமை வழக்கில் வெற்றிபெற்ற குழுவைப் பாராட்டும் முறையில் திரு. நம்மாழ்வார் அவர்களுக்குப் பாராட்டுவிழாவை "இயற்கை வேளாண் இணையம்" ஏற்பாடு செய்திருந்தது. விழாவுக்கு தமிழகம் தழுவிய அளவில் 500க்கும் மேற்பட்டவர்கள் சூழல் ஆர்வலர்கள், இயற்கை விவசாயிகள், கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் நம்மாழ்வார் ஏற்புரை வழங்கினார். "உலகமயமாக்கம் என்கிற பெயரில் நமது தாவர இனங்கள், விலங்கு இனங்கள் போன்றவை வணிகப் பொருளாகச் சூறையாடப்படுகின்றன. இதனைத் தடுத்து நிறுத்தாவிட்டால் தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள் பெரும் சீரழிவிற்குள்ளாகும் நிலை தோன்றிவிடும். எனவே, தமிழகத்தின் நிலம், நீர், காற்று, உயிரினங்கள், ஆறுகள், ஏரிகள் போன்றவற்றை மாசுபாடு அடையாமல் காக்க வலுவான அமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அதனடிப்படையில் இயற்கைவளப் பாதுகாப்பு இயக்கம் - தமிழ்நாடு தொடங்கப்பட்டது. அமைப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அமைப்புக்குழு கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் தலைமைப் பொறுப்பை நம்மாழ்வார் ஏற்றுக்கொண்டார். கூட்டத்தினிடையே இயற்கை வேளாண்மை நூல் வரிசையில் ஆறாவது நூலான "தாளாண்மை வேளாண்மை" வெளியிடப்பட்டது.

செப்டெம்பர் 4-ம் தேதி திருச்சியில் இயற்கை வளப் பாதுகாப்பு இயக்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. உலக மயமாக்கத்தின் கேடுகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் வகையில் விரைவில் கன்னியாகுமரியிலிருந்து சென்னை நோக்கி நடைப்பயணம் மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கு முன்னதாக சூழல் காப்பு கையெழுத்து இயக்கம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. வாய்ப்புள்ள இடங்களில் மாவட்ட அமைப்புகளை ஏற்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

செப்.20-ம் நாள் தருமபுரியில் மாவட்ட இயற்கை வளப் பாதுகாப்பு இயக்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

---



படிப்பகம்

www.padippakam.com

# தேசம் ஒரு கற்பிதம்

**- கோவை ஞானி**

தேசம் ஒரு கற்பிதம் என்று சொல்லும்போது தேசிய இன விடுதலை பேசுகின்ற தோழர்களுக்குக் கோபம் வருகிறது. கற்பனை என்று சொன்னால் அது கற்பனையா? என்று ஒரு கேள்வியைக் கேட்கின்றனர். கற்பிதம் என்கிற சொல்லை ஆங்கிலத்தில் சொல்லும்போது 'Fiction' என்று சொல்கிறோம். அதற்கு சரியான மொழி பெயர்ப்பு புனைவு என்கின்றனர். புனைவு என்பதை நாம் மிகவும் கவனமாகப் பார்க்கவேண்டும். நாற்காலி என்பது ஒரு புனைவு. மரம் என்பது மூலப்பொருள். அந்த மரத்திற்கு தச்சர் ஒரு குறிப்பிட்ட வடிவம் தருகிறார். அந்த வடிவத்துக்குள் ஒரு கட்டமைப்பு இருக்கிறது. அதை மீண்டும் நாம் மரம் என்று சொல்வதில்லை. நாற்காலி என்று சொல்கிறோம். நாற்காலி என்பது மரம் என்ற மூலப்பொருளால் உருவாக்கப்பட்டாலும், மரத்திலிருந்து சில அம்சங்களிலேனும் இது வேறுபட்டிருக்கிறது. ஏனென்றால் மரத்தினால் வேறு பொருளையும் செய்கிறோம். வேறு பொருளோடு ஒப்பிட்டு பார்க்கின்றபோது இதனுடைய தனித்தன்மை புரிகின்றது. இந்த வகையில் நாற்காலி என்று சொல்லப்படுவது ஒரு புனைவு. வீடு என்பது கற்களால் சிமெண்டால் மரத்தால் கட்டப்படுகின்றது என்று சொன்னாலும் கூட ஒரு வீட்டைப் பார்த்து மரம் என்றோ, சிமெண்ட் என்றோ, செங்கல் என்றோ சொல்வதில்லை. வீடு என்று அதற்குத் தனிப் பெயர் கொடுக்கிறோம். வீடு என்பது தனிப் பயன்பாட்டுக்கு உரியதாகவும் இருக்கின்றது. இந்த வகையில் வீடு என்று சொல்லக்கூடியது ஒரு புனைவு. அதே போல பெண் என்று சொன்னால் அது ஒரு புனைவுதான். ஆணிடமிருந்து உடலியல் கூறுகளில் பெண் வெறுபட்டிருந்தாலும் கூட வரலாற்றின் வழியே பார்க்கின்றபோது பெண்ணுக்குள் பல்வேறு வகையான குண இயல்புகளை திணித்து வைத்திருக்கிறோம். பெண் என்கிற போது கற்பு முதலிய குணங்களோடு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, முதலியவற்றை எல்லாம் அந்த பெண்ணுக்குரியதாக புனைந்து வைக்கிறோம். இப்போது, பெண் என்பது ஒரு புனைவு. இதைப் போலத்தான் ஒவ்வொன்றும் புனைவு என்று நாம் பார்க்கவேண்டியுள்ளது. மனிதன் என்று சொல்கிறபோது ஒரு புனைவு. இதைப் போல எந்த ஒரு கருத்து என்றாலும் முதலில் புனைவு என நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

அந்த அடிப்படையில்தான் தேசம் என்பதும் புனைவு. ஊர் என்று சொல்லுகிறோம். அது ஒரு புனைவு என்று நாம் புரிந்து கெள்கிறோம். மொழி என்று சொல்வதும் ஒரு புனைவுதான். தேசம் என்று சொன்னால் நிலம் அடங்கியிருக்கிறது, இயற்கை அடங்கியிருக்கிறது. மக்கள் அடங்கியிருக்கின்றனர். இன்னும் பல்வேறு கூறுகள் தொழில் வேளாண்மை, வணிகம், ஆறுகள் எல்லாம் உள்ளடங்கியிருக்கின்றது. இதற்குள் வரலாறு என்கிற அம்சம் வந்து விடுகிறது. இவற்றையெல்லாம் சேர்ந்த ஒன்றை நாம்



படிப்பகம்

www.padippakam.com

தேசம் என்கிறோம். சென்ற நூற்றாண்டில் தேசங்கள் என்ற வரைபடம் இல்லாமல் இருந்திருக்கலாம். அடுத்த நூற்றாண்டில் வரைபடத்தில் மேலும் சில கூறுகள் மாறுபடலாம். ஆக தேசம் என்று சொல்லக்கூடியது ஒரு வகையான புனைவு. இந்தியா என்கிற தேசத்தை தற்போது இருக்கும் வடிவத்தில் உருவாக்கியவர்கள் பிரிட்டீசார். பிரிட்டீசாருக்கு பிறகு பாகிஸ்தான் என்பது தனியே சென்று விட்டது. வெள்ளையன் தன் தேவைக்காக ஒரு வரலாற்றோடு உருவாக்கப்பட்ட புனைவுதான் இந்தியா.

பண்பாடு என்று சொன்னாலும் அது ஒரு வகைப் புனைவு. புனைவு என்ற சொல்லுக்கு பதிலாக கட்டமைப்பு என்ற சொல்லை பயன்படுத்துகின்றனர். இந்த வகையில் முதலாளிக்கு, அவனுக்குரிய தேசம், பாட்டாளி வர்க்கத்திற்கென அவர்களுக்குரிய தேசம். ஆக நமது வரையறைகளில் சில தெளிவை ஏற்படுத்திக்கொள்வது நமக்குப் பொருத்தமாக இருக்கும். அதேமாதிரி தமிழ்ப் பண்பாடு என்று சொல்கிறோம். உழைக்கும் மக்களுக்குரிய பண்பாடு என்று வருகின்றபோது, பெருமிதம், ஆணவம் முதலியவற்றைக் களைந்துவிட்டு நமக்குரிய பண்பாட்டை உருவாக்கிக்கொள்கிறோம். நமக்குரிய பண்பாடு என்பது என்ன? கனியன் பூங்குன்றனார் முதற்கொண்டு, எல்லா மக்களுக்குரிய பண்பாடு,

"பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தலும் இலமே"

அதேபோல் நக்கீரர் சொல்கிறார்.

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே - பிறவும்
எல்லாம் ஓரோக்கும்மே செல்வத்துப் பயனே ஈதல்" - என்கிறார்

வள்ளுவர் இருவேறு உலகத்து இயற்கை என்கிறார். உலகம் இரண்டாவது அவருக்கு உடன்பாட்டில்லை. ஒருபக்கம் அறிவு இன்னொரு பக்கம் அதற்கு எதிரான குணங்கள். இவைகளெல்லாம் வரலாற்றுக்கு முன்பு இருந்த ஆதிப் பொதுமைச் சமூகத்தில் இருந்து வர்க்க வேறுபாடுகளெல்லாம் தோன்றிய சமயத்தில்தான் இந்த உலகம் இரண்டாவது என்ற கருத்தைத்தான் வள்ளுவருக்குள் பார்க்கிறோம். அப்படியென்றால், வர்க்க வேறுபாடு நமக்கு உடன்பாடில்லை. எளிய வாழ்க்கைதான் நமக்கு உடன்பாடு. பெரியவர் என்று சொல்லி மிதப்பில் இருக்க வெண்டியதில்லை, சிறியவர் என்று சொல்லி யாரும் இகழ வேண்டியதில்லை. சாதி, மத வேறுபாடு நமக்குச் சம்மதமில்லை. கடவுள் என்று சொன்னால் மனிதனிலிருந்துதான் தோன்றியது. மனிதனுக்கு கடவுள் நெருக்கமானது தான். மனிதனை விட்டு விலகி அவனை ஆதிக்கம் செய்கிற கடவுள் நமக்கு உடன்பாடில்லை. மனிதனுக்குள்ளேயே கடவுள் என்கிற கருத்தாக்கம் தோன்றுவதற்குறிய அம்சம் இருக்கின்றது. எல்லாச் சமூகம் பற்றிய வரலாற்றிலும் கடவுள் தோன்றியிருக்கிறார். சடங்குகள் தோன்றியிருக்கின்றன. சடங்குகளை முழுமையாக வரலாற்றிலிருந்து விலக்கிவிட முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

இந்த வடிவத்தில் பார்க்கிறபோது, சித்தர்களை நாம் போற்றுகிறோம். இந்த இடிப்படையில்தான் பெரியாரைச் சித்தர் வரிசையில் வைத்துப் பார்க்கிறோம். சித்தர்களுடைய சாதி வேண்டாம், மதம் வேண்டாம், எளிய வாழ்க்கை போதும், அனைவருக்குமான வாழ்க்கை போதும்' என்கிற கோட்பாட்டுக்கு வந்து சேர்கிறோம். இந்த அடிப்படையிலிருந்து தான் கல்வி, மருத்துவம் பற்றிப் பேசுகிறோம். நம்முடைய பண்பாடு என்பதை, உழைக்கும் மக்களுடைய பண்பாடாக பழைய வரலாற்றிலிருந்து, பழைய மெய்யியல்களிலிருந்து தொகுத்துக்கொள்கிறோம். இப்படித் தொகுத்துக் கொள்வதும் ஒரு வகையான புனைவுதான். இது எதற்கான புனைவு என்றால், தமிழ்ப் பண்பாடு என்ற கூறுக்குள் இருந்து ஆதிக்கம் என்பதை முழு அளவுக்குக் களைந்துவிடுதல். உழைக்கும் மக்களின் வாழ்க்கைக்கு வலிமை தரக்கூடிய, வளம் தரக்கூடிய பண்பாடு. இந்த அடிப்படையில் தான் தமிழ்ச் சமூகத்திற்கான எதிர்காலம் இருக்கின்றது என்று சொல்கிறோம். இந்தக் கூறுகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தோமெனில் சமதர்மம் என்று நாம் சொல்லும் கூறுகளுக்கு நெருக்கமாக வந்து சேர்கிறோம். சமதர்மம் என்பது தமிழனுக்குரிய பண்பாடு, வாழ்க்கைமுறை என்று நாம் சொல்கிறோம். இவை எதிர்காலத்திற்கும் உரியது. உண்மையில் வரலாற்றைப் பொருள்படுத்துவதென்பது நிகழ்காலத் தேவைகளை ஒட்டித்தான் இந்த தேசம் என்பதைக் கற்பிதம் என்று சொல்கிறபோது எதிரிடையாக கற்பனை என்று பொருள் படுத்தவேண்டிய அவசியமே கிடையாது. இதனுடைய உள்ளடக்கம் என்ன என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும் என நம்புகிறேன்.

❖ ❖ ❖ ❖ ❖

### *தமிழர் உரிமை காப்பு ஊர்வலம்*

தந்தை பெரியாரின் 122வது பிறந்தநாளை முன்னிட்டு ஒசூரில் செப்17 ஞாயிறன்று தமிழர் கூட்டமைப்பின் சார்பில் தமிழர் உரிமை காப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது. மக்கள் பண்பாளர் கழகம், திராவிடர் கழகம், பகுத்தறிவாளர் கழகம், தமிழ் தமிழர் இயக்கம் போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் பெரியார் தொண்டர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலத்தில் பெண்களும் குழந்தைகளும் பெரியாரின் படம் தாங்கிய அட்டையை ஏந்தி தமிழர் உரிமை காப்பு முழக்கங்களை எழுப்பி வந்தனர். ஊர்வலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி, மகாத்மா காந்தி சாலை வழியாக வட்டாட்சியர் அலுவலகச் சாலையிலுள்ள அண்ணா சிலையில் முடிவடைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# தேச விடுதலை சில குறிப்புகள்

- எஸ்.என். நாகராசன்

அடிப்படைக் கேள்வி என்னவெனில் பழைய காலனியத்திற்கும் புதிய காலனியத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன? என்பதுதான். புதிய காலனியச் சுரண்டல் எப்படி பழைய காலனியச் சுரண்டலிலிருந்து வேறுபட்டது? புதிய காலனியம் உள்ளூர் தொழில்களை அழிக்கிறது. தேசியத் தொழில்கள் என வளரவிடாமல் தடுக்கிறது. இதற்காக அரசியல் அதிகாரம் பயன்படுத்தப்படுகிறது. பழைய காலனியம் நேரடியாக நாட்டு மக்களைச் சுரண்டியது. உதாரணம் துணித்தொழில் சாமான்ய மக்களிடமிருந்த பல்வேறு நுட்பங்கள் மேல் வர்க்க மற்றும் பார்ப்பனர்களால் கலந்துகொள்ளப்படவில்லை. சமீப காலம் வரை பல்வேறு தொழில்கள் புரியும் தொழிலாளிகள் கலைஞர்கள் என்றே போற்றப்பட்டனர். கட்டிடக் கலைஞர்கள், நெசவுக் கலைஞர்கள், சிற்பக் கலைஞர்கள் என்றுதான் அழைக்கப்பட்டனர். இன்று கலைஞர்கள் என்ற சொல்லை அகராதியில்தான் தேடவேண்டியுள்ளது. பழைய காலனியத்திலும் அதற்கு முன்பும் எழுத்தறிவற்ற மக்களின் கட்டுப்பாட்டில்தான், வேளாண்மை, உலோக வேலை, கொத்தனார் வேலை, கட்டிட வடிவமைப்பு வேலை (Architecture), கப்பல் கட்டுதல், மருத்துவம் மற்றும் தோல்தொழில் இன்ன பிறவும் இருந்தன.

இன்று நிலைமை தலைகீழாக மாற்றப்பட்டுவிட்டது. சிறப்பு நிபுணத்துவம் புகுத்தப்பட்டுள்ளது. தொடக்க கால ஏகாதிபத்திய எதிர்ப்பின் உள்ளீடு தேசியத் தொழிற்சாலைகள் தேவை என்கிற அளவில் இருந்து. ஏனென்றால் அன்று அவை ஏகாதிபத்தியத்தின் ஆளுகைக்கு உட்படவில்லை. இன்று நிலைமை எப்படியுள்ளது என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. பழைய காலனியச் சூழலில் கிராமச் சந்தையே தேசத்தின் சந்தை. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரும் 10,20 ஆண்டுகள் தொழிற்சாலைகளில் பகுதி திறன் (Semi skilled) பெற்றவர்களே வேலை செய்தனர். அதாவதுL.M.E, L.C.E, L.M.P போன்ற படிப்புகளை நினைவுபடுத்திப் பாருங்கள். அவர்கள் தான் அன்றைய நிலையில் உயர்ந்த தொழில்நுட்பப் பொறியாளர்கள், மருத்துவர்கள். இன்றும் கூட I.T.I படித்தவர்களே அதே தொழிற்சாலைக்குப் போதுமானது என்பது தான் உண்மை. இவைகளைக் கொண்டே ஒரு தேசத்தை தொழில் வளமுள்ளதும் பொருளியல் வளமுள்ளதுமானதாக ஆக்க முடியும். இன்று நமக்கு I.I.T. மற்றும் மருத்துவக் கல்லூரிகள் தேவையற்றவையே.

முன்பு மதக்காரர்கள் தமது அறிவைப் பேரறிவு என்று சொல்லிக்கொண்டனர். அது கடவுளால் தமக்கு அருளப்பட்டது என்றும் சொன்னார்கள் சமுதாயத்தில் தமது மதிப்பைத் தக்க வைத்துக் கொண்டனர். அன்று மக்களிடம்தான் எல்லாக் கலை அறிவும் இருந்தது அதனைச் சிற்றறிவு என்று மதக்காரர்கள் சொன்னார்கள். ஆனால் வளர்ந்து வந்த பூர்சுவா வர்க்கம்,



படிப்பகம்

www.padippakam.com

மதக்காரர்களின் வேலையைத் தான் எடுத்துக் கொண்டதோடு நிற்கவில்லை. மக்களின் கலை நுட்பங்களில் அதாவது சிற்றறிவு என்று சொல்லப்பட்டதின் மீது தனது ஆதிக்கத்தை மெல்ல மெல்ல நிறுவியது. அடுத்து அரசு அதிகாரத்தைக் கொண்டு - இராணுவம் - போலீஸ் - சிறைச்சாலைகள், தொழிற்சாலைகள் இன்னபிற உண்டாக்கப்பட்டன. இவைகளே பலாத்காரம், அடிமைத்தனம் மற்றும் சரண்டலின் வடிவங்கள்.

இதனை மாவோ தனது மக்கட்போர் தத்துவத்தால் முறியடித்தார். மாவோ பூர்சுவா வர்க்கத்தை அழித்தொழித்தார். "எனக்கு களி உருண்டையும், சாதாரணத் துப்பாக்கியும் போதும்" என்றார். மேலும் "அணுகுண்டு காகிதப்புலி" என்றார். மாவோவின் இத்தகைய அணுகுமுறைக்குப் பின்னால் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையின் வடிவங்களை மாற்றியாக வேண்டிய சூழல் ஆதிக்கவாதிகளுக்கு ஏற்பட்டது. "நவீன தொழில்நுட்பங்களும் இனிமேல் பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதமாக இருக்க முடியாது" என்றார். மாவோ. அதாவது கருவிகள் என்பது அறிவையும் சேர்த்துத்தான். இன்றியமையாப் பொருட்களின் உற்பத்திக்காக நிபுணர்களைச் சார்ந்து இருப்பது என்றுமே ஆபத்தானது. குறிப்பாக உணவு உற்பத்தி நிபுணர்களைச் சார்ந்திருக்கக் கூடாது. இதில் தான் இந்த அயோக்கியர்கள் இன்று ஆதிக்கம் செய்ய முனைந்து நிற்கிறார்கள். இன்று வேளாண் பல்கலைக்ழகங்ளின் வேலை இதுதான். எனவே, பல்கலைக்கழகங்ள் இழுத்து மூடப்பட வேண்டும். சிறப்பு நிபுணத்துவம் பெற்ற அறிவு, ஆதிக்கம் வகிக்கும்/தீர்மானிக்கும் சக்தியாக இருக்க இனி அனுமதிக்கலாகாது. **உணவு, ஆயுதங்கள் இரண்டுமே சாமானிய மக்களின் கைகளிலே இருக்கவேண்டும். அடுத்ததாக உயிரியல், தாவரவியல், சூழலியல், உலோகவியல் போன்ற துறைகள் மக்களால் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். சில வருட அனுபவம் மட்டுமே இதற்கு போதுமானது. அவ்வாறு சேகரமான அறிவு ஜனநாயகத்தை அழிப்பதாக இருக்காது.** யாராலும் எளிதில் அழித்துவிடவும் முடியாது. எனவே, இன்று நாம் மக்களுக்கான அறிவியலையும், ஆதிக்கவாதிகளுக்கான சிறப்பு நிபுணத்துவ அறிவியலையும் சரியாகப் பிரித்து அறியவேண்டும்.

இன்று தேசியப் போராட்டம் என்பது உலக அளவில் நடக்கும் போராட்டத்துடன் இணைந்ததாக இருக்கவேண்டும். (இதற்குப் பொருள் உலகெங்கிலும் ஒரே இயக்கம் இருக்கவேண்டும் என்பதல்ல) ஏனெனில் மக்களின் எதிரிகள் உலக அளவில் இணைந்திருக்கிறார்கள். இது கிராம மக்களின் மாபெரும் யுத்தம். கிராமம் **X** நகரம். மக்கள் அறிவுக்கும் நிபுணத்துவ அறிவுக்குமானது. ஆயுதங்களும், நவீன நிபுணத்துவ அறிவும் தான் தீர்மானிக்கும் சக்தியென்றால் அடிமைகளுக்கு என்றுமே வாழ்வில்லை.

இன்றைய நிலையில் தேசிய விடுதலை என்பது ஒரு நீண்ட காலப்போர் முறை. பல பத்து இலட்சக் கணக்கான மக்கள் இதில் பங்கு



படிப்பகம்

www.padippakam.com

பெறவேண்டும். புதிய காலனியத்தின் பல்வேறு முகங்களை அடையாளம் கண்டுகொள்ளாத -அல்லது கண்டுகொள்ள மறுக்கின்றவர்கள் அயோக்கியர்கள். இந்த சில்க் ஜிப்பா ஆசாமிகளை மக்கள் உதறித் தள்ளுவார்கள். முதலாவதாக பெரிய கல்லூரிகளை மூடியாகவேண்டும். இளைஞர்களை வெளியில் வர அறைகூவல் விடுத்தாக வேண்டும். முழுமையான,உண்மையான விடுதலை இயக்கத்துக்குத் தயாராக வேண்டும் என்பதே நமது பிரச்சாரத்தின் மையமாக இருக்கவேண்டும்.

*அடிப்படைக் கோட்பாடு பெரும்பான்மையான மக்கள், அதாவது உழைக்கும் மக்கள் அவசியமான எல்லாத் துறைகளிலும் ஆளுமை வகிக்கவேண்டும். அது தான் இன்றைய நிலையில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம். சிறப்பு நிபுணத்துவ அறிவும் கருவிகளும், ஆயுதங்களும் தீர்மானிக்கும் சக்திகளாக இருப்பின் அவை சாமானிய மக்களின் மீது சர்வாதிகாரம் 6,'சலுத்த மட்டுமே பயன்படும்.*

**உலகமயமாதல் தாராளமயமாதல் என்ற சொற்களுக்குப் பின்னால் மறைந்து நிற்கும் பெரும் சதி :**

கடந்த எட்டாண்டுகளுக்கும் மேலாக உலகமயமாதல் என்கிற போக்கை தீவிரமாக அதிகார வர்க்கம் நடைமுறைப்படுத்துகின்றது. இவற்றின் விளைவுகள் இப்போது வெளிப்படையாகத் தெரியத்துவங்கியுள்ளன. உலக மயமாக்கல் என்பது பரவலாக இருக்கின்ற அனைத்தையும் ஓரிடத்தில் குவிப்பது எனக் கிளம்பிருக்கிறது.

பொருளாதாரத்தை மையத்தில் குவிப்பது

அரசியல் அதிகாரத்தை மையத்தில் குவிப்பது

இராணுவ அதிகாரத்தை மையத்தில் குவிப்பது

சக்தியை (Energy) மையத்தில் குவிப்பது

கல்வியை மையத்தில் குவிப்பது

விதைகளை மையத்தில் குவிப்பது

மேற்கண்ட பரவலாக்கப்பட்டுள்ள(!) துறைகளை மையத்துக்குள் கொண்டுவருவதன் மூலம் தாராளமயம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பொருளாதாரத்தை மையத்தில் குவிப்பது பற்றி ஏராளமான உதாரணங்கள் கொடுக்க முடியும். சில பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவின் வரவு செலவுக் கணக்கைவிட அதிக அளவு பணத்தைக் கையாள்கின்றன. இங்குள்ள பெரு முதலாளிகளின் பணமும் பன்னாட்டு நிறுவனங்களில் பங்குத் தொகையாக இருக்கிறது. பல்வேறு நாடுகளின் நீதிமன்றங்கள் அதிகாரமற்றவைகளாக மாறி வருவதைப் பார்க்கிறோம். இராணுவத்திற்கென செலவிடப்படும் தொகை மேலும் மேலும் அதிகரித்தும், அதிகார எல்லைகள் விரிக்கப்பட்டும், மையப்படுத்தப்பட்டதாகவும் மாற்றப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

சக்தி என்று சொல்லப்படுகின்ற ஆற்றல் வடிவங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட முடியாத பெட்ரோலியப் பொருட்களைச் சார்ந்தும், அணு ஆற்றலைச் சார்ந்தும் அமைக்கப்படுகின்றன. இது மையப்படுத்தலின்றி வேறல்ல.

வேளாண்மையில் விதைகள் - பன்னாட்டு நிறுவனங்களால் உற்பத்தியும் விநியோகமும் நடக்கின்றன. இதன் விளைவுகள் இப்போதே தெரியத் துவங்கிவிட்டன. குறிப்பாக மீண்டும் முளைக்காத மலட்டு விதைகள் - மடிவிப்பு மற்றும் முடிவிப்புத் தொழில்நுட்பங்களால் நிரப்பப்படுகின்றன. இதற்கென உயிரி தொழில் நுட்பப் புரட்சி என்று பேசப்படுகிறது.

இந்த உயிரி தொழில்நுட்பத்தில் படியாக்க - குளோனிங் முறையில் ஒரே வகையான தாவரங்கள், விலங்குகள், மரங்களை உற்பத்தி செய்யலாம். சொன்னதை மட்டுமே செய்யும் ஒரே வகை மனிதர்களையும் உற்பத்தி செய்ய முடியும். ஆண்களையும், பெண்களையும் வீரியமற்றவர்களாகச் செய்யமுடியும். இந்த வகையில் வெள்ளையின ஆதிக்க வகுப்பினர் ஆதிக்கம் வகிக்க வழிவகை செய்யப்பட்டுவிட்டது. இது உலக அளவில் மக்களை நான்கு வர்ணங்களாகப் பிரிக்கக்கூடிய வர்ணாசிரம அமைப்பன்றி வேறில்லை. இந்தியாவின் வர்ணமுறை - உலகிற்கே 'வழி' காட்டப்போகிறது. பூரியிலும், காஞ்சியிலும் இருக்கிற சங்கராச்சாரிகளுக்கு இனி அமெரிக்காவில் வேலை காத்திருக்கிறது. நவீன 'மனு' விரைவில் தனது பூரண முகத்தைக் காட்டவிருக்கிறான். வாஷிங்டன் இதன் தலைமையகம். உலகின் முன்னணிப் பெருநகரங்களே அதனுடைய உடனடி ஏவலாட்களின் தளங்கள். நிபுணர்களை உற்பத்தி செய்யும் புதுவகைக் கல்வி முறை ஆங்கில முகமூடி அணிந்து படையெடுத்ததுள்ளது. ஆங்கிலத்துக்குக் காவடி தூக்குபவர்களைப் புதுப் பார்ப்பனர்கள் என்று சொல்லலாம்.

❄❄❄❄

### தாய்த் தமிழ் செங்கல் நடை பயணம்

தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்தியும் அம்பத்தூர் தாய்த் தமிழ் பள்ளிக்கு கட்டிட நிதி வேண்டியும் தோழர். தியாகு தலைமையில் 5 பேர் கொண்ட குழு கடந்த ஆகஸ்டு 4ம் தேதி ஒசூரில் தொடங்கி சென்னைவரை நடைப்பயணம் மேற்கொண்டனர். ஒசூர் அசோக் லேலண்ட் தொழிலாளர்கள் ரூ. 25,000 வசூல் செய்து கொடுத்தனர். வழி நெடுக பரப்புரை செய்து கொண்டும் நிதி வசூல் செய்தும் ஆகஸ்டு 19ம் தேதி சென்னை சென்றடைந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# உலக மயமாக்கல் - விளைவுகள்

**- சிற்பி பாலசுப்பிரமணியம்**

இந்தியாவில் மட்டும் 1,50,00,000 வேப்ப மரங்கள் உள்ளன. வீரியமான மருத்துப் பண்புகள் கொண்ட வேம்பு எண்ணெய், சோப்பு, பற்பசை, உரம், பூச்சி மருந்து எனப் பல அரிய பொருள்களை உருவாக்க உதவும் அதிசய மரம். சூரிய தேவனின் நேசத்துக்குரிய மரம் என்பதால் கோடையில் அமுத நிழல் தருகின்றது.

வள்ளுவர் மருந்தாகித் தப்பா மரம் என்று கூறியது இதைத்தான் போலும்! இலையும் பூவும் காயும், பழமும், தோலும், வேரும் எல்லாம் மருந்து! மலேரியாவுக்கும், புற்று நோயக்கும் கூட மருந்து தருகிறதாம் வேம்பு.

அசடிராக்கின், நிம்பின், நிம்பிடின், மிலியான்ட்ரீயோல், சலானின், விலாசினின், வேப்பினின் என்ற வேதிப் பொருகள்கள் மட்டுமல்லாது லெயிக் அமிலம், லினோயிக் அமிலம், பாமிற்றிக் அமிலம், லிக்னோடிரிக் அமிலம் ஆகியவையும் டிரைடரப்பினியோட் என்ற வேதிப் பொருளும் இதன்பால் உள எனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நூறு வகை வேதிப்பொருள் பிரித்தெடுக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன. ஆனால் ராபர்ட் லார்சன் என்ற அமெரிக்க விஞ்ஞானி வேம்பின் கிருமி நாசினித் திறனைக் கண்டறிந்ததாகவும், அதன் அடிப்படையில் வேப்பம் விதைகளைக் கொண்டு சில வகை மருந்து தயாரிப்பதற்கான உரிமையைப் பதிவு செய்து விட்டார். இனி அவரன்றி வேப்பம் விதையை யாரும் அசைக்கமுடியாது என்ற அசுர பலத்தைப் பெற்று விட்டார். இதற்குக் காரணம் காட் ஒப்பந்த விதிகளில் வாணிகம் தொடர்பான அறிவுச் செல்வ உரிமை **(TRIPS)** அவருக்குத் தந்துள்ள முழுமையான சலுகைதான் யாரும் அவருடைய அனுமதியின்றி, எந்த நாட்டிலும் வேப்பம் விதைக் கிருமி நாசினி தயாரிக்க முடியாது! அநியாயம் என்கிறீர்களா? அப்படிச் சொல்லாதீர்கள். அதுதான் உலக மயமாக்களின் தலைவிதி. ஏன் நம் விஞ்ஞானிகளும் முனைந்து கண்டுபிடிப்புக்கள் செய்து பதிவுரிமை பெற வேண்டியது தானே என்று பலரும் கருதலாம். இன்று உலகம் செல்வ வளத்தில் இரண்டாகப் பிரிந்து கிடக்கிறது. வளமான வடக்கும் வறுமைமிக்க தெற்கும் என, உயிரியல் தொழில் நுட்பம் **(Bio Technology)** நிலவியல் தொழில்நுட்பம் **(Geo Technology)** என்னும் துறைகளில் வளம்வாய்ந்த நாடுகள் நெடுந்தொலைவு பயணம் செய்து விட்டன. அதனால்தான் படியாக்க **(Cloning)** உயிரினங்கள் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. ஆய்வுக்குச் செலவிடும் வளம் அவர்களிடமே உள்ளது.

ஏழை நாடுகள் பொருளாதாரத்தில் ஏழ்மையானவைதான். எனினும் பயிரின, உயிரினப் பன்மையில் முன்னைய நாடுகளைவிட வளமானவை. ஆனால் அந்த வளத்துக்கும் புதிய பொருளாதாரக் கொள்கைகளாலும், உலகமயமாக்கல் சித்தாந்தத்தாலும் ஆபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன.

எல்லா உயிரினங்களையும் உருவாக்கும் தொழில்நுட்பத்தை இயற்கை பெ[illegible]றது மரபணுக்களின் இணைப்பாலும், வடிவமைப்பாலும் உயிரினங்கள் ப[illegible]கின்றன. குரோமசோம் என்ற நிறமிக்குள் மாலைகளாகக் கோத்துக்



படிப்பகம்

www.padippakam.com

கிடப்பவை மரபணுக்கள். வளர்ச்சி, வாழ்வு, நிறம், மணம், குணம் எல்லாம் இந்தச் சித்திரக் குள்ளனுக்குள் பதுங்கிக் கிடக்கின்றன. இந்த மரபணுக்களின் இணைவைத்தான் மரபணுக் கணிமம் (Germ Plasm) என்கிறார்கள்.

இந்த மரபணுக் கணிமத்தை இனம் கண்டு சேமித்து வைக்கிறவர்கள்தான் நாளைய உலகின் வல்லரசுகள். இயற்கையைத் தம் கைக்குள் அடக்குகிற இந்த முயற்சியில் இன்று வளம் வாய்ந்த நாடுகள் ஈடுபட்டிருக்கின்றன. மனித குலத்தின் நலனுக்காக இயற்கையை அழியாமல் காக்கும் பொருட்டு இதனைச் செய்தால் அது போற்றுதலுக்குரிய பணியாக இருக்கும் ஆனால் நடப்பது என்ன?

இன்று உலக மரபணு வங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் வாயிலாகச் சேமிக்கப்பட்டுள்ள மரபணுக் கணிமத்தில் 27% அமெரிக்காவிடமும் 35% ஐரோப்பிய நாடுகளிடமும் உள்ளன. நுண்ணுயிரிகளில் 86-விழுக்காடும், வளர்ப்பு மிருகங்களின் மரபணுக் கணிமத்தில் 85 விழுக்காடும் வளர்ந்த நாடுகளிடம் உள்ளன. குறிப்பாக அமெரிக்காவிடம் இந்தச் சேமிப்பில் கொலரடோவில் உள்ள Fort Collins National Seed Storage Laboratory என்ற ஆய்வகம்தான் முதலிடம் வகிக்கிறது.

உயிரியல் தொழில் நுட்பத்தின் மூலம் கண்டுபிடிக்கிற அல்லது உருவாக்குகிற எந்தச் செடி, கொடி, உயிரினமானாலும் அதன் படைப்புரிமை அந்த விஞ்ஞானிக்குச் சொந்தமாகிவிடும் என 'காட்' உரிமை ஒப்பந்தம் தெளிவாக்கியுள்ளது. வெட்ட வெளிச்சமான உண்மை என்னவென்றால் உயிரியல் தொழில்நுட்பம் அல்லது மரபணுப் பொறியியலில் இந்தியா போன்ற நாடுகள் மெச்சத்தக்க முன்னேற்றம் எய்தவில்லை. என்பதுதான்.

உயிரியல் தொழில்நுட்பமே இன்றைய அறிவியலில் முதன்மை இடத்தை இப்போது பெற்றிருக்கிறது. R&Dஎன்று அழைக்கப்படுகின்ற ஆய்வும் வளர்ச்சியும் என்ற துறையில் கோடிக்கணக்கான டாலர்கள் மேலை நாடுகளில் செலவிடப்படுகின்றன. திசு வளர்ச்சி (Tissue Culture) மூலம் உயிரின வளர்ச்சிக்காக வழிகாட்டுகிற முயற்சிகளும் மேற்கே மெத்த வளர்கின்றன.

இவற்றையெல்லாம் பயன்படுத்துகிற பிரம்மாண்டமான தொழில் அமைப்புகள் (பேயர், கார்கில், டூபாண்ட், ஹெர்ஸ்ட் சாண்டோஸ்) பன்னாட்டு அமைப்புக்களாய் உலகை ஆளத்துடிக்கின்றன. இவை நம்மை என்ன செய்துவிட முடியும்? என்பது கேள்வி.

உதாரணத்துக்குக் கரும்பையும் சர்க்கரையையும் எடுத்துக் கொள்வோம் அமெரிக்காவில் ஜி.டி. சியேர்லே என்ற தொழிலகம் அஸபர்டேம் என்ற ஒன்றைக் கண்டு பிடித்துள்ளது.அது சர்க்கரையைப் போல இரு நூறு மடங்கு இனிப்பானது.உடனே அந்தச் சிறிய நிறுவனத்தை மொன்சாண்டோ என்ற பன்னாட்டு நிறுவனம் விலைக்கே வாங்கி உலகச் சந்தையில் புதிய சர்க்கரையை விற்கத் தொடங்கியது.

மற்றொரு பன்னாட்டு நிறுவனம் சர்க்கரையைப் போல் இரு நூற்றைம்பது மடங்கு இனிப்பான தௌமாட்டின் என்ற பொருளை உருவாக்கியது. கானாவில்



படிப்பகம்

www.padippakam.com

இருந்த ஒருவகைப் பழத்திலிருந்து இப்பொருள் பிரித்தெடுக்கப்பட்டது. உடனே கானாவில் அவ்வகைப் பழத் தோட்டங்கள் பெருகின. விரைவில் திசு வளர்ச்சி முறையில் இப்படிச் செடிகளை அந்த நிறுவனம் உருவாக்கியது. அதன் பிறகு தானே அமெரிக்காவில் பழத் தோட்டங்களை வளர்க்க ஆரம்பித்தது. கானாவின் பழத் தோட்டங்கள் கேட்பாரற்றுப் போயின.

எண்பதுகளில் தானியங்களிலிருந்து ஒருவகை இனிப்புத் திரவம் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை கொக்கோ கோலா, பெப்சி நிறுவனங்கள் பயன்படுத்தத் தொடங்கின. பிற நிறுவனங்களும் இதைப் பின்பற்றின. இதனால் கரும்பிலிருந்து உற்பத்தி செய்யப்படும் சர்க்கரையின் பயன்பாடு உலக அளவில் 20% குறைந்து போய்விட்டது.

பாரம்பரியமாகக் கரும்பையும், அதன் சர்க்கரையையும் வணிகப் பொருளாகப் பயன்படுத்திக் கொண்டிருந்த விவசாயிகளுக்கு மெல்ல மெல்ல இதனால் சோதனை நேர்ந்திருக்கிறது. நாளைக்குத் தேங்காய் எண்ணெய் செயற்கையாக உற்பத்தி செய்யலாம். இந்திய வேளாண் பொருள்கள் யாவும் இயற்கையாகவோ, செயற்கையாகவோ உற்பத்தி செய்யப்பட்டு நம்முடைய சந்தையிலேயே விற்பனை செய்யக்கூடிய காலமும் வரக்கூடும்.

இவற்றை அறிவியல் முன்னேற்றம் என்று சமாதானம் கொள்ள முடியாது. ஒரு குறிப்பிட்ட தொழில் திடீரென வீழ்ச்சி அடையும்போது, அந்தத் தொழிலை நம்பியிருந்த கோடிக்கணக்கான மக்கள் அடியற்ற மரங்களாகிற அபாயம் காத்திருக்கிறது.

உலக மயமாக்கல் என்ற அழகான பெயருக்குள் பல விபரீதங்கள் மறைந்திருக்க வாய்ப்பிருக்கிறது. இது குறித்து தீவிரமான விழிப்புணர்வு நமக்குள் உருவாக வேண்டியது அவசரமான அவசியம். நம்முடைய பல்கலைக் கழகங்களும் ஆய்வுக் கூடங்களும் கவலையுடன் இவற்றை ஆராய வேண்டும்.

அரசியலில் புதிதாக இறங்கும் படித்த இளைஞர்கள் சிந்திக்க வேண்டும். நம் முன்னோர்கள் கண்ணீரும், இரத்தமும் சிந்தி வளர்த்த தாய்நாடு அவலம் கொண்டு அழியுமோ என்று மிகமிக அக்கறையோடு சிந்திக்க வேண்டும்.

'எண்ணம் எல்லாம் நெய்யாக
எம் உயிரின் உள் வளர்ந்த
வண்ண விளக்கு இஃது
மடியத் திருவுளமோ?'

என்ற மகாகவியின் கேள்விகளால் நெஞ்சைப் புரட்டிப் போட வேண்டும்.

புதிய பொருளாதாரமும், உலக மயமாக்கலும் தரும் கனிகளைப் பற்றிப் பேசாமல் வெறும் அச்சுறுத்தல்களையே அடுக்குவதாகக் கருதாமல் ஆழ்ந்து சிந்தியுங்கள்.

புதிய பொருளாதாரம் எங்கே போகிறது? மலரும் நந்த வனங்களுக்கா? மற்றொரு கைவிலங்குக்கா? (நன்றி : எம்.பி. வீரேந்திர குமாரின் மலையாள நூல் 'காட்'டும்/காணாச் சரடுகளும், Business Line/ Frontline Financial Express).



படிப்பகம்

www.padippakam.com

# வெள்ளையர் கால இந்தியா

15ம் நூற்றாண்டில் முதன்முறையாக ஐரோப்பியர்கள் இந்தியாவினுள் நுழைந்தபோது, உலகிலேயே பொருளாதார நிலையில் சிறந்தும், அதிகஅளவுக்கு நகரங்கள் கொண்ட நாடாகவும் இந்தியா இருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி கி.பி.1600-ல் இங்கு நிலைகொண்டது. அப்போது இந்தியாவைக் கொள்ளையிடுவதும், ஏழைநாடாக்குவதும் தொடங்கியது. 1760 - வரையும் பிரிட்டனின் தொழில்புரட்சி நடைபெறுவதற்கான பொருளியல் தேவைகளை நிறைவு செய்யும் நாடாக இந்தியா ஆக்கப்பட்டது. ஆட்சியைக் கைப்பற்றிய வெள்ளையர் நிலவரிகளை வசூலிக்கத் தொடங்கினர்.

இந்தியக் கிராமங்களின் பொருளியல் அடித்தளத்தையும், இயற்கை ஆதாரங்களையும் அழிப்பதைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை (இதற்கு முன் இந்தியாவின் பொருளியலைத் தாங்கி நின்றிருந்தது வேளாண்மைதான்) இந்திய சமூகத்தில் சமத்துவமின்மையும், அடிமைத்தனமும் எவ்வளவுதூரம் இருந்தது என்பதைச் சொல்வது கடினம், ஆனால் இந்தியக் கிராங்கள் குடியரசுகளைப் போலச் செயல்பட்டன. தமது சொந்த ஆதாரங்களை அவர்களே நிர்வகித்துக்கொண்டனர். அத்தகைய உள்ளாட்சி நிர்வாக அமைப்புகள் இந்தியாவெங்கும் வெவ்வேறு வகையில் செயல்பட்டன.

இந்தியாவின் வளமான பொருளியல் வாழ்வுக்கு அடித்தளமாக இருந்தது வேளாண்மை. விஜயநகரப் பேரரசின், கிருஷ்ணதேவராயர் (கி.பி.1509-1530) அரசின் வருமானத்தை அதிகரிக்க "புதிய வேளாண் நிலங்களை உண்டாக்க வேண்டும், அல்லது வேளாண் உற்பத்தியைப் பெருக்கவேண்டும்" என்று கூறியுள்ளார். தண்ணீரைப் பாதுகாப்பது, பராமரிப்பது, சேகரிப்பது, விநியோகிப்பது, நீர்ச்சிக்கல்களைத் தீர்ப்பது, நீர் பாசனவிதிகளை மீறுபவர்களைத் தண்டிப்பது, வரி விதிப்பது உட்பட எல்லா அதிகாரமும் கிராம சமூகங்களிடமே இருந்தது. செங்கல்பட்டு மாவட்ட ஆவணக்காப்பகத்திலிருந்து எடுக்கப்பட்ட விவரங்கள் கிராமங்களின் மொத்த உற்பத்தியில் 4 முதல் 5 சதவிகிதம் நீர் ஆதாரங்களைப் பராமரிக்க ஒதுக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறது. அவர்கள் காலத்தில் பொதுப்பணித்துறையோ, தொழில்நுட்ப பொறியாளர்களோ இல்லை. அரசர்கள் கிராம மக்களை நீர் ஆதாரங்களைப் பராமரிக்கும் பல்வேறு உத்திகளை மேற்கொள்ளச் செய்தனர். கோயில்களுக்கு நிலங்களைத் தந்து அவைகளோடு ஏரி, குளங்களையும் மானியங்களாகத் தந்தனர்.

வெள்ளைக்கார அதிகாரி தாமஸ் மன்றோ, விஜயநகரப் பேரரசுக் காலத்திய நீர் நிர்வாக முறைகளைப் பற்றி இப்படிக் கூறுகிறார். "இங்கு புதிதாக ஏதாவது ஒரு ஏரியோ, குளமோ வெட்டலாம் என்று இடம் தேடினால் கிடைக்காது.



படிப்பகம்

www.padippakam.com

ஏனெனில் சாத்தியமான இடங்களில் எல்லாம் ஏற்கெனவே அவை வெட்டப்பட்டுள்ளன. பராமரிக்கப்படாமல் இருக்கும் குளங்களையும் பார்ப்பது அரிது".

கிராமத்தை அடித்தளமாகக் கொண்டு இயங்கிய நீர் நிர்வாக அமைப்பை பிரிட்டிஷார் அழித்தனர். அதற்குப் பதிலாக அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அதிகாரிகள் நிலங்களுக்கு வரிகளை வசூலிப்பது என்கிற முறையைக் கொணர்ந்தனர். வறட்சி ஏற்பட்ட காலங்களில் மொத்த விளைச்சலையும் வரியாக வசூலித்துக்கொண்டனர். வரிகள் அனைத்தும் பணமாகவே செலுத்தப்பட வேண்டும் என்று சட்டமியற்றினர். இதனால் இந்திய வேளாண்சமூகம் மேலும் நெருக்கடிக்குள்ளானது. பெரும்பாலான மக்கள், விவசாயிகள் நிலமிழந்தனர், ஆதாரவற்றவர்கள் ஆனார்கள்.

- நன்றி "டையிங் விஸ்டம்" - 1997



படிப்பகம்

www.padippakam.com

# உலக மயமாக்கல் எதிரொலி :
# மனநோய்க்கு ஆளாகும் தொழிலாளர் தொகை அதிகரிப்பு

உலகமயமாக்கல் மற்றும் புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவது அதிகரிப்பதன் காரணமாக தொழிலாளர்கள் மனச் சோர்வு, மன அழுத்தம், மன உளைச்சல் போன்ற நோய்களுக்கு ஆளாவது அதிகரித்துவருகிறது.

இதன் காரணமாக, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு அரசுகள் செலவிடும் தொகையும் அதிகரித்துக்கொண்டு செல்கிறது. இத் தகவலை சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐஎல்ஓ) தெரிவித்துள்ளது. பின்லாந்து ஜெர்மனி, போலந்து, பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் ஐஎல்ஓ ஆய்வு நடத்தியது. அந் நாடுகளில் 10ல் ஒருவருக்கு மன உளைச்சல் நோய் ஏற்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டிய நிலை உருவாவதாகவும் ஐஎல்ஓ ஆய்வில் தெரியவந்துள்ளது. அதன் விவரம்:

மன உளைச்சல் நோய்க்கு ஆளாவதால் பணியிலிருந்து முன்னதாகவே ஓய்வு பெறும் தொழிலாளர் தொகையும் அதிகரித்து வருகிறது. பணியாற்ற இயலாதோருக்கு அளிக்கப்படும் உதவித் தொகையைப் பெறுவோரில் மன நோய்க் காரணங்களுக்காக உதவி பெறுவோர் எண்ணிக்கையும் கூடிக்கொண்டு செல்கிறது.

மன உளைச்சல் நோய் சிகிச்சைக்கு மட்டும் அமெரிக்கா செலவிடும் தொகை ஆண்டுக்கு ரூ.138000 கோடியிலிருந்து ரூ.184000 கோடி ஆகும். மன நோய் காரணமாக ஆண்டுக்கு 20 கோடி மனித வேலைநாள்கள் இழப்பு ஏற்படுகிறது. மனநோய்ச் சிகிச்சைக்காக ஐரோப்பியக் கூட்டமைப்பு தனது மொத்த உற்பத்தி மதிப்பில் 3லிருந்து 4 சதவீதம் வரை செலவிடுகிறது.

ஜெர்மனியில் பணியிலிந்து முன்னதாக ஓய்வு பெறுவோரில் 7சதவீதம் பேர் மனநோய்க் காரணங்களால் விலகுகின்றனர். வேறு உடல் நோய்களுக்காக விடுப்பில் செல்வோரைவிட இரண்டரை மடங்கு அதிக காலத்துக்கு மனநோய்க்கு ஆளானோர் விடுப்பில் செல்கின்றனர்.

ஜெர்மனியில் கடந்த சில பதிற்றாண்டுகளாகவே, தொழிற்சாலைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாலும் புதிய நவீன தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படுவதாலும் தொழிலாளர்கள் பல்வேறு நெருக்குதல்களுக்கு ஆளாகியுள்ளனர். அதோடு, வேலையின்மைப் பிரச்சினையும் அதிகரித்து வருகிறது.

பிரிட்டனில் 20 பேருக்கு ஒருவரும் அமெரிக்காவில் 10 பேருக்கு ஒருவரும் பின்லாந்தில் 50சதவீதத் தொழிலாளரும் மன உளைச்சல் நோய்க்கு ஆளாகின்றனர்.

நன்றி : தினமணி - 12.10.2000



படிப்பகம்

www.padippakam.com

## உயிராய், உணர்வாய் தமிழ்

சீனா ஜப்பான் ஜெர்மன் அமெரிக்கா
அவனவன் மொழியில் படிக்கறாண்டா
உலகத்தையே உள்ளங்கையால்
விஞ்ஞானத்தால் உருட்டுறான்டா

தாய்ப்பாலே உலகில் சிறந்தது
தாய்மொழி படிப்பதே பிள்ளைக்கு நல்லது
புரியாத மொழியால் குழப்பம் பெருகும்
தாய்மொழி கற்பதால் சூட்சுமம் விளங்கும்

ரத்தம் சதையாய் நாடி நரம்பில்
ஒன்றிக் கலந்தது மொழியுணர்வு
உழைக்கும் மக்களின் உணர்வில் குளித்து
ஒலியாய் இசைப்பது தமிழழகு

விண்ணை இடிக்கும் தஞ்சை கோபுரம்
வியத்தகு சாதனை நமதல்லவா
ஆங்கிலம் படிச்சா கல்லணை கட்டினான்
அவன் புகழ் நிலைச்சு நிக்கலையா
நிலவாய் எழுந்த தாஜ்மஹாலை
நிஜமாய் படைத்ததும் நாமல்லவா
அஜந்தா எல்லோரா ஓவியங்களின்
அழகின் உயிர் துடிப்பில்லையா

ஆறு குளங்களை காடு மலைகளை
சீரமைத்தவன் முப்பாட்டன் - அந்த
தொப்பிக்காரனின் ஆங்கிலம் படிச்சா
உழுது விதைச்சான் நம் அப்பன்



படிப்பகம்

www.padippakam.com

அன்னைத் தமிழின் மானம் காக்க
பிள்ளைகள் நாம் ஒன்றாய் சேர்வோமடா
அடிமுதல் நுனிவரை தமிழிலே கற்க
ஆவண யாவும் செய்வோமடா

- வையம்பட்டி முத்துச்சாமி

* * * * *

படைப்புகள்
விமர்சனங்கள்
வரவேற்கப்படுகின்றன.

அனைத்துத் தொடர்புகளுக்கும் :
**மு. குமரவேல்,**
921, பாவேந்தர் இல்லம், த.நா.வீ.வ.வா. குடியிருப்பு,
இராயக்கோட்டை சாலை, ஒசூர்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

செப். 2000 ரூ.15/-

இதழின் உள்ளே....


- விதைப் பஞ்சாயத்து - விதைத் தீர்ப்பாயம்
  தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் உறவினர்கள் வாக்குமூலங்கள்
- இயற்கை மருத்துவர் - நேர்காணல்
- உலகமயமாக்கல் - விளைவுகள்
- தேசம் ஒரு கற்பிதம்
- கண்மாய்கள் மீதான உரிமைகள்
- பழந்தமிழர் பாசன மேலாண்மை


"'பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் வேலை செய்யாமல் சமூக முற்போக்கு எப்படி ஏற்படும்? ஒரு சமூகத்திற்கு பொருளாதாரமும், அரசியலும் அவசியமானதல்லவா? இந்த இரண்டையும் விட்டுவிட்டுச் செய்யும் முற்போக்கிற்காக நமது சுய மரியாதை இயக்கம் தேவையே இல்லை. சும்மா அலங்காரமாக, வேடிக்கையாக புராண முட்டாள் தனத்தையும், பார்ப்பனச் சூழ்ச்சியையும் பேசிக் காலம் கழிப்பது மாத்திரமே சுயமரியாதை இயக்கம் என்றால் அது அழிந்து போவதே மேலான காரியம் என்று சொல்வேன்"

*- தந்தை பெரியார் 31.03.1935*

படிப்பகம்